கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(15.07.2018 - 15 ஆடி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 188, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

# ஞான ஒளி

GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

“ நானே என் மந்தையைத் தேடிச் சென்று பேணிக்காப்பேன் ”




## ஆயர்த்துவ பொன் விழாவில்

# பேராயர் அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை



மூபத்து இரண்டாம் ஆண்டில், மூவெழுத்து நாமம் கொண்ட
மண்ணிலே அவதரித்து, மனித நேயம் கொண்டவராய்
ஈர்பத்து ஆறாம் வயதில் - அர்ப்பணித்தீர்
உம்மையே இறைபணிக்கு
இளம் வயதில் ஆயராகி, துணை ஆயராகப்
பணிபுரிந்தீர் பல்லாண்டு எம் உயர் மறைமாவட்டத்தில்

ஆறு ஆண்டுகள் அனுராதபுர ஆயராகப் பணிபுரிந்து
உயர்மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்க
முன்னாள் ஆயர் நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகையின்
பணிதனை முன்னெடுத்துச் செல்ல பேராயரானீர்.
உயர்மறைமாவட்ட ஆயராக மட்டுமன்றி,
கொழும்பு பல்கலைக்கழக வேந்தராகவும் பணிபுரிந்தீர்
பொன் விழாக் கொண்டாடும் இவ்வேளையில்
வாழ்த்துகின்றோம் வாழிய நீர் பல்லாண்டு

பூவினிலும் நல்லுள்ளம், பொன் போன்ற புன்சிரிப்பு
ஆவின் பால் கறந்தவுடன், அடி நாக்கில் விட்ட சுவை
நாவிலே சொல்லமுதம் - நாற்றிசையும்
போற்றுகின்ற கோமிஸ் ஆண்டகையே!
கோமகனார் கொலுவிருக்கும் சிங்கார நந்தவனமாய்
நற்சுகத்துடன் பணி தொடர வாழ்த்துகின்றோம்
வாழிய நீர் பல்லாண்டு

அருட்சகோதரர். R. ஜோசப் ஜெயகாந்தன்.

## அன்பின் செய்தியை சமூகத்தில் செயல்படுத்துவோம்



கடந்த திங்கட்கிழமை 9ம் திகதி (09.07.2018) ஆயருடனான குருக்களுக்கான கூட்டம் பேராயர் இல்ல கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பேராயர் அவர்கள் கூடியிருந்த குருக்களுக்கு பின்வருமாறு கூறினார்.

ஆண்டவர் இயேசு திருத்தூதர்களை அழைத்ததற்கு காரணம் தன்னோடு நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டு, இறைதந்தையின் திட்டங்களை நிறைவேற்றவே இயேசு திருத்தூதர்களை அழைத்தார்.

நாமும் இறைவனின் திட்டத்தை நிறைவேற்றவே அழைக்கப்பட்டுள்ளோம். எனவே எங்கள் ஒவ்வொருவருடைய அழைப்பானது எங்களை மேன்மைப்படுத்துவதற்கோ, பணம், பதவி, பட்டம், குடும்பத்தில் அதீதமான அக்கறை என்பதற்காக அல்ல, மாறாக இறைவனுடைய சித்தமானது, அவருடைய அன்பின் செய்தியை சமூகத்தில் மனுவுருவெடுப்பதாகும்.

நாம் பெற்ற அழைப்பிற்கேற்ப எமது வாழ்க்கையின் வழியாக சமூகத்திற்கு கடவுளின் சாட்சியாக விளங்குவதற்கே என்று வலியுறுத்தினார்.

## வாழ்த்துகின்றோம்

அதிமேதகு பேராயர் ஆண்டகை தனது குருத்துவ, ஆயர்த்துவ வாழ்வின் விழுமியங்களை நிறைவாக வாழ்ந்தவர். தன்னை அழைத்த கிறிஸ்துவின் உண்மைச் சீடனாக இருந்து தனது வாழ்க்கை பயணத்தில் நல்ல அன்னையாய், தந்தையாய், ஆசானாய், ஆன்மீக வழியாட்டியாய், மறைப்போதகராய், நல்ல குருத்துவ உருவாக்கினராய், எழுத்தாளனாய், பிற மத தோழனாய், ஏழைகள் மீது பாசமாய், நேசமாய் இருந்து எல்லா விதத்திலும் உதவி புரிந்து நல்வழிகாட்டியாக வாழ்ந்து திருச்சபைக்கும் கொழும்பு உயர்மறைமாவட்டத்திற்கும் நற்பணியாற்றி இன்று ஆயர்த்துவ வாழ்வின் 50வது ஆண்டில் கால்பதிக்கும் பேராயர் ஆண்டகையை ஞான ஒளி குடும்பத்தினர் வாழ்த்துவதோடு இன்னும் பல விழாக்கள் காண உடல், உள சுகம் வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## அகில இலங்கை திருவிவிலிய அறிவு, பேச்சு, போட்டிகள் – 2018



தேசிய மறைக்கல்வி நடுநிலையமும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சும் இணைந்து, வருடந்தோறும் நடாத்தும் அகில இலங்கை திருவிவிலிய அறிவு, பேச்சு போட்டிகள் இவ்வருடம் ஆனி மாதம் 30ம் திகதி தூய பேதுரு கல்லூரியில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.30 மணி வரை இடம்பெற்றது.

இத்தகைய போட்டிகள், மாணவர்களின் விவிலிய அறிவு, ஆற்றல், ஆன்மீகம் ஆகியவற்றை வளர்ப்பதற்காகவும், வெற்றி தோல்வியை சமமாக ஏற்று வாழும் மனநிலையை அவர்களில் உருவாக்குவதற்காகவும் நடாத்தப்படுகின்றது...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## மருதமடுமாதா திருத்தலத் திருவிழா







வேதசாட்சிகளின் நிலமாம் மன்னார் மண்ணின் ஆன்மீக வரலாற்றுச் சிறப்பு மிக்க மருதமடுமாதா திருத்தலத் திருவிழா 02.07.2018 திங்கட்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

காலை 06.15 மணிக்கு திருவிழாத் திருப்பலி மன்னார் மறைமாவட்ட...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

### அகில இலங்கை திருவிவிலிய பேச்சுப் போட்டியில் முதலாமிடம்.



அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தினை கொழும்பு மறைமாவட்டம் வெள்ளவத்தை, தூய லோரன்ஸ் ஆலயத்தைச் சேர்ந்த **வலன்ரைன் அமலராஜா ஜரின்கன்** பெற்றுக்கொண்டார். இவரை ஞான ஒளி வாழ்த்துகின்றது.

## தேசிய சுதேச குருக்கள் தினம் - 29.07.2018

“தூய வாழ்வினூடாக சீடத்துவத்திற்கு அழைப்பு”

**ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை (தி.பா 23)**

# அகில இலங்கை திருவிவிலிய அறிவு மற்றும் பேச்சுப் போட்டிகளின் முடிவுகள்- 2018 (தமிழ்ப்பிரிவு)

## திருவிவிலிய அறிவுப் போட்டி

### கீழ்ப்பிரிவு

**1ம் இடம் : மட்டக்களப்பு மறைமாவட்டம். தூய லூர்து ஆலயம், நாவற்குடா**

1. S. கயிஷி கெனிசியா
2. டைடஸ் மேவின் ஹரி
3. எந்தனி சாந்தகுமார் றக்ஷான்
4. புஸ்பராஜா வினுஷன்

**2ம் இடம் காலி மறைமாவட்டம், திரு இருதய ஆலய மறைப்பாடசாலை, அனிக்கந்தை, தெனியாய**

1. N. மெசினா மினோலி
2. N. விதுர்ஷிகா
3. S. சரண்யா
4. K. ரிசிகரன்

**3ம் இடம் மட்டக்களப்பு மறைமாவட்டம், தூய அருளானந்தர் ஆலயம், பெரிய கல்லாறு**

1. J. ஜெராட் ரொசாய்ரோ
2. S. ஜெரொன்
3. K. டிலக்ஷி
4. T. லூட் சாரியா

### மேற்பிரிவு

**1ம் இடம் : இரத்தினபுரி மறைமாவட்டம், தூய மரியாள் ஆலயம், எட்டியாந்தோட்டை**

1. S.A.D சந்தியாகு
2. V. லக்ஷிகா
3. M. அஷானி நொமேசிகா
4. T. ஜேசுகுமார்
5. றொபின் கிறிஸ்டோ போல்

**2ம் இடம் காலி மறைமாவட்டம், திரு இருதய ஆலய மறைப்பாடசாலை, அனிக்கந்தை, தெனியாய**

1. விஜயகுமார் ருவன்குமார்
2. கணேசன் ரோஷினி
3. ராமர் சசிகலா
4. கண்ணன் சர்மிலா தேவி
5. M. சிநேகா

**3ம் இடம் பதுளை மறைமாவட்டம், தூய வனத்து சின்னப்பர் ஆலயம், அப்புத்தளை**

1. தேவநாயகம் யுராஜ்னிக்னி
2. புஸ்பராஜ் கிறிஸ்தவ குமார்
3. ஜோர்ஜ் ஜூலியன்
4. எந்தனி சன்ஜீவனி
5. யோனாஸ் எந்தனி ரொடாய்ரோ

## திருவிவிலிய பேச்சுப் போட்டி

### கீழ்ப்பிரிவு

**1ம் இடம் கொழும்பு மறைமாவட்டம் தூய லோரான்ஸ் ஆலயம், வெள்ளவத்தை**

வெலன்டைன் அமலராஜா,

**2ம் இடம் : யாழ்ப்பாண மறைமாவட்டம் தூய பிரான்சிஸ் சேவியர் ஆலயம், புங்குடுதீவு**

கெனிஸ்டா சிவகுமார்

**3ம் இடம் இரத்தினபுரி மறைமாவட்டம் தூய மரியாள் ஆலயம், எட்டியாந்தோட்டை**

மேவின் என்சி யோசினா

### மேற்பிரிவு

**1ம் இடம் கண்டி மறைமாவட்டம் தூய மரியாள் ஆலயம் தவலந்தென்னை**

செபஸ்தியான் றொஷான்

**2ம் இடம் மன்னார் மறைமாவட்டம் அடைக்கல அன்னை ஆலயம், இலுப்பங்குளம்**

பூஜராஜன் ரீவா

**3ம் இடம் மட்டக்களப்பு மறைமாவட்டம் தூய மரியாள் ஆலயம், புளியந்தீவு**

சினுஜா உதயகுமாரன்.

**அருட்சகோதரி. ரஞ்சி போல்துரை, தேசிய மறைக்கல்வி நடுநிலையம்.**







மயூரா பிரதேச, புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா 01-07-2018 காலை 8.30 மணிக்கு மும்மொழிகளிலும் சிறப்பு திருப்பலி வெகு விமரிசையாக பங்கு குருவானவர் அதி.வண மனோகுமாரன் நாகரத்தினம் அவர்களின் வழிகாட்டலில் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த வண கிஹான் நிலூச பர்னாந்து அவர்களோடு மயூரா பங்கின் உதவி பங்குதந்தை ஜூட் கிரிஷாந்த மற்றும் வெள்ளவத்தை பங்கின் உதவி பங்குதந்தை புத்திக ஜெயமான மற்றும் பௌத்த சமய தலைவர்கள் இந்து மத குருக்கள் மற்றும் பங்கு மக்களின் பங்களிப்போடு வெகு விமரிசையாக நடைபெற்றது.

மாலை திருச்சுருப இறுதி ஆசிர்வாதத்தை பங்குகுருவானவர் அதி.வண மனோகுமாரன் நாகரத்தினம் அவர்கள் வழங்கினார். இதிலும் பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டிருந்தனர் வெள்ளவத்தை சுவர்ண போதி விகாரதிபர் கிரிவந்துடுவ பியானந்த தேரோ அவர்களுடன் விகாரை தேரர்களும் பௌத்த சமய மக்களும் ஒன்றாக சேர்ந்து திருச்சிலுவை ஒன்றை எமது பங்குத்தந்தையிடம் அன்பளிப்பாக கொடுத்தமை விசேட அம்சமாகும்.

**தகவல் : புனித லோரன்ஸ் ஆலய ஊடக பிரிவு மைக்கல் பெர்னாண்டோபுள்ளே**

# மறைக்கல்வி நிலைய இயக்குனர்கள், பணியாளர்கள் ஒன்றுகூடல்



தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடந்தோறும் நடாத்தபடும் மறைக்கல்வி நிலைய இயக்குனர்கள், பணியாளர்களுக்கான ஒன்றுகூடல் இவ்வருடம் ஆனி மாதம் 21ம் திகதியும் நடைப்பெற்றது.

ஆணைக்குழுத் தலைவர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை, உபதலைவர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை, இயக்குனர் அருட்பணி. பியால் ஜானக்க மற்றும் தேசிய மறைமாவட்ட நிலைய பணியாளர்கள் மொத்தம் 65 பேரளவில் பங்கு கொண்டனர்.

21ம் திகதி பகலுணவுக்கு முன்னர் அனைவரும் சமூகமளித்தனர். பகல் உணவைத் தொடர்ந்து பிற்பகல் 3-6 மணிவரை இடையில் இருமுறை 10 நிமிட ஓய்வுடன் செயலமர்வு இடம்பெற்றது.

வளவாளர்களாக அருட்பணி. போல் றொபின்சன், அருட்பணி. லக்ஸ்மன் பீரிஸ் யோ.ச வருகை தந்திருந்தனர். அருட்பணி. போல் றொபின்சன் தமது உரையில் கிறிஸ்தவ தலைமைத்துவமும் ஆன்மீகமும் என்ற தலைப்பில் கிறிஸ்துவையே இலக்காகக் கொண்டு நிலைய பணியாளர்கள் எவ்வாறு திட்டமிட்டு செயற்பட வேண்டும், எத்தகைய மனநிலையை சிந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும், பணியின் போது சந்திக்கின்ற முரண்பாடுகளை எவ்வாறு தீர்க்கலாம், அவர்களுக்கான வரைவிலக்கணம், அவர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள், உண்மைத்துவம், அர்ப்பணிப்பு, ஆகியவற்றை மிக அருமையாக விளக்கியதோடு சிந்திக்கவும் தூண்டினார். அவரது உரை உண்மையிலேயே பங்குகொண்ட அனைவரையும் தம்மைப் பற்றி தமது பணி, பங்களிப்பு பற்றி ஒரு பரிசீலனை செய்ய வழிவகுத்தது.

திருமலை உப்புவெளி மறைக்கல்வி நிலையத்தில் பங்கு கொண்டோர் குழுக்களாக பிரிக்கப்பட்டு தரப்பட்ட தலைப்பிலே தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் பின்னர் அவற்றை அனைவரும் அறிந்து கொள்ளவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இத்தகைய ஒன்றுகூடல்கள் அனைத்து மறைமாவட்ட நிலைய பணியாளர்களும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளவும் அன்புடன் உறவாடவும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

மறுநாள் 22ம் திகதி காலை திருப்பலி, காலை உணவைத் தொடர்ந்து தேசிய மறைக்கல்வி, கல்வி விவிலியப் பணி கூட்டம் மேற்படி ஆணைக்குழுவின் தலைவர் மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையின் தலைமையில் அதன் உபதலைவர், தேசிய இயக்குனர், பொதுநிலை அங்கத்தவர்களின் பங்குபற்றுதலோடு நடைபெற்றது. பல விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

கூட்டம் நிறைவு பெற்றபின் பகலுணவைத் தொடர்ந்து அனைவரும் தமது மறைமாவட்டங்கள், இருப்பிடங்கள் நோக்கிச் சென்றனர்.

**அருட்சகோதரி. ரஞ்சி போல்துரை, தேசிய மறைக்கல்வி நடுநிலையம்.**



வத்தனை வட்டார திருப்பாலத்துவ சபை சிங்கள தமிழ் மாணவர்களுக்கு தேசிய இயக்குனர் அருட்பணி. பெசில் றொஹான் பர்னாந்து அடிகளாரதும் மறைமாவட்ட இயக்குனர் அருட்பணி. குருசன் குமார் பெரேரா அடிகளாரதும் தலைமையின் கீழ் நாயககந்தை புனித காணிக்கை மாதா ஆலயத்தில் 2018.04.31ம் திகதி திருப்பலியியுடன் திருப்பாலத்துவ சபை அங்கத்துவ சின்னம் வழங்கப்பட்டது. இதில் அங்கத்துவ சின்னம் பெற்ற புனித காணிக்கை மாதா ஆலய தமிழ் பிரிவு திருப்பாலத்துவ சபை மாணவர்களையும் ஊக்குவிப்பாளர்களாகிய திருமதி, ஜோன், திருமதி. டயஸ் அவர்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் : திருமதி. ஜோன்.**

# நவநாட்களின் புதிய கண்ணோட்டம்



தெமட்டகொடை புனித அந்தோனியார் பங்கில் ஆனி மாதம் 14ம் திகதி தொடக்கம் 24ம் திகதி வரை புதிய முறையில் நவநாட்கள் நடாத்தப்பட்டது. அந்நவநாட்களானது முன்னைய காலங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டது என்று கூறுவது சாலச்சிறந்தது. முன்பு நவநாள் எனும் போது திருப்பலியில் மறையுரை வேளையில் வேறு குருக்களால் மறையுரைகள் வழங்கப்பட்டது. ஆனால் இவ்வருடத்தில் நவநாட்கள் வேளையில் சில மாற்றங்கள் காணப்பட்டன. தமிழ், சிங்களம் என்ற இருமொழிகளிலும் நற்செய்தி பரிமாற்றங்கள் திருப்பலிக்கு முன்னதாக குருக்களால் வழங்கப்பட்டது. முதல் இரு நாட்களிலும் இறைவார்த்தையே கிறிஸ்தவ வாழ்வின் மையம். வாழ்வை இறைவார்த்தையில் கட்டியெழுப்ப வேண்டும். என்ற மையப் பொருளில் திருகோணமலையிலிருந்து வருகை தந்த அருட்தந்தை சேவியர் ரஜீவன் அடிகளார் தமிழிலும், சிங்கள மொழியில் அருட்பணி. அன்டன் சமன் அடிகளாரும் தம் கருத்துக்களை விவிலியப் பகுதிகளின் ஊடாக முன்மொழிந்தனர். 3ம் நாள் குணமளிக்கும் வழிபாடு அருட்பணி. போல் ரொபின்சன் அடிகளாரால் நடத்தப்பட்டது.

4ம், 5ம் நாள்களில் பங்கு குழுமங்களில் "அன்பியம்" குடும்பங்களை கட்டியெழுப்புவதற்கான முன் ஆயத்த வகுப்பு பாசறைகள் திருப்பலிக்கு முன்னதாக சுமார் ஒன்றரை மணித்தியாலம் அருட்பணி. றொகான் பீரிஸ், அருட்பணி. றெக்ஸ் கொன்சன்ட்டைன் அடிகளார்களினால் தற்கால தொழில்நுட்ப முறையான கல்வியின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. 6ம், 7ம் நாட்களில் சகோதரன் மரியாம்பிள்ளை அவர்களின் முன்மொழி-வினால் அன்பிய செயற்திட்டங்கள் ஏழு முறைகளும் கலந்துரையாடப்பட்டது. அன்பிய விவிலிய குழுக்கள் எவ்வாறு அமரவேண்டும். வட்டமாக இருந்து விவிலிய-த்தை நடுவில் வைத்துஒருவர் தலைமை தாங்கி, அன்பிய குடும்பத்தை வழிநடத்துவார் என சகோதரன் அவர்களார் முன்மொழியப்பட்டது.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
15 ஆடி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# “வீட்டுக்கொரு ஞான ஒளி உங்கள் பத்திரிகையாக”

கொழும்பு வாழ் தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களுக்கென, ஒரேயொரு அதுவும் முதன்முதலாக வெளிவந்த கத்தோலிக்க சஞ்சிகையான “ஞான ஒளி” பல வருடங்களாக வெளிவந்துக் கொண்டிருப்பது நாம் அறிந்ததே. இப்பத்திரிகையானது எமது மறைமாவட்டத்தின் ஏனைய மறைமாவட்டங்களின் மற்றும் உலகளாவிய நிகழ்வுகள், இறையியல் ஆக்கங்கள், சிறந்த கட்டுரைகள், மாணவர்களுக்கான சிறந்த தகவல்கள், புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள் என பல்வேறு நல்லாக்கங்களை சுமந்து வருகின்றன. ஆனால் இப்பத்திரிகையானது எவ்வாறான எத்தகைய சூழ்நிலைகளுக்கு மத்தியில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றது என்பது வாசகர்களாகிய உங்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பது உண்மைதான். ஆனால் வாசகர்களாகிய நீங்கள் அதனை வாங்கி பயன்பெற மறந்துவிடுகின்றீர்களா? அல்லது வாங்குவதற்கு மறுக்கின்றீர்களா? என்பது புரியவில்லை. வீட்டுக்கொரு விவிலியம் வேண்டும் என்பார்கள். இதுபோன்று வீட்டுக்கொரு “ஞான ஒளி” பெற வேண்டும் என்றும் உறுதி எடுங்கள். நீங்கள் அதிலுள்ள விடயங்களை வாசித்து வாழ்வை வளமாக்கி பயன்பெற வேண்டுமென்றும், சிந்தித்து செயற்பட்டால், மேலும் “ஞான ஒளி” வளர்ச்சியடையும் என்றும் நாம் உறுதியாக நம்புகின்றோம். எங்கள் வெற்றி வாசகர்களாகிய உங்கள் கைகளில்தான் தங்கியுள்ளது. வீட்டிற்கு ஒரு பத்திரிகையே போதுமானது. விற்பனை செய்யப்படுவதோ 1847 பத்திரிகைகள் ஆகும். இப்பத்திரிகை மாதத்திற்கு இரண்டு முறை வெளிவருகின்றது. இதற்கான செலவுகள் எவ்வளவு என உங்களுக்குத் தெரியுமா? பணிபுரிவோருக்கு ஊதியங்கள் எங்கிருந்து வழங்கப்படுவது? 20 பக்கங்களைக் கொண்டு காணப்படும் இப்பத்திரிகையில் பல்வேறுபட்ட தரப்பிரனருக்கு பயனளிக்கும் வண்ணம் தகவல்கள் உள்ளடக்கப்படுகின்றன. இத்தகவல்களை சேகரிப்பதற்கு வேலைசெய்வோர் பலவாறு சிரமப்படுகின்றனர். தாள், மை, அச்சிடல் செலவுகள், இதனை விநியோகிப்பதற்கான போக்குவரத்து செலவுகள் என வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். ஆனால் இதன் விலையோ 30 ரூபாய் ஆகும். இவ்வாறான சிரமத்தை எதிர்க்கொண்ட போதிலும், இதற்கான பலன் கிடைக்காமல் போகின்றமை என்பது கவலைக்குரிய விடயமாகின்றது. இவற்றையெல்லாம் கணக்கிட்டு பார்க்கின்றபோது ஒரு மாதத்திற்கு 91,000/= நட்டத்தில்தான் இப்பத்திரிகையானது வெளிவருகின்றது என்பதை மிகக் கவலையோடு அறியத்தருகின்றேன். பாரிய நட்டத்திற்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ள இந்நிலையை மாற்றியமைப்பதற்கும், இந்நட்டத்தினை ஈடு செய்வதற்கும் உங்கள் அனைவரினதும் பங்களிப்பு அவசியமாகும். மேலும் இப்பத்திரிகையில் பிரசுரிப்பதற்கான விளம்பரங்களையும் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதாவது மரண அறிவித்தல்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், திருமண நினைவு நாள் வாழ்த்துக்கள் போன்ற விளம்பரங்கள், அறிவித்தல்கள் வரவேற்கத்தக்கது. இப்பத்திரிகை நிறுத்தப்பட வேண்டுமா? வேண்டாமா? என்பது வாசகர்களாகிய உங்கள் சிந்தனைக்கு விடப்படுகின்றது. இது நிறுத்தப்பட்டால் மீண்டுமாக இப்பத்திரிகையோ அல்லது இன்னுமொரு பத்திரிகையோ வெளிவருவது என்பது கேள்விக்குரியது. கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாது பாதுகாத்துக் கொள்வோம்.

இதில் ஆச்சரியப்படவேண்டிய விடயம் என்னவென்றால் சகோதர மொழியான சிங்கள பேசும் கத்தோலிக்க குடும்பங்கள் வாழும் பங்குகளில் அதிகமாக “ஞான ஒளி” பத்திரிகை விற்பனை செய்யப்பட்டு வருவதுதான். இது எனக்கே ஆச்சரியமாக உள்ளது. இறைமக்கள் திருச்சபை மீது கொண்டுள்ள பற்று இவ்வளவுதானா? என எண்ணத்தோன்றுகின்றது. இறைமக்களாகிய உங்கள் பங்களிப்பும் ஆதரவும் இருந்தால்தான் இப்பத்திரிகை தொடர்ந்து வெளிவரும் என்பதை கூற விரும்புகின்றேன். ஒரு பத்திரிகை புதிதாக வெளிவருவது என்பது மிகவும் கடினமான காரியம். இதனை ஆரம்பிப்பதற்கு நாம் எவ்வளவோ சிரமங்களை சங்கடங்களை தாங்கியும் கடந்தும் வந்துள்ளோம். எமக்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை எமது உரிமையாக்கி இன்னுமாக பத்திரிகையை நாமும் வாங்கி பிறரையும் வாங்கத் தூண்டுவோம். இதுதான் நாம் நமது திருச்சபைக்கு மற்றும் கொழும்பு மறைமாவட்டத்திற்கு செய்யும் சேவைகளில் இதுவும் ஒரு சேவையாக மாறட்டும். இனி “ஞான ஒளி” உங்கள் பத்திரிகையாக வலம் வருமென உறுதியாக நம்புகின்றோம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**



# தூய கார்மேல் அன்னை புனித உத்தரிய மாதா



## (விழா நாள் ஆடி 16)

பரிசுத்த பூமியாம் பாலஸ்தீன நாட்டின் மேற்கு திசையில் மத்தியதரைக் கடலுக்கு அருகாமையில் ஓர் உயர்ந்த மலை இருக்கிறது. இதற்கு கார்மேல் மலை என்பது பெயர். கடற்கரையோரத்தில் இருக்கும் இம்மலையைப் பற்றி விவிலியத்தில் அருமையான வசனங்கள் எழுதப்பட்டுள்ளன.

அதன் அழகிய சிகரம் எபிரேய மொழியில் “தோட்டம்” அல்லது “நடப்பட்ட திராட்சைத் தோட்டம்” என்ற சிறப்பு பெயர் பெற்றிருக்கின்றது. இந்த மலையில் கார்மேல் சபையின் முதல் உறுப்பினர்கள் 12 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை வனவாசிகளாக வாழ்ந்துள்ளனர். தங்களின் துறவு இல்லத்துக்கருகில் ஒரு கோவிலை மரியாவின் பெயரில் கடவுளுக்குக் கட்டினர். அக்கால வழக்கப்படி அக்கோவில் இருந்த இடத்தின் பெயராலேயே மரியாவுக்கு “கார்மேல் அன்னை” என்றும் பெயர் வழங்கலாயிற்று.

இங்கிலாந்து நாட்டின் கேம்பிரிஜில் கார்மேல் மாதா சபையைச் சேர்ந்த ஒரு மடம் இருந்தது. இச்சபையின் தலைவர் புனித சைமன் ஸ்டாக் என்பவர். இவரது காலத்தில் கார்மேல் துறவு சபை பல இடையூறுகளுக்கு உள்ளானது. அச்சமயத்தில் மாதாவின் மேல் அதிக பற்றுதல் கொண்டிருந்த சைமன் மாதாவிடம் தனது சபைக்கு ஏதாவது ஒரு தனிப்பட்ட சலுகையை வழங்குமாறு அன்னைமரியின் அடைக்கலத்தை நாடி, உருக்கமாக செபித்துக் கொண்டிருந்தார். இந்த நல்ல துறவியின் செபத்தைக் கேட்ட அன்னை மரியா 1251ஆம் ஆண்டு, ஆடி மாதம் 16ஆம் திகதி ஒரு கறுத்த ஆரஞ்சு வண்ண உத்தரியத்தை ஒரு கையில் ஏந்திய வண்ணம் அவருக்குக் காட்சி கொடுத்து “மகனே! இந்த உத்தரியம் உங்கள் சபைக்கு உரியது. நான் உங்களுக்கு வழங்கும் சிறப்புச் சலுகையின் அடையாளமிது. இதை அணிந்து கொண்டு இறப்பவர்கள், நித்திய நெருப்பினின்று காப்பாற்றப்படுவார்கள். இது மீட்பின் அடையாளம். ஆபத்தில் காக்கும் கேடயம். அமைதி மற்றும் பாதுகாப்புக்கென சிறப்பாக வழங்கப்படும் உறுதி” என்று கழுத்தில் அணியும் இந்த உத்தரியத்தை அன்னை மரியாவிடமிருந்து பெற்றவர் புனித சைமன் ஸ்டாக். மேலும் 1301ஆம் ஆண்டு உத்தரியமாதா 22ஆம் அருளப்பர் என்ற திருத்தந்தைக்கு தரிசனமாகி “இந்த உத்தரியத்தை அணிந்துள்ள உத்தரிய சபையார் மரித்து, உத்தரிக்கின்ற ஸ்தலத்திற்குப் போயிருந்தால் கூடிய விரைவில் நான் அவர்களை மீட்டுக்கொள்வேன்” என்றார். மேலும் அவர்கள் மரணத்திற்குப் பின்வரும் முதல் சனிக்கிழமைகளில் அவ்விடத்திலிருந்து விடுதலை ஆவார்கள்” என மொழிந்துள்ளார்.

கார்மேல் மாதாவினுடைய பேருதவியை கார்மேல் சபையினர் மட்டுமல்ல, அவரது உத்தரியத்தை அணியும் அனைவரும் பலன் பெறுவார்கள். உத்தரியத்திற்குப் பதிலாக உத்தரிய சுரூபத்தையும் அணியலாம். இந்தப் பக்தியானது மோட்ச இராக்கினியின் ஞானப் பிள்ளைகளாக நாம் வாழ்வதற்கு உதவி புரியும். புனித கன்னி மரியாளைப் பின்பற்றி, அவளைப் போல் பரிசுத்தமாக வாழ்ந்து, நாம் அவருக்குச் சொந்தமானவர் என்று, வெளிப்படையாக உத்தரியத்தை அணிந்து வாழ்ந்துகாட்டுவது பெரும் பாக்கியமாகும். பரிசுத்த உத்தரியத்தை நாமும் அணிந்து தீயோனிடமிருந்து நம்மைக் காத்துக்கொள்வோம்.

**புனித கார்மேல் அன்னை விழா நாள் : ஆடி 16**
**புனித சைமன் ஸ்டாக் விழா நாள்: ஆடி 16**

# உண்மை உறைக்கும்


கமிலஸ்

## இன்றைய நிலை...



இந்த வழியில் செல்லலாம். அது தான் பாதுகாப்பானது.



"நானே என் மந்தையைத் தேடிச் சென்று பேணிக்காப்பேன்"
(எசேக்கியேல் 34:11)

## பேராயர் அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை

# ஆயர்த்துவ வாழ்வில் 50வது வருட பொன்விழா

1932ல் மார்கழி மாதம், வின்சன்ட் கோமிஸ் அவர்களுக்கும் ப்லொரின்டா கோமிஸ் அவர்களுக்கும் மகனாக பிறந்தார். ஆறு பேர் கொண்ட பிள்ளைகளுள் கடைசி மகனாகப் பிறந்த இவருக்கு பெற்றோர்கள், ஒஸ்வல்ட் தோமஸ் கோல்மன் கோமிஸ் எனப் பெயரிட்டனர்.

களனி பிலிபிட்டிய றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையில் கல்வி பயில ஆரம்பித்த இவர், பின்பு கொழும்பு புனித ஜோசப் கல்லூ-ரியிலும் கல்விக்கற்று, பின்பு புனித அலோசியஸ் குருமடத்திற்கு உள்ளானார். பிறகு புனித பெர்னடெத் குருமடத்தில் இறையியல் கற்கை நெறியைத் தொடர்ந்தார். கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் பயிற்சி பெற்ற இவர் 1958 மாசி மாதம் 3ம் திகதி குருத்துவ திருநிலைப்படுத்தப்பட்டார்.

புனித அலோசியஸ் குருமடத்தில் விரிவுரையாளர் குழாமில் பணியாற்றிய (1958-1960) இவர், 1960ல் கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனரானார். 1961 ஆவணி 25ம் திகதி "ஞானார்த்த பிரதீபய" பத்திரிகையின் ஆசிரியராக நியமனம் பெற்றார். 1966 ஞானார்த்த பிரதீபய பத்திரிகையின் நூற்றாண்டு நிறைவு விழா இடம்பெற்ற போது, "சிங்கள இலக்கியத்தின் கத்தோலிக்க சேவை" எனும் பெயரின் புத்தக கண்காட்சியொன்று ஒழுங்கு செய்ததோடு, பொரளை பிரதீபய அச்சகத்தில் இருந்து சிலாபம் தொடக்கமும் மீண்டும் பொரளை பிரதீபய அச்சகம் வரைக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டியொன்றை நடத்தினார். 1966 வைகாசி மாதம் 7ம் திகதி "லமா பிரதீபய" எனும் பத்திரிகையை ஆரம்பித்தார். 1968 ஆடி மாதம் 17ம் திகதி அன்று கொழும்பு மறைமாவட்ட ஆயர் தோமஸ் கர்தினால் குரே ஆண்டகையினால் கொழும்பு மறைமாவட்ட துணை ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டு 30 வருட காலமாக பணியாற்றினார். 1996 தை 15ம் திகதி அநுராதபுர மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டார்.

இவர் பிலிப்பினில் எடம்சன் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்ததோடு, ஆசியாவில் கத்தோலிக்க மற்றும் தொடர்பாடல் பிரிவுகளில் செய்த பணிகளுக்காக விசேட விரிவுரையாளர் பட்டங்களையும் பெற்றுக்-கொண்டார்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையில் செயலாளராக (1968-1975), பின் பிரதான செயலாளராக (1975-1983), மீண்டும் 1989ல் அப்பதவியை வகித்தார். 1968-1983 வரை சமூகத்தொடர்பாடல் கொமிசத்தின் தலைவராகவும், 1972-1976 திருவழிபாடு தொடர்பான தேசிய ஆணைக்குழுவின் தலைவராகவும், 1968-1972 நீதி மற்றும் சமாதானக் குழுவின் தேசிய ஆணைக்குழுவின் தலைவராகவும், தேசிய SODEPAX ஆணைக்குழுவில் தலைவராகவும், கத்தோலிக்க வேதாகம ஆணைக்குழுவில் 1962-1972 வரையும், 1972-1982 வரையும் பணியாற்றினார்.

கல்விதொடர்பான தேசிய கத்தோலிக்க ஆணைக்குழுவின் (1982-1989) தலைவராகவும், 1985-1991 வரை சமூகத்தொடர்பாடல் தொடர்பான தேசிய கத்தோலிக்க ஆணைக்குழுவில் தலைவர் மற்றும் சுற்றுலா, இடம்பெயர்வு சுகாதார, பாதுகாப்பு மற்றும் சிறைச்சாலைத் தொடர்பான தலைவராகவும் பணியாற்றினார்.

1964-1982 வரை திருவிவிலிய மொழிபெயர்ப்பு தொடர்பான தேசிய ஆணைக்குழுவில் உறுப்பினராக இருந்ததோடு, நீதி மற்றும் சமாதானம் தொடர்பான தேசிய ஆணைக்குழுவில் அறிக்கை சமர்ப்பிப்பவராகவும், பணியாற்றினார். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையில் தலைவராக சேவையாற்றினார். தொடர்பாடல் தொடர்பான ஆசிய ஆயர் பேரவை சம்மேளன ஆணைக்குழுவில் தலைவராகவும், செயலாளராகவும், வெரிடாஸ் வானொலியை - புணர் நிர்மானம் செய்யும் / அபிவிருத்தி செய்யும் ஆணைக்குழுவில் தலைவராகவும், PREIC குழுவில் பிறமத ஆணைக்குழுவின், ஆசிய ஆயர் பேரவையில் நீதித்துறைப் பிரிவில், சர்வதேச கத்தோலிக்க சினிமா பிரிவில் (O.C.I.C) இயக்குனர்கள் குழுவில் உறுப்புரிமை வகித்தார்.

2002 ஆடி மாதம் 27ம் திகதி கொழும்பு மறைமாட்ட பேராயராக நியமிக்கப்பட்டார்.

### மக்களுக்காக நல்லாயனாக விளங்கினார்

"தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார். நானே என் மந்தையைத் தேடிச் சென்று பேணிக்காப்பேன்" (எசேக்கியேல் 34:11) எனும் இறைவார்த்தைக்கு இணங்க கீழ்ப்படிந்து இவர் ஓர் நல்லாயனாக திகழ்ந்தார். இவரின் ஆன்மீகம் மற்றும் ஆயர்த்துவ அழைப்பானது, உண்மையிலேயே பிரமிக்கத்தக்கது, ஆழமானது. நல்லாயனின் பிரதான பணியாக இருப்பது இரக்கமாகும். கருணையை வெளிப்ப-டுத்துவதாகும். மேலும் இவர் ஒரு ஆசானாகவும் விளங்குகின்றார்.

### சமாதானத்தின், சகோதரத்துவத்தின் முன்மாதிரியாளராக விளங்கிய ஆயர்...

இவர் கத்தோலிக்க மக்கள் மத்தியில் மாத்திரமல்லாது, பௌத்த மக்கள் மனதிலும் இடம் பிடித்தவராவார். இவர் நாட்டின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் தேசப்பற்றை நன்கு தெரிந்து கொண்ட ஓர் சிறந்த நாட்டுப் பிரஜையாகும்.

இவர் பௌத்தர்களுக்கும் கத்தோலிக்-கர்களுக்கும் இடையிலான நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கான பாலமாக விளங்கினார்.

1983ல் நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சிகரமான நிலையை, சமாதான முறையில் தீர்ப்பதற்காக மதத்தலைவர்கள் ஒன்று சேர்ந்து தீர்வு காண முற்பட்ட சந்தர்ப்பத்தில் இவரது பங்களிப்பானது உயரிய நிலையில் அமைந்திருந்தது. அன்று ஓர் குழுவாக ஒன்று கூடிய, அதி பூஜ்ய வலபொல ராஹுல, சடியே பஞ்ஞாசீஹ, மாபலகம விபுலசார எனும் மதத்தலை-வர்களும், இந்து - கிறிஸ்தவ - இஸ்லாம் மதத்தலைவர்கள் மத்தியில், கிறிஸ்தவர்கள் சார்பில் உயரிய பங்களிப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடப்பட்ட விடயதாகும்.

மேலும் 1990ல் மதங்களுக்கான சமத்துவத்தை வளர்க்க "மதங்களுக்கான சம்மேளனம்" எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டமைப்பினைக் கட்டியெழுப்புவதற்கு முன்னின்று செயற்பட்ட விசேட மதத் தலைவராக இவர் விளங்கினார்.

### கத்தோலிக்க அச்சக உறுப்பினர்களின் வாழ்த்துச் செய்தி

இவரது பணிக்காலத்தில் இவர் பெற்ற அனுபவமானது அளப்பரியது. இவ் அறிவையும் அனுபவங்களையும் தனக்கு மட்டும் மட்டுப்படுத்திக் கொள்ளாமல் நாட்டிற்கும், இச் சமூகத்திற்கும் பலனளிக்கும் வண்ணம் செயல்படுத்தினார் ஆயர் அவர்கள்.

ஒரு குருவானவராக, துணை ஆயராக, அநுராதபுர மறைமாவட்ட ஆயராக, கொழும்பு மறைமாவட்ட பேராயராக இவர் பணியாற்றினார். "ஞானர்த்த பிரதீப்பய" எனும் பத்திரிகையின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றினார். மேலும் எமது கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் தமிழ் பத்திரிகையொன்று இதுவரை வெளியாகாத நிலையில் ஒரு தமிழ் பத்திரிகை உருவாக்குவதற்கு அத்திவாரமிட்டது ஆயர் அவர்களே. இவரின் முதல்கட்ட முயற்சியால் இன்று எமது கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் ஒரு தமிழ் பத்திரிகை உதயமாகி இருக்கிறது என்றால் அதன் பெருமை ஆயரையே சாரும் எனலாம். ஆகவே பேராயர் அவர்களை கத்தோலிக்க அச்சகத்தின் சார்பில் நன்றிகலந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.



# பேராயர் ஆண்டகையின் பணிவாழ்வின் ஒரு கண்ணோட்டம்.

### குருத்துவத்தில் பெற்ற ஆன்மீக குருவுக்கான பணி நியமனங்கள்

- 1958 - 1960 : பொரளை, புனித அலோசியஸ் குருமடத்தில், தனி முறைக் கல்வி கற்கும் ஆசிரியர் மற்றும் பொருளாளர்.
- 1960 - 1961 : இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்.
- 1961 - 1968 : கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனர் மற்றும் ஞானார்த்த பிரதீபய பத்திரிகையின் ஆசிரியர், இலங்கையின் கத்தோலிக்க வராந்த மற்றும் “Duthaya”, எனும் கத்தோலிக்க மாதாந்த பத்திரிகை.
- 1963 - 1965 : துணை ஆயரான என்டனி டீ சேரம் ஆண்டகையின் செயலாளராக இருந்து மேலதிக சேவையாற்றினார்.
- 1965 - 1968 : துணை ஆயரான ப்ரேங்க் மார்க்கஸ் பெர்னாண்டோ அவர்களின் செயலாளராக இருந்து மேலதிக சேவையாற்றல்.
- 1965 - 1968 : நொட்ரே, மெரேஜ். டிரிப்புனால்
- 1965 - 1968 : புத்தகங்களின் முன்தணிக்கை செய்யும் அதிகாரி.
- 1959 - 1964 : ஹெந்தல, தொழுநோய் வைத்தியசாலைக்கான ஆன்மீக குருவாக பணியாற்றல்
- 1964 - 1968 : மேரியன் பெண் மாணவர்களின் விடுதியின் ஆன்மீக குருவாக பணியாற்றல்.
- 1960 - 1968 : தேவத்தை - செபமாலைச்சபை பெண் துறவிகளின் வழக்கமான, பாவமன்னிப்பு கோருவதைக் கேட்பவராக பணியாற்றல்.
- 1963 - 1968 : தேவத்தை - (வறிய) க்லேயா அருட்சகோதரிகளின் மடத்தில் வழக்கமான பாவமன்னிப்பு கோருவதைக் கேட்பவராக பணியாற்றல்.
- 1963 - 1968 : பெர்னாரடா பெண் மாணவர்களின் விடுதியின் ஆன்மீக குருவாக பணியாற்றல்.

### ஆயராகப் பெற்ற நியமனங்கள் - சர்வதேச ரீதியில்

- கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் : 1968 - 1996
- அநுராதபுரத்தின் ஆயர் : 15.01.1996
- கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயர் : 06.07.2002 நியமனம்
- கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயராக 2002.07.27ல் பதவியில் அமர்தல்.
- செயலாளர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை (1968 - 1975)
- பொதுச் செயலாளர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை (1975 - 1983), (1989 - 1995).
- தலைவர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை (1998 - 2005)

✷ கல்வி, கலாச்சாரம், திருவழிபாடு, நீதிமன்ற மற்றும் சமாதான, மறைக்கல்வி, திருவிவிலிய மொழிபெயர்ப்பு, சமூகத் தொடர்பாடல், சுற்றுலா மற்றும் வெளிநாடு செல்லல், சுகாதாரம் மற்றும் சிறைச்சாலை போன்ற பல்வேறுபட்ட துறைகளிலும் கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுவிற்கும் தலைமைத் தாங்கியமை.

✷ கத்தோலிக்க கொடியை அமைத்தவர். (இலங்கைத் திருச்சபை) - 2000

### உயர்மறைமாவட்ட ரீதியில்

- துறவற சபையாகிய மரியாவின் மாசற்ற கன்னியர் சபையை ஸ்தாபித்தல். 2004.
- துறவற அருட்சகோதரிகளை அழைத்தல் - உயர்மறைமாவட்ட பிரான்சிஸ்கன் சபையின் கிறிஸ்து அரசர்.
- துறவற அருட்சகோதரிகளை அழைத்தல் - உயர்மறைமாவட்டத்தில் வயதுபோன மற்றும் நோய்வாய்ப்பட்ட புனித கெமிலஸ் சபை அருட்சகோதரிகளின் சபையை பாதுகாத்தல்.
- அருட்பணியாளர்களை அழைத்தல் - OFM - 2006

### சர்வதேச ரீதியில்

- தலைமைதாங்கியவர் - FABC குழு, சமூகத்தொடர்பாடல் (1971 - 1982)
- உறுப்பினர், இயக்குனர்கள் குழு (PREIC) வானொலி, பிலிப்பைன்ஸ்
- உறுப்பினர், பாப்பிறை ஆணைக்குழு - கத்தோலிக்கமல்லாத மதங்கள், உரோமை
- உறுப்பினர், இயக்குனர்கள் குழு, சர்வதேச கத்தோலிக்க திரைப்பட ஒழுங்கமைப்பு (OCIC) (இப்பதவிக்கு ஆசியாவில் தெரிவுசெய்யப்பட்ட முதல் உறுப்பினர்)
- சமூகத் தொடர்பாடல் (பாப்பிறை ஆணைக்குழுவின்) நியமிக்கப்பட்டு, பர்மாவில் இருந்து திருத்தந்தை 6ம் பவுலுக்கு சமூகத் தொடர்பாடல் சம்பந்தமான அறிக்கை சமர்ப்பித்தல்.
- உறுப்பினர், செயற்பாட்டுக் குழு FABC (Hong Kong)
- உறுப்பினர், மத்தியக் குழு - FABC (Hong Kong)
- உறுப்பினர் (ரோயல் அசியாடிக் சமூக)
- உறுப்பினர், சர்வதேச கத்தோலிக்க ஆணைக்குழு - வெளிநாட்டு இடம்பெயர்வு - இயக்குனர் - (ICMC 1993 - 1999)
- பொதுச்செயலாளர் FABC (1996 - 2000)
- மீண்டும் தெரிவுசெய்யப்படல், பொதுச் செயலாளர் - FABC (2000-2004)
- திருத்தந்தை 2ம் அருளப்பர், சின்னப்பர் 2005.09.08ல் சமயக் குருக்களின் உயர்மன்ற தந்தையாக நியமிக்கப்படல்.
- உறுப்பினர், சமய குருக்களின் உயர்மன்ற ஆயர், உரோமை 2001.
- இலங்கை வருகை ஆசிய சமய குருக்களின் உயர் மன்றம் உரோமை - 1998.
- 11வது சமயக்குருக்களின் உயர்மன்ற கூட்டத்தில் உரோமையில் பங்கேற்றல் (2006, ஐப்பசி மாதம் 2-23ம் திகதி வரை)

### கல்வி நடவடிக்கைகளுக்கான பங்களிப்பு

- நிறுவுவர் : புனித பேதுரு கல்லூரி, கம்பஹா கிளை
- நிறுவுவர் : புனித பேதுரு கல்லூரி, உடுகம்பொல கிளை
- நிறுவுவர் : திருச்சிலுவை கல்லூரி, பயாகலை கிளை
- நிறுவுவர் : புனித சூசையப்பர் கல்லூரி, எந்தேரமுல்லை, வத்தளை
- நிறுவுவர் : புனித சூசையப்பர் கல்லூரி, கடோல்கலே, நீர்கொழும்பு
- நிறுவுவர் : லொயலா கிளைக் கல்லூரி, போபிட்டிய கிளை
- நிறுவுவர் : கிறிஸ்து அரசர் கல்லூரி, வெலிவேரிய கிளை
- நிறுவுவர் : புனித யூட் கல்லூரி, குரண, நீர்கொழும்பு
- நிறுவுவர் : மாரிஸ்டெலா கல்லூரி, போலவளானை கிளை
- நிறுவுவர் : புனித நிக்கலஸ் சர்வதேச கல்லூரி, நீர்கொழும்பு
- நிறுவுவர் : நம்பிக்கையின் பாடசாலை, பயாகலை
- நிறுவுவர் : வெற்றியின் அன்னை, வில்லோரவத்த கிளை
- நிறுவுவர் : டொன் பொஸ்கோ தொழில்நுட்ப கல்வியகம், நொச்சியாகம
- நிறுவுவர் : புனித தோமையார் கத்தோலிக்க சர்வதேச பாடசாலை, சீதுவ
- நிறுவுவர் : புனித அக்குவைனாஸ் சர்வதேச கல்லூரி, கிளை வாதுவை
- இணை நிறுவுவர் : புனித நிக்கலஸ் சர்வதேச கல்லூரி, கொழும்பு

✷ உயர்கல்வி மாணவர்களுக்காக பிரதீபய புலமைப்பரிசில் நிதித் திட்டத்தை ஆரம்பித்தல்.

✷ 2004ல் சுனாமியில் பாதிக்கப்பட்டவர்களை துன்பத்திலிருந்து மீட்க மற்றும் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கான திட்டங்களை ஆரம்பித்தல்.

✷ சுனாமியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுத்தல் மற்றும் வாழ்க்கைத் தொழில் தேவையைப் பூர்த்தி செய்தல்.

✷ பிள்ளைகளுக்கு பாடசாலைகளைக் கட்டிக்கொடுத்தல்.

✷ சுனாமியால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் திட்டங்களை ஆரம்பித்தல்.

✷ நிவாரணச் செயற்பாடுகளை வன்னியிலும், வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்காகவும் மேற்கொள்ளல்.

✷ “பேராயரின் புலமைப்பரிசில் திட்டம்” - 2009 ஆரம்பித்தல்.

✷ களனியிலுள்ள மக்களுக்கு வைத்திய மருந்தக நடுநிலையத்தை நன்கொடையாக வழங்கல்.

✷ புனித அன்னம்மாள் முதியோர் இல்லத்தை (ஆதரவற்றோர்களுக்கு) கட்டுவதற்காக களனியில் 14 ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்க முன்மொழிந்தமை.

✷ களனியில் 3 ஏக்கர் நிலத்தினை புனித அன்னம்மாள் ஆலயத்திற்கும், கன்னியர் மடத்திற்கும் மற்றும் கல்வி நிடுநிலையத்திற்கும் நன்கொடையாக வழங்கல்.

✷ வீடமைப்பு வேலைத்திட்டமொன்றை, களனியில் கால்பொரளை எனுமிடத்திலுள்ள வறியவர்களுக்காக உருவாக்கி செயற்படுத்தல்.

### சமுதாய / நாகரீகமான நியமனங்கள்

- உறுப்பினர் பல்கலைக்கழக ஆணைக்குழு - கொழும்பு பல்கலைக்கழகம் (1977 - 1998)
- வேந்தர், கொழும்பு பல்கலைக்கழகம் (2001 - திகதி வரை)
- அங்கத்தவர் பல்கலைக்கழக சட்டமன்ற குழு, கொழும்பு பல்கலைக்கழகம் (1977 - 2001)
- அங்கத்தவர், கிறிஸ்தவ சமுதாய குழுவினை பதவி அமர்த்தல், களனி பல்கலைக்கழகம்.
- கத்தோலிக்க நிருபர் (பத்திரிகைகளுக்கு செய்திகள் கொடுப்பவர்) தேசிய அச்சக ஆணைக்குழு
- தலைமை தாங்குபவர், றோமன் கத்தோலிக்க சமய அலுவலர்கள் குழாமின் ஆலோசகக் குழுவின் அங்கத்தவர் (1968 - 1977)
- விசாரணைக் குழுவின் அங்கத்தவர், Illicit முக்கியமான தகவல் அச்சு வேலை (1964)
- உறுப்பினர், சுற்றுலாத்துறையின் கலாச்சார நிகழ்வுகள் பற்றிய தாக்கங்களின் அறிக்கை சமர்ப்பிக்கும் குழு (கலாச்சார தொடர்புகள் அமைச்சு - 1980)
- கிறிஸ்தவ விவகாரங்கள் தொடர்பான அனைத்து சம்மேளனங்களுக்கும் தலைமை தாங்கியமை (மனித இன ஆய்வுக்குரிய பரப்பு) 1984
- தலைமை தாங்கியவர் கத்தோலிக்க ஆலோசனைக்குழு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
- உறுப்பினர், கத்தோலிக்க ஆலோசனைக் குழு ரூபவாஹினி கூட்டுத்தாபனம்
- உறுப்பினர் ஆலோசனைக்குழு - ITN
- உறுப்பினர், யாழ்ப்பாண நூலகத்தை முன்பிருந்த நிலைக்கு கொண்டு வருவதற்கான தேசிய ஆணைக்குழு மற்றும் இலங்கையின் பொது நூலகம் (வெளிநாட்டு விவகார அமைச்சு)
- உறுப்பினர், கல்வித் திணைக்களத்தின், ஆலோசனைக்குழு உறுப்பினர்

தொடர்ச்சி 13ம் பக்கம்..

# பிள்ளைகளுக்குச் செபிக்கக் கற்றுக்கொடுப்போம்.



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

157



''நாம் எமது வாழ்வில் செபிக்க வேண்டும். அதை எமது பிள்ளைகள் காண வேண்டும்.''

செபம் என்பது என்ன? என்று எமது பிள்ளைகள் எம்மிடம் கேட்டால் என்ன சொல்லப்போகிறோம். செபம் என்பது ஓர் அனுபவம். இறைவனின் அன்பை அனுபவிக்கும் மகத்தான அனுபவம். இறைவனை எமது அறிவில் அறிவது மட்டுமல்ல எமது உணர்வுகளில் அனுபவிக்கும் ஓர் அனுபவம்.

எப்போதும் செபிப்பது இறைதந்தைக்கே. இறை தந்தையிடமே செபிக்க வேண்டும். முதலில் இறை தந்தையைப் போற்றிப்புகழ வேண்டும். அவரது நல்ல குணங்களைச் சொல்லிப் புகழ வேண்டும். உதாரணமாக அப்பா தந்தையே நீர் நல்லவர், வல்லவர், வாக்கு மாறாதவர், என்னைப் படைத்தவர், உம்மைப்போல் பாவங்களை மன்னிக்க வேறு தெய்வங்கள் உண்டோ! உள்ளங்கைகளில் என்னைப் பொறித்து வைத்திருப்பவரே உம்மைப் போற்றுகிறேன்....

அடுத்தது நன்றி கூறுவது. எமக்குச் செய்த எல்லா நன்மைகளையும் சொல்லிச் சொல்லி நன்றி கூறவேண்டும்.

இறுதியில் வேண்டுதல்கள் கேட்பது. எமது தேவைகளை இறைவனுக்குச் சொல்வது. அதாவது இறுதியாக இவற்றை எமது ஆண்டவரும் உமது குமாரனுமாகிய இயேசுக்கிறிஸ்துவின் பெயரால் செபிக்கிறோம் என செபத்தை முடிக்க வேண்டும்.

இங்கே செபிப்பது இறைதந்தைக்கு என்பதும் இயேசுவின் பெயராலே கேட்க வேண்டும் என்பதும் இப்போது எமக்குப் புரிந்திருக்கும்.

செபத்திலே பல வகைகள் உள்ளன. தனிமையில் செபிக்கும்போது அதைத் தனிச் செபம் என்று கூறலாம். குடும்பமாகச் செபிக்கும் போது குடும்பச் செபம் எனலாம். குழுவாகச் செபிக்கும் போது அதைக் குழுச் செபம் அல்லது பொதுச் செபம் எனலாம்.

நாம் புத்தகத்தில் உள்ளதைப் பார்த்தும் செபிக்கலாம். அல்லது தூய ஆவியின் உந்துதலில் கண்களை மூடித் தாமாகவே செபிக்கலாம். இவற்றை எமது பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

இன்று எமது பிள்ளைகளுக்குச் செபம் வெறுப்பது ஏன்? நாம் செபிக்கும் முறைகளில் எமது உணர்வுகளில் இறைவனின் அன்பை விடுதலையை அனுபவிப்பதில்லை. பிள்ளைகளைப் பயப்படுத்தி ஏதோ கடமைக்காகச் செபிக்கும் போது பிள்ளைகளுக்கு வெறுப்பு ஏற்படும்.

பிள்ளைகளே எம்மைப் படைத்த இறை தந்தை மிகவும் நல்லவர். எமது குறைகளை மன்னிக்க ஆவலுடன் இருப்பவர். அவரோடு உரையாடுவோம். அவரது அன்பை அனுபவிப்போம். அவரிடம் எமது கவலைகள் துன்பங்களைக் கூறுவோம். எமது தேவைகளை அவரிடம் கூறுவோம். அவர் கட்டாயம் செவிசாய்ப்பார். நாம் கேட்பது இறைவனுக்கு விருப்பமாயிருந்தால் கட்டாயம் தருவார். வாருங்கள் செபிப்போம் என்று அன்புடன் கூறினால் பிள்ளைகள் குடும்பச் செபத்தில் ஆர்வத்தோடு ஈடுபடுவர்.

தனிமையில் செபிப்பது எப்படி என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்போம். முதலில் ஓர் இடத்தில் அமைதியாக அமர்ந்து கண்களை மூடி எமது மனதை அமைதியாக்கலாம். அதன் பின் ஐந்து விரல்களையும் நினைத்துச் செபிக்கலாம். பெருவிரலை நினைத்து எமது குடும்பத்தில் உள்ளவர்களுக்காகச் செபிக்கலாம். சுட்டு விரலை நினைத்து எமக்குப் பிடிக்காதவர்களை மன்னித்து அவர்களுக்காகச் செபிக்கலாம். நடுவிரலை நினைத்து எல்லா மதத்தலைவர், அரசியல் தலைவர்கள் பொறுப்பெடுப்பவர்களுக்காகச் செபிக்கலாம். மோதிர விரலை ஞாபகப்படுத்தி எமது உறவினர் நண்பர்கள் ஒன்றாக வேலை செய்பவர்கள் ஒன்றாகக் கற்பவர்கள் எல்லோருக்காகவும் செபிக்கலாம். சின்ன விரலை ஞாபகப்படுத்தி ஏழைகள் வயோதிபர் நோயில் வாடுபவர்கள் சிறைக் கைதிகள் அகதிகள் அனாதைகளுக்காகச் செபிக்கலாம்.


அதன் பின் வேதாகமத்தில் ஒரு பகுதியை வாசித்து இறைவன் இதன் மூலமாக எனக்கு என்ன சொல்கிறார். என்னிடம் எதை எதிர்பார்க்கிறார். எனக்கு என்ன வாக்குறுதி தருகிறார் என்று சிறிது நேரம் சிந்திக்கலாம். இறுதியாக இறைவனுக்கு நன்றி கூறிச் செபத்தை முடிக்கலாம்.

இப்படி எமது பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்து அவர்களை ஊக்கப்படுத்தினால் அவர்கள் செபிப்பார்கள். முதலில் நாம் எமது வாழ்வில் செபிக்க வேண்டும். அதை எமது பிள்ளைகள் காண வேண்டும் என்பதை மனதில் கொள்வோம்.

தொடரும்

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.

# திருப்பலியின் அடிப்படை திருவிவிலியமே



பல அடிப்படைவாதக் குழுக்கள் இறைமக்களிடம் கூறும் ஒரு ஸ்திரமற்ற விடயம் என்னவென்றால் "திருப்பலியானது ஒரு வெறுப்பூட்டக்கூடிய செயல், இது திருவிவிலியத்தை அடிப்படையாக கொள்ளவில்லை" என்பதாகும். இக்கூற்று முற்றிலும் தவறானது. எதிர்க்கக்கூடியது. எனவே கத்தோலிக்கர்களாகிய நாம் இது தொடர்பில் விழிப்பாயிருக்க வேண்டும். திருப்பலி - திருவழிபாட்டின் ஊற்றும், உச்சியும். இத்திருப்பலி முழுமையாக திருவிவிலியத்தை அடிப்படையாக கொண்டது. இதோ அதற்கான ஆதாரங்கள். இதனை நன்கு மனதில் இருத்திக் கொள்வோம். திருவிவிலியத்தை முழுமையாக, அடிப்படையாக கொண்ட திருப்பலியில் உண்மையாக வார்த்தையின் பிரசன்னத்தை உணர்ந்து கொள்வோம்.

### 1. தொடக்க வழிபாடு

குரு : பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே (மத் 28:9)

எல் : ஆமென் (1 குறிப் 16:36)

### குருவின் வாழ்த்து

- நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியின் ஒன்றிப்பும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக (2 கொரி 13:13)
- ஆண்டவர் உங்களோடு இருப்பாராக (ரூத் 2:4)

### பாவமன்னிப்பு

- எல்லாம் வல்ல இறைவனிடமும், சகோதரர்களே உங்களிடமும் நான் பாவியென்று ஏற்றுக்கொள்கின்றேன். (யாக் 5:16) ஏனெனில் என் சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் (உரோ 12:16, யாக் 3:6) கடமையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன். என் பாவமே! என் பாவமே என் பெரிய பாவமே (யாக் 4:17) ஆகையால் எப்பொழுதும் பரிசுத்த கன்னிமரியாயிடமும், வானதூதர் புனிதர் அனைவரிடமும், சகோதரரே உங்களிடமும் நம் தேவனாகிய ஆண்டவரிடம் எனக்காக வேண்டிக் கொள்ள மன்றாடுகின்றேன் (1 கொரி 5:25)

குரு : எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம் வைத்து நம் பாவங்களை மன்னித்து நம்மை நித்திய வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. (1 யோவா 1:9)

குரு : ஆண்டவரே இரக்கமாயிரும், கிறிஸ்துவே இரக்கமாயிரும் (தோபித்து 8:4, 1 தீமொ 1:2)

### வானவர் கீதம் (லூக் 2:13–14)

### 2. நற்கருணை வழிபாடு

குரு : ஆண்டவரே அனைத்துலகின் இறைவா.... இது எங்களுக்கு வாழ்வளிக்கும் அப்பமாக மாறும் (யோவ 6:35)
ஆண்டவரே அனைத்துலகின் இறைவா... இது எங்களுக்கு ஆன்ம பானமாக மாறுவனவாக. (லூக் 22:17-18)

எல் : இறைவன் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக. (தி. பா 68:35)

குரு : சகோதரரே சாம் அனைவரும் ஒப்புக்கொடுக்கும் இத்திருப்பலி எல்லாம் வல்ல இறைவனுக்கு ஏற்றதாகும்படி செபியுங்கள் (எபி 12:28)

எல் : நம்மாண்டவர் தம் திருப்பெயரின் புகழ்ச்சிக்காகவும், நமது நன்மைக்காகவும், தமது பரிசுத்த திருச்சபையின் அனைத்து நலன்களுக்காகவும் உமது கையினின்று இப்பலியை ஏற்றுக்கொள்வாராக (தி.பா 50:23)

### 3. நற்கருணை செபம்

குரு : இதயங்களை ஆண்டவரிடம் எழுப்புங்கள் (புலம் 3:41)

குரு : நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம் (கொலோ 1:3)

மக் : தூயவர்.... (எசா 6:3)

குரு : இவர் வழியாக இவரோடு இவரில்... (உரோ 11:36)

### பரலோக மந்திரம் மத் 6:9–13

குரு : ஆண்டவரே தீமையனைத்திலிருந்தும் எங்களை விடுவித்து.... (யோவா17:15)

குரு : ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே அமைதியை உங்களுக்கு... (யோவா 14:27)

குரு : ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் சமாதானம் உங்களோடு இருப்பதாக... (யோவா 20:19)

### 4. நற்கருணை பகிர்வு

குரு : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறி எங்கள் மேல் இரக்கமாயிரும் (யோவா 1:29)

### 5. நற்கருணை

குரு : இவரே உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறி. இவருடைய விருந்துக்கு அழைக்கப் பெற்றோர் பேறுபெற்றோர். (தி.வெ 19:19)

மக் : ஆண்டவரே நீர் என் இல்லத்திற்கு எழுந்தருள நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும். எனது ஆன்மா குணமடையும் (மத் 8:8)

### 6. இறுதி ஆசீர்

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக. (ரூத் 2:4)

மக் : உம்மோடும் இருப்பாராக.

15



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

### பொதுக்காலத்தின் 15வது ஞாயிறு (15.07.2018)

**பேதுரு**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 15வது வாரத்தில் கால்பதிக்கும் அன்பின் திருக்குலமான இறைமக்களே! கடவுளை நாம் தேடி அலையவில்லை. மாறாக அவரே நம்மை தேடி வந்தார். அதுதான் அவரின் அன்பு. ஆனால் தேடி வந்த இறையன்பை நாம் ஏற்றுக்கொண்டோமா? என்று சிந்திக்க இன்று நாம் அழைக்கப்படுகின்றோம். இறைவாக்கினரின் செய்தியை புறக்கணித்த செல்வந்தர்கள், ஆணவம் பிடித்த ஆட்சியாளர்கள், மக்களை ஒடுக்கியவர்கள் அனைவரும் சபிக்கப்படுவதை முதல் வாசகத்தில் பார்க்கின்றோம். இவ்வுலகில் நிலையற்றவை மீதுள்ள ஆர்வத்தால், ஆசையால் நாம் தேடிவந்த தெய்வ-த்தை ஏற்க மறுக்கின்றோம். சீடர்கள் வழியாக எம்மை அழைக்கும் இயேசுவின் குரலுக்கு நாம் செவிசாய்த்தால் என்ன கிடைக்கும் என்பதை தூய பவுல் அடியார் விளக்குகின்றார். நாம் நமது வாழ்வில் வழி தவறி, நெறி தவறி செல்லும்போதெல்லாம் இறைவன் இன்றைய இறைவாக்கினராக திருப்பணி-யாளர்கள் மூலம் தமது வார்த்தையை நமக்கு அள்ளித்தருகின்றார் இறைவார்த்தைப் பணியில் நாமும் ஊக்கமுடன் செயல்பட அழைப்பும் விடுக்கின்றார். எனவே இறைவார்த்தையை ஏற்று இறைவனின் பிள்ளைகளாக வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : ஆமோ 7:12–15**

என் மக்களாகிய இஸ்ராயேலிடம் சென்று இறைவாக்கு உரைத்திடு

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவரே உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும்.

**இரண்டாம் வாசகம் : எபேசி 1:3–14**

உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா! கடவுளுடைய அழைப்பு உங்களுக்கு எத்தகைய எதிர்நோக்கைத் தந்துள்ளது என்று நீங்கள் அறியுமாறு உங்கள் அகக் கண்கள் ஒளியூட்டப் பெறுவனவாக அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மாற் 6:7–13**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கிறிஸ்து இயேசுவை பின் தொடரும் அனைத்து மக்களையும் விசுவாசத்தின் மக்களாக வழிநடத்தும் திருஅவையையும், அதன் தலைவரான திருத்தந்தை-யையும், அவருடன் இணைந்து செயலாற்றும் ஆயர்கள், குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரையும் ஆசீர்வதித்து விசுவாசத்தில் நிலைத்திட வரமருள வேண்டுமென்று...

நாட்டின் தலைவர்களும் பொறுப்பில் இருப்ப-வர்களும் சமாதானம், சமத்துவம், சமவாய்ப்பு என்ற அடிப்படையில் மக்கள் அனைவரையும் வழிநடத்-தவும் தீய ஆவியின் உருவில் வரும் சூழ்ச்சிகளையும், சோதனைகளையும் இனம்கண்டு அவற்றை அகற்றிடவும், உண்மை, நீதி வழிநின்று சேவையாற்றிடவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இறைவன் மேல் முழு நம்பிக்கை இல்லாமல், அவரின் துணை இல்லாமல் மனித நம்பிக்கையோடு நமது வாழ்வை அமைத்தால் அது நிலைக்காது, குறுக்கு வழியில் முன்னேற நினைத்தால் நிம்மதியான வாழ்வு அமைதியான மனம் இருக்காது இதை உணர்ந்தவர்களாக இறைவன் மீது முழு நம்பிக்கை கொண்டு வாழ வரமருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் 16வது ஞாயிறு (22.07.2018)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 16வது வாரத்தின் தொடக்க நாளிலே இறைவனுக்கு அன்புப் பலி செலுத்த ஒன்று கூடி வந்திருக்கும் இறைமக்களே! இறைமகன் இயேசு தந்தையாம் இறைவன் மீது அன்பு கொண்டிருந்தார். அவ்வாறே இறைமக்கள் மீதும் அன்பு கொண்டிருந்தார் என்பதை நற்செய்தியில் பல இடங்களில் நாம் பார்க்கின்றோம். இன்றைய நற்செய்தியாளர் மாற்கு இயேசுவின் அன்பை பரிவு என்ற சொல்லால் மிகவும் ஆழமாக விளங்குகின்றார் பரிவு என்ற சொல்லிற்கு பரிவிரக்கம், பரிதாபம் போன்ற அர்த்தங்களும் உண்டு. இரக்கமும் அன்பும் உடையவர்தான் நம் இயேசு. மக்கள் மீது பரிவு கொண்டது போல் தம் சீடர்கள் மீதும் பரிவு கொள்கின்றார். ஓய்வு என்பது மனிதருக்கு அவசியமான ஒன்று எனவே தான் நீங்களும் சென்று சற்று ஓய்வெடுங்கள் என்று தம் சீடர்களுக்கு கூறுகின்றார். நாமும் நமது அருட்பணியாளர்களை பரிவு கொண்டு நோக்க வேண்டும். பணி செய்ய வந்தவர்களாயினும் அவர்களும் மனிதர்களே. இந்த உணர்வோடு வாழ இறையருள் வேண்டி பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : எரே 23:1–6**

ஆடுகளை கூட்டிச் சேர்த்து அவற்றைப் பேணிக்காக்க நான் ஆயர்களை நியமிப்பேன்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவரே என் ஆயர், எனக்கேதும் குறையில்லை.

**இரண்டாம் வாசகம் : எபே 2:13–18**

இயேசுவே நமக்கு அமைதி அருள்வார்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும் அவையும் என்னைப் பின் தொடர்கின்றன அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மாற் 6:30–34**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

ஒரு நல்ல தலைமைத்துவ கட்டமைப்பைக் கொண்டு நல்ல ஆயனாம் இயேசுவின் வழியில் திரு-அவையை வழிநடத்தும் திருத்தந்தைக்கும், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையிரான இறைமக்கள் அனைவருக்கும் வேண்டிய அருள் வரங்ளைத் தந்தருள வேண்டுமென்று...

நாட்டையும் மக்களையும் நேசிக்கும் அனை-வரும் இயேசுவைப் போல் முழுமையான அன்பை தாராளமாய் கொடுக்கவும் இயேசுவை அன்பு செய்யவும் அவரைப் போல் அடுத்தவரை அன்பு செய்யவும் எல்லோர் மத்தியிலும் நல்ல அன்புறவை ஏற்படுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டிய வரத்தை தந்தருள வேண்டுமென்று...

ஓய்வின்றி உழைத்துப் பொருளீட்டுவதால் மட்டும் மகிழ்ச்சி வந்துவிடாது உழைப்பிற்கேற்ற ஊதியம் போல் களைப்பிற்கேற்ற ஓய்வும் அவசியம். நமது ஓய்வு நேரங்களில் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து செபிப்பதன் வழியாக ஞானம் பெற்றவர்களாக மகிழ்ச்சியுடன் வாழலாம் என்பதை நாங்கள் உணர்ந்து வாழ வரமருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் 17வது ஞாயிறு தேசிய குருக்கள் தினம். (29.07.2018)

**வாசக விளக்கம்:** திருப்பலியும் ஓர் புதுமை மிகு அப்பம் பலுகுதல் தான் இயேசு அன்று உணவை தந்து உயிரளித்தார். இன்று திருப்பலியில் தன் உயிரையே உணவாகத் தருகின்றார். பொதுக்காலத்தின் 17வது ஞாயிறு வாரத்தை ஆரம்பிக்கும் இறைமக்களே! மனித வாழ்க்கையில் தேடலும் தேர்வும் மிக அவசியமானது. தேர்வின் மூலமே எமது தகுதி தராதரம் வெளிப்படுகின்றது. எமது குறை நிறை அறிந்து நாம் எம்மை தயாரிக்கின்றோம். இதைப் போன்றே தேடலும் நமக்கு முக்கியமாகின்றது. இன்றைய நற்செய்தியில் தேடல் மிக்க ஒரு மனிதராக திருத்தூதர் அந்திரேயா விளங்குகின்றார். ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கூட்டத்தில் ஒரு சிறுவனிடம் அப்பமும் மீனும் இருப்பதைக் கண்டு தெரிவிக்கின்றார். திருப்பலியில் திருவிருந்தில் நாம் பங்குகொள்ளும் போது அது நமக்கு ஒற்றுமை உணர்வைத் தருகின்றது. நாம் ஒன்றுபட்டு வாழ்ந்தால் சமூகத்தில் பசி, பட்டினி, வறுமை, துன்பம் என்பன இருக்காது. அவற்றை மனதில் கொண்டவர்களாக பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : 2 அரசர் 4:42–44**

இம்மக்கள் உண்ட பின்னும் மீதி இருக்கும்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவரே எல்லா உயிரினங்களின் விருப்பத்தையும் நிறைவேற்றுகின்றீர்.

**இரண்டாம் வாசகம் : எபே 4:1–6**

ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல உடலும் ஒன்றே ஆண்டவரும் ஒருவரே திருமுழுக்கும் ஒன்றே.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியிருக்கிறார் கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவா 6:1–15**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவைப் போல் மக்கள் மீது பரிவுகொண்டு மக்கள் நல பணிகளை மேற்கொண்டு வரும் திருஅவை-யினராகிய திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், இறைமக்கள் ஆகிய அனைவரது பணிகளையும், சேவைகளையும் ஆசீர்வதித்து வழிநடத்தியருள வேண்டுமென்று...

எமது நாட்டில் வாழும் ஏழை எளியவர், நோயாளிகள், அங்கம் இழந்தவர்கள், யுத்த காலத்தில் பாதிக்கப்பட்டவர்கள், இல்லிடமற்றவர்கள், சமூக அவலங்களில் சிக்குண்டவர்கள் ஆகிய அனைவர் மீதும் பரிவிரக்கம் கொண்டு நம்மால் இயன்ற உதவிகள் புரிந்து வாழத் தேவையான அருள் வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இறைவா நாம் வாழ உம்மைத் தந்தாய் திருப்பலியில் பிறர்வாழ எம்மைத் தருவோம் வாழ்க்கைப் பலியில் ஏற்றவாறு நாம் வாழவும், மனித வாழ்க்கையில் இறைவன் நுழையும்போது அனைத்தும் நிறைவாகின்றது என்பதை நாம் உணரவும், ஏழைச் சிறுவனின் தாராள மனதை கொண்டவர்களாக நாம் வாழவும் வரமருள வேண்டுமென்று...

**சிந்திக்க....**

**நம் வசதியைப் பெருக்கிக் கொள்ள முயலும்போதே வசதியற்றவர்களையும் கொஞ்சம் கைதூக்கிவிட முடியாதா?**

## இப்படியும் ஓர் உறவு

பணக்காரர்களை வெறுப்பவர்கள் ஏராளம்! ஆனால் பணத்தை வெறுப்பவர்கள் எத்தனை பேர்!

என்நண்பர் ஒருவர் அடிக்கடி பொதுவுடைமையைப் பற்றிப் பேசுவார். ஆனால் தன் அலுவலகப் பணியைவிட ரியல் எஸ்டேட் பணியில் அதிகம் அக்கறை காட்டுவார். கேட்டால், “முதலில் ஒரு கோடி ரூபாய் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்! அப்புறம் பொதுமக்களுக்கு உதவவேண்டும்” என்கிறார்.

பணக்காரர்களை நாம் வெறுக்க பல காரணங்-கள் இருக்கலாம். அவற்றில் நமது இயலாமையும், பொறாமையும் கூட அடக்கம்தானே! ஆனால், பொதுவாகப் பணக்காரர்கள் ஏழைகளிடம் அக்கறை காட்டுவதில்லை என்பது மறுக்க முடியாத அடிப்படை காரணம்.

இந்த நிலையை மாற்ற முடியுமா? பணக்காரர்கள் ஏழைகள் மீது அக்கறை காட்ட முடியுமா? ஏழைகள் பணக்காரர்களின் அரவணைப்பில் வளர முடியாதா? இப்படி ஓர் உறவு வளர வாய்ப்பு இருக்கிறதா? ஏன் முடியாது?

மேல்நிலைப் பாடசாலையில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சி நிறைவு விழா ஒன்றிற்கு போயிருந்தேன். மிகவும் வசதியான பிள்ளைகள் படிக்கும் தரம் வாய்ந்த பாடசாலை. கண்காட்சியில் மாணவர்களிடம் பேசிப் பார்த்தபோது தரம் புரிந்தது.

அது பெரிதல்ல! அந்தப் பாடசாலை நிர்வாகம், அதே விழாவுக்கு இன்னொரு மாவட்டத்தின் கடைக்-கோடியில் இருந்த பஸ் வசதியே இல்லாத ஒரு பாடசாலையிலிருந்து 250 ஏழை மாணவர்களைத் தம் சொந்த செலவில் அழைத்து வந்திருந்தது. அவர்களுக்-கென்று போட்டிகள், பரிசுகள், ஊக்குவிப்பு, உற்சாகம்.

நிறைவு விழாவில் ஓர் ஐந்தாம் வகுப்புச் சிறுமி பாடினாள், அந்த ஏழைச் சிறுமியின் இனிய குரல் இப்போதும் நம் காதுகளில் ஒலிக்கிறது.

**“ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே! வாழ்வென்றால் போராடும் போர்களமே!”**

பணக்காரர்களும் ஏழைகளும் ஒன்றுபட்டு போராடினால் வறுமை தோற்றுப் போகாதா?

# ஆயர்த்துவ பொன் வி

## அதிமேதகு. ஒஸ்வல்ட் கோமிஸ்



### வது ஆண்டு நிறைவு

1932ம் ஆண்டு மார்கழித் திங்கள் 12ம் நாள் களனிய என்ற இடத்திலே அவதரித்தார் எம் ஆண்டகை பாடசாலைப் பருவத்திலே புனித சூசையப்பர் கல்லூரி மருதானை, புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி கொட்டாஞ்சேனையில் கல்வி பயின்றார். தனது 18வது வயதில் 1950ம் ஆண்டில் குருமடத்திற்குச் சென்று தனது குருத்துவக் கல்வியைக் கற்று 1958ம் ஆண்டிலே மாசி மாதம் 3ம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இளம் குருவாக பத்தாண்டுகள் பணியாற்றி 1968ம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதி ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார். குருவாக இருந்த வேளையில் கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் பல பொறுப்பு மிக்க பணிதனைச் செய்திருந்தார். முதலில் தூய அலோசியஸ் குருமடத்தில் விரிவுரையாளராக 1958ம் ஆண்டு தொடக்கம் 1960ம் ஆண்டு வரை பணியாற்றினார். பின்னர் 1961ம் ஆண்டு தொடக்கம் ஆயராகும் வரை கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

இவர் ஆயராகி கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் துணை ஆயராக இருந்த வேளையில் கொழும்பிற்கு அப்பால் இருந்த மாணவர்களின் கல்வி நலன் கருதி வெளியிடங்களிலே பல பாடசாலைகளை நிறுவினார். அவற்றிலே பல கொழும்பின் இணைப் பாடசாலைகளாக மாற்றம் பெற்றன. (Branch Schools) ஏழைகளின் பாலும், கைவிடப்பட்டவர்களின் பாலும் கூடுதல் ஈடுபாடு கொண்ட இவர் பல சமூக சேவைகளை இவர்களின் நலன்கருதி ஆரம்பித்தார். சிறப்பாக சுனாமிப் பேரலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி அவர்களுக்கு இல்லங்களைக் அமைத்துக் கொடுத்தார். அத்தோடு மாணவர்களுக்கான பல புலமைப்பரிசில் திட்டங்களை ஆரம்பித்து மாணவர்களின் கல்விக்கு ஒத்துழைப்பு வழங்கினார். இது மட்டுமல்லாது தனது பிறந்த இடமான களனியவில் ஒரு சுகாதார நிலையத்தை அமைத்து இலவசமாக அம்மக்களின் நன்மை கருதி வழங்கினார்.

இவரால் ஆரம்பிக்கப்பட்ட கிளைப் பாடசாலைகள் பின்வருமாறு: புனித பேதுரு கல்லூரி கம்பஹா, புனித பேதுரு கல்லூரி உடுகம்பொல, திருச்சிலுவைக் கல்லூரி பயாகல, புனித சூசையப்பர் கல்லூரி, எந்தேரமுல்லை, வத்தளை, புனித சூசையப்பர் கல்லூரி, கடோல்கலே, லொயலா கல்லூரி, போபிட்டிய, கிறிஸ்து அரசர் கல்லூரி, வெலிவேரிய, இவை அனைத்தும் இன்று பிரபல்ய பாடசாலைகளாகத் திகழ்கின்றன என்றால் மிகையாகாது. இத்தகைய தூர நோக்குக் கொண்ட ஒரு ஆயனாக அவர் செயற்பட்டார்.

இவ்வாறான பணியினையும், இவரது சேவை மனப்பான்மையையும் ஏழைகள் பால் இவர் கொண்டுள்ள கரிசனையையும் கண்ணுற்ற திருச்சபையின் தலைமைப் ஆயரான முன்னாள் திருத்தந்தை புனித இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இவரை கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயராக 2002ம் ஆண்டு ஆடி மாதம் 6ம் திகதி























குடும்பத்தாருடன்....

# விழாவில்






நியமித்தார். அதே மாதம் 27ந் திகதி இவர் பேராயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார். அதே ஆண்டிலே அவர் ஆசிய ஆயர் பேரவையின் பொதுச் செயலாளராகவும் நியமனம் பெற்றார். 2005ம் ஆண்டிலே திருத்தந்தை 16வது ஆசீர்வாதப்பரால் திருச்சபையின் ஆலோசனைச் சபையின் தந்தையர்களில் ஒருவராக நியமனம் (Synodal Father) அதேவேளை 2007ம் ஆண்டு திருத்தந்தையை தனிப்பட்ட ரீதியாக சந்தித்து இலங்கையின் பரந்த நடவடிக்கை பற்றி நீண்ட நேரம் உரையாடினார்.

இவ்வாறான பெருமைக்குரிய கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் 3வது பேராயாராகிய அதிமேதகு. ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் இம்மாதம் 17ம் திகதி தனது ஆயர்த்துவ பொன்விழாவைக் கொண்டா-டுவது எம் அனைவருக்கும் பெருமை தருகின்றது. எனவே இவ்வேளையில் அவரை நன்றியோடு நினைவு-கூருவதோடு அவரது உடல் உள நலத்துக்காக இறைவனைப் பிரார்த்தித்து “ஞான ஒளியின்” சார்பாகவும், கொழும்பு உயர்மறைமாவட்ட இறைமக்கள் சார்பாகவும் இருகரம் கூப்பி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பூரிப்படைகின்றோம்.

**அருட்சகோதரர். R. ஜோசப் ஜெயகாந்தன்.**




























## வர்ணம் தீட்டுக.



# 4. தனிச் செபப் பழக்கம்

### 14. திருச்சிலுவைமுன் மன்றாடும்

**மிகவும் இனியவரான இயேசுவே!**

சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் உம் முன்னே நான் முழந்தாளில் இருந்து மன்றாடுகிறேன். இறைவாக்கினரான தாவீது அரசர் வழியாக என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள். என் எல்லா எலும்புகளையும் எண்ணினார்கள் என்று திருப்பாடலில் முன்னரே நீர் அறிவித்திருக்கிறீர். ஐந்து புனிதமான உம் காயங்களையும், நிறைந்த துக்கத்தோடும் வேதனையோடும் இப்போது நான் உறுதியாக நம்பவும், நீர் தரும் நிலைவாழ்வை எதிர்நோக்கவும், உம் தியாக, அன்புறவில் நிலைகொள்ளவும் ஆவலை என் இதயத்தில் எழுப்பிவிடும். என் பாவங்களின்மேல் வெறுப்பையும், அவற்றில் இருந்து வெளியேறத் துணிவையும் இப்போதே என் இதயத்தில் தோன்றச் செய்யும். நீர் எனக்காக உயிர்த் தியாகம் செய்துள்ளீர் நான் மிகுந்த ஆசையோடு, இரந்து கேட்பதை தவறாது தாரும். ஆமென்.

**குறிப்பு:**

அருள் உதவிகளை அதிகம் அள்ளித் தரும் செபமாக இச்செபம் திருச்சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. நீர் தனிமையில் ஆலயத்தில் இருந்து திருச்சிலுவையைப் பார்த்துக்கொண்டே இச்செபத்தை மன்றாடும். அல்லது உமது வீட்டில் இருந்தும் திருச்சிலுவைமுன் மன்றாடலாம். நீர் மன்றாடும்போது, இயேசுவின் திரு உடலும் இரத்தமும் உமக்கு என்ன செய்துள்ளன என்பதை நினைத்து மன்றாடும்.

### 15. தலைமை வானதூதர் மிக்கேலிடம் கேளும்

**வானகத் தந்தையின் தலைமை தூதர்களில் மிகவும் பலம்பெற்றவரான தூய மிக்கேலே!**

லூசிபர் தலைமையிலான சாத்தான்களுக்கு எதிராக நாங்கள் ஆன்மீகப் போரில், எங்களுக்கு உதவிசெய்ய விரைந்து வாரும். இவர்களின் அட்டகாசங்களிலும், சூழ்ச்சிகளிலும் இருந்து எங்களைக் காப்பாற்ற உம் விண்ணகப் படைகளை உடனே அனுப்பும். வானகத் தந்தை தன் ஆவேசக் கோபத்தால் இவர்களைக் கடுமையாகத் தண்டிக்க நீர் அவரிடம் தொடர்ந்து வேண்டுதல் செய்யும். எங்களை வானகத் தந்தையிடம் இருந்து பிரிக்கவும் இதனால் எங்கள் அமைதியை அழிக்கவும் இவர்கள் ஆவேசம் கொண்டவர்களாய் உலகம் முழுவதிலும் சுற்றித் திரிகிறார்கள். விண்ணகப் படைகளுக்குத் தளபதியான நீர், இவர்களை முடிவற்ற நரக நெருப்பில் தள்ளி, சாம்பல் தூசிகளாக ஆக்கிவிடும். ஆமென்.

**குறிப்பு:**

வானகத் தந்தை படைக்குமுன் வானகத்தூதர்களைப் படைத்திருந்தார். மிக்கேல், கபிரியேல், றபாயேல், லூசிபர் என்ற நான்கு தலைமை வானதூதர்களின்கீழ் எண்ணில் அடங்காதவர்களாய் இருந்தார்கள். லூசிபரும் அவரின் கீழ் இவர்கள் இயங்கிய வானதூதர்களும், தாங்களும் வானகத் தந்தையைப்போல் ஆகவேண்டும் என்று அகங்காரம் கொண்டு, அவருக்குப் பணிய மறுத்தார்கள். இதனால் வானத்தில் ஒரு கொடிய போர் உண்டானது. பறவை நாகம் என்று குறிப்பிடப்பட்ட லூசிபரோடும் அவனோடு இணைந்த கெட்ட தூதர்களோடும் பெரும் போர் தொடுத்தார்கள். லூசிபரும் அவரைச் சேர்ந்தோரும் படுதோல்லியடைந்து பாதாள நெருப்புக்குள் தள்ளப்பட்டார்கள் (இ.வெ. 12:7-9). எனவே கெட்ட ஆவிகளின் தாக்கங்களில் இருந்து நீர் உம்மைக் காப்பாற்றிக்கொள்ள புனித மிக்கேல் தலைமைத் தூதரிடம் மன்றாடும்.

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**

# புனித சுவக்கீன் அன்னம்மாள்



சுவக்கீன் என்றால் “ஆண்டவரது தயாரிப்பு” என்பது பொருள். அன்னா என்றாள் இறைவனுடைய அருள் என்று பொருள். அன்னம்மாள் பெத்லகேமில் பிறந்தார். நாசரேத்தில் வாழ்ந்த சுவக்கீன் என்பவருக்கு மணஒப்பந்தமானவர். இருவரும் தாவீது அரசருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு நெடுங்காலமாக குழந்தைகள் இல்லை. பிறகு மரியாள் பிறந்தாள். மரியாளுக்கு மூன்று வயது ஆனதும், தேவாலயத்துக்குச் செல்லும்படி அவரை கடவுள் அழைத்தார்.

சுவக்கீனும், அன்னம்மாளும் தியாக குணம் படைத்தவர்கள். நெடுங்காலமாய் தவம் இருந்து கடவுளை மன்றாடி பெற்றெடுத்த அழகிய குழந்தையை இவர்கள் கடவுளுக்கு அர்ப்பணம் செய்தனர்.

ஆதியிலிருந்தே புனித அன்னம்மாளை விசுவாசிகள் வணங்கி வந்திருந்தார்கள். இவருக்கு தோத்திரமாக கோவில்கள் கட்டப்பட்டன. நம் நாட்டிலும் இவரின் பெயர் கொண்ட ஆலயங்கள் பல மறைமாவட்டங்களிலும் கட்டப்பட்டிருக்கின்றது. கிழக்கிந்திய திருச்சபையின் பிதாபிதாக்கள்இவரது பரிசுத்த தனத்தைப் பற்றியும், இவர் பெற்ற வரங்களைப் பற்றியும் 4ஆம் நூற்றாண்டில் புனித சுவக்கீனுக்கும் தோத்திரமாக எருசலேமில் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது.




# புனித கார்மேல் அன்னை

இவ்விழாவானது கார்மேல் சபையினரின் அதிமுக்கியமான விழாவாகும். கார்மேல் சபையினர் இந்த பெயரைத் தெரிந்து கொள்ள முக்கியமான ஒரு காரணம் உண்டு. கார்மேல் மலையிலே புனித கன்னி மரியாளுக்குத் தோத்திரமாக முதல் ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டது. அன்னை பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் முன்னரே அந்த ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது.

ஆடி 16ஆம் நாள் கார்மேல் உத்தரிய திருவிழாவாகும். 16-07-1251ல் கார்மேல் சபையின் பெரிய தலைவரான புனித சீமோன்ஸ்தோக் என்பவருக்கு இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் என்னுமிடத்தில் தேவதாய் காட்சி கொடுத்ததாக பாரம்பரியம் கூறுகிறது. நம் பரலோக அன்னை உத்தரியத்தைக் காண்பித்தார். அந்த உத்தரியத்தை தரித்திருக்கும் அனைவருக்கும், பரலோக கொடைகளையும், தனது பாதுகாப்பையும், அளிப்பதாக அன்னை உறுதி கூறினார். வெறுமனே உத்தரியத்தை தரித்தால் போதாது. உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டும், உத்தரியத்தை மக்களுக்கு அளிக்கும் அதிகாரம் பெற்ற ஒரு குரு உத்தரியத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

# புனித யாகப்பர்



இவர் செபதேயு, சலோமி இவர்களின் மகன். கலிலேயாவிலுள்ள பெத்சாயிதா ஊரில் பிறந்தார். இவரும் இவருடைய தம்பி அருளப்பரும், தங்கள் தந்தையுடன் மீன் பிடித்த பின் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது இயேசு இரு சகோதரர்களையும் அழைத்தார். வலைகளையும் தந்தையையும், விட்டுவிட்டு அவர்கள் இயேசுவின் பின் சென்றார்கள். நற்செய்தியை பறைசாற்றினார்கள். புனித யாகப்பர் ஆண்டவரின் முக்கியமான நிகழ்வுகளில் உடனிருந்தார். அவை,

1) பேதுருவின் மாமியாரை குணப்படுத்திய நிகழ்வில்.
2) யாயீரின் மகளுக்கு உயிரளித்த போது
3) ஆண்டவரின் உருமாற்றத்தின் போது
4) ஆண்டவர் கெத்தமனி தோட்டத்தில் இருந்து வியர்வை வியர்த்த போது

இவர் தாய் தன் மகன்களுக்கு ஆண்டவரின் அரியனைக்கு வலப்புறமும், இடப்புறமும், இடம் கேட்டார். ஆண்டவரின் விண்ணேற்புக்குப் பிறகு ஸ்பெயின் நாட்டிற்கு வேதம் போதிக்க சென்றார். கி.பி 42ல் ஏரோது அக்ரிப்பா அரசனால் தலை வெட்டப்பட்டு இரத்தம் சிந்தி மறைசாட்சியாக இறந்தார். இவருடைய திருப்பண்டம் 8ஆம் நூற்றாண்டு முதல் ஸ்பெயின் நாட்டில் கம்போஸ்டெல்லா நகரில் இருக்கிறது என்று கிறிஸ்தவ மரபு கூறுகிறது.

**மாணவர்களே! உங்களது ஆக்கங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08.




# மேலதிகாரிகளும் நீங்களும்



பொதுவாக உங்கள் மேலதிகாரிகளிடம் ஆழ்ந்த மரியாதையும் பணிவுள்ள மனோபாவமும் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் உங்களுக்குச் செய்யும் நன்மைகளுக்கு நன்றி பாராட்டுங்கள். அன்பு பாராட்டுங்கள், அவர்களைப் பற்றி விமர்சனம் செய்கிறவர்களுடனோ, அவர்கள்மீது குற்றம் கண்டுபிடிப்பதே தொழிலாகக் கொண்டிருப்பவர்களுடனோ சேராதீர்கள்.

உங்கள் மேலதிகாரிகளுள் ஒருவரை முதல் முறையாகச் சந்திக்கும் பொழுது பொருத்தமான முறையில் அவருக்கு வணக்கம் தெரிவியுங்கள். சான்றாக, 'வணக்கம் ஐயா', 'வணக்கம் அம்மா' என்று கூறுங்கள். உங்களுக்குச் சமமானவர்களுக்கு இயல்பான முறையில் வாழ்த்துக் கூறலாம்.

இரவில் உரையாடி முடித்துவிட்டு இறுதியாகப் பிரிந்து செல்லும்போது 'வணக்கம், சென்று வருகிறேன்' அல்லது 'குட்நைட்' என்று சொல்லலாம். அவரவர் வழக்க முறைக்கேற்ப 'வாழ்த்துக்கள்', என்றும் கூறலாம்.

போர் வீரர்கள் செய்யும் முறையில் வணக்கம் செலுத்துதல் கூடாது. தேசிய மாணவர் படை உடையிலோ, இராணுவப் பணியிலோ, காவல் துறையிலோ பணி செய்தால் அவ்வாறு செய்யலாம். மற்றபடி கைகூப்பி வணங்கியோ அல்லது தலையைப் பவ்வியமாக வணங்கியோ வணக்கம் செய்தல் வேண்டும்.

மேலதிகாரிகளிடம் நீங்கள் செய்யத்தக்க பணி ஏதாவது இருக்குமென்றால் தயங்கிக் கொண்டே செல்லத் தேவையில்லை.

உங்கள் ஆசிரியர்களை அவர்களுடைய அறைகளிலோ வீடுகளிலோ அடிக்கடி சந்திக்க போவது நல்லதல்ல. அவர்களிடம் ஏதோ சலுகை பெறுவதற்காக நீங்கள் அலைகிறீர்களோ என்கிற எண்ணம் பிறரிடம் ஏற்பட இடமளிக்காதீர்கள்.

ஒருவர் தங்கியிருக்கும் அறைக்கு நீங்கள் செல்ல நேரிட்டால், மெதுவாக அவர் கேட்குமளவுக்கு அறைக்கதவைத் தட்டுங்கள். 'உள்ளே வாங்க' என அழைக்கும் வரைக் காத்திருங்கள். பதில் ஏதும் கிடைக்காவிட்டால், இரண்டாவது முறையும் தட்டலாம். ஆனால், பலமுறை அவ்வாறே தொடர்ந்து தட்டிக்கொண்டிருக்க கூடாது.

அறைக்குள் இருப்பவரது கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காக அறைக்கு வெளியே நின்றவாறு கால்களைத் தரையில் தேய்த்து ஓசை எழுப்பிக்கொண்டிருப்பதோ, உரக்க இருமிக்கொண்டிருப்பதோ, சத்தமாக பேசிக்கொண்டிருப்பதோ செய்யத்தகாத செயலாகும்.

ஜன்னல் வழியாக எட்டிப் பார்ப்பதோ, சாவித்துவாரம் வழியாக உற்றுநோக்குவதோ ஒழுக்கமற்ற நடத்தைகளாகும். மேலதிகாரியிடம் நேரில் சென்றதும் வணக்கம் சொல்லுங்கள். "உட்காருங்க" என அவர் சொல்லும்வரை நிற்பது நல்லது. அமருமாறு கூறியதும் நன்றி சொல்லி அமருங்கள். "வேண்டாம், நான் நின்றுகொண்டே பேசுகிறேன்" என்பதோ, "எனக்கு உங்கள் முன் உட்கார தகுதியில்லை" என்று கூறுவதோ உண்மையான பணிவுடைமை அல்ல.

மேலதிகாரிகள் உங்களுக்கு எதையாவது எதிர்பார்த்ததை வழங்க மறுத்துவிடக்கூடும். அப்போது நச்சரித்து விவாதித்துக் கொண்டிருக்கக் கூடாது. மாறாக, "உங்களுக்குத் தொந்தரவு கொடுத்ததற்காக மன்னிக்கணும்" என்பன போன்ற சொற்களைச் சொல்லிவிட்டு, விரைவாக அங்கிருந்து திரும்பிச் சென்றுவிடுங்கள்.

நீங்கள், வேறொருவரது அறைக்கோ, வீட்டுக்கோ போயிருக்கும் பொழுது, அவர்கள் சொந்தப் பொருள்களாக, எவற்றையெல்லாம் வைத்திருக்கிறீர்கள் எனத் தேடுவது போன்ற பாவனையின் பார்த்துக் கொண்டிருப்பதோ கூடாது. அவர்களுடைய அனுமதி இல்லாமல் அவர்களது சொந்தப் பொருள் எதனையும் தொடாதீர்கள்.

மேலதிகாரியை ஆராய்ந்து பார்க்கும் நோக்கத்துடன், துடுக்குத் தனமான கேள்விகளைக் கேட்காதீர்கள். அவர் கேட்ட கேள்வியை நீங்கள் கவனிக்கவோ, புரிந்துகொள்ளவோ, தவறிவிட்டால், 'மன்னிக்க வேண்டும், என் காதில் சரியாக விளவில்லை' அல்லது 'எனக்குச் சரியாகப் புரியவில்லை. அருள்கூர்ந்து திரும்பச் சொல்வீர்களா?' என பவ்வியமாக வினவலாம். 'உரக்கச் சொல்லுங்கள், எனக்கு அறவே கேட்கவில்லை' என்று சொல்லாதீர்கள். அவ்வாறு சொல்வது பணிவுடைமை ஆகாது!.

உங்கள் மேலதிகாரியிடம், 'எப்படி இருக்கீங்க?' என்று கேட்பதோ அவர்களுடைய சொந்த விசயம் பற்றிக் கேள்வி கேட்க முயற்சி செய்வதோ அடக்கமற்ற செயல்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நீங்கள் நெருக்கமான நட்புக் கொண்டிருப்பதாகக் காட்டிக்கொள்ளத் தேவையில்லை. அவர்கள் உங்களிடம் எளிமையாகவும் கனிவாகவும் நடந்துகொண்டாலும் அவர்களுக்கு தக்க மரியாதை காட்டும் முறையில், அணுகாது அகலாது நெருப்பில் குளிர்காய்பவரைப் போல நடந்துகொள்ளுங்கள்.

உங்கள் மேலதிகாரிகள் அவர்களாக முகமன் அல்லது வாழ்த்துக்கூறும் முறையில் கைகுலுக்க முன்வந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். ஏதேனும் வேலை செய்த காரணத்தால் கைகள் அழுக்காக இருந்தால், 'மன்னிக்க வேண்டும்' என்று கூறி கைகுலுக்க வேண்டாம்.

உங்கள் மீதுள்ள குற்றம் குறையை அவர்கள் சுட்டிக்காட்டும்பொழுது பொறுமையோடு ஏற்றுக்கொள்ளுங்கள். அதைத் திருத்திக்கொள்வதாக உறுதி கூறிவிடுங்கள். அவர்கள் கூறும் திருத்தங்களையும், தண்டனைகளையும் ஏற்றுக்கொள்ளுங்கள். மேலதிகாரிகள் உங்கள் பெற்றோரின் இடத்தை வகிக்கும் 'குரு'வாகப் பொறுப்பு வகிப்பவர்கள் என்பதை நினைவில் நிறுத்துங்கள்.

நீங்கள் மேலதிகாரியைச் சந்திப்பதற்கு நேரம் குறித்திருந்தால், குறித்த நேரப்படி அவர்களைச் சென்று சந்தியுங்கள். தவிர்க்க முடியாத காரணங்களால், அவர்களைச் சந்திப்பதில் தடங்கல் நேரிட்டுவிட்டால், எவ்வளவு விரைவாக அவர்களுக்கு விளக்கம் தர முடியுமோ, தகவல் தெரிவிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகத் தெரிவித்துவிடுங்கள்.

**"ஒருவரைச் சந்திப்பதற்கு ஒப்புதல் தெரிவித்த பிறகு சொன்னபடி செய்யத் தவறுதல் தெள்ளத் தெளிவான நேர்மையற்ற செயல்"**



# இறைவாக்கினர் நாகூம்

### அறிமுகம்:

இறைவாக்கினர் நாகூம் - இவரது பெயர் எபிரேய சொல்லான "நேஹோம்" என்பதிலிருந்துப் பெறப்பட்டது. இச்சொல்லுக்கு "ஆறுதல்" அல்லது "இரக்கம்" என்றுப் பொருள். அவரது பெயர், அவர் பிறந்த ஊர் ஆகியவற்றைத் தவிர இந்த இறைவாக்கினரைக் குறித்து எந்த விவரமும் அறிய முடியவில்லை. நாகூம் இறைவாக்கினர் யூதா நாட்டின் தென்மேற்கிலிருந்த எல்கோசு என்னும் ஊரில் பிறந்தவர்.

### இறைவாக்கினர் நாகூமின் வரலாற்றுப் பின்னணி:

இந்த இறைவாக்கினரின் நூலிற்கான வரலாற்றுப் பின்னணியைக் குறித்து துல்லியமாக எதையும் கூற முடியாது. இந்நூல் கி.மு 663 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டக் காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். இந்த கால இடைவெளியும் இறைவாக்கினர் நூலில் 3:8 பகுதியில் காணப்படும் தீப்சு நகர் அசீரியர்களால் அடைந்த வீழ்ச்சியைக் குறித்தும் (கி.மு 663), அசீரியாவின் தலைநகரான நினிவே கி.மு 612ல் பாபிலோனியர்களால் அழிக்கப்பட்டதையும் வைத்துக் கணிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் காலம் நினிவே நகர் அழிவை சந்தித்த காலத்தையொட்டியதாகக் கூறப்பட்டாலும் அதற்கு முந்தைய காலத்திலும் இந்நூல் எழுதப்பட்டிருக்க வாய்ப்புண்டு எனவும் கருதப்படுகிறது. மனாசே அரசர் காலத்துப் புரட்சியை குறிப்பேட்டு ஆசிரியரின் கற்பனை / புனைக்கதை என்று எண்ணித் தள்ளிவிடாமல் பார்த்தால், யூதா அரசில் கி.மு 652-648ல் நிலவிய சூழல் இந்நூலில் குறிப்பிடப்பட்டவைகளுடன் பொருந்தி வருகின்றன. மனாசே காலத்துப் புரட்சிக்கானக் காரணங்களே அசீரிய ஆட்சியின் முடிவு சமீபத்தில் வந்துவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இறைவாக்கினர் நாகூமின் நூல் இந்த செய்தியை மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இச்செய்தியின் வாயிலாக நிச்சயமாக வெகு விரைவில் அழிவை சந்திக்கவிருக்கும் அசீரியாவுக்கு எதிரான புரட்சியை வழிநடத்திட யூதா அரசருக்குத் தூண்டுதலாகவும் அமைந்தது. இந்நூல் ஆண்டவருக்கு எதிரான சதித்திட்டம் தீட்டியவர்கள் அழிவை சந்திப்பர் என்பதையும், அதன்பின்னர் யூதா அரசு, கி.மு 630ல் இறைவனுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டிய அசூர்பனிப்பாலாசுவின் இறப்பிற்குப்பின் மன்னர் யோசியாவின் காலத்தில் விடுதலைப்பெற்று மீண்டும் எழுச்சிப் பெற்றதையும் இறையியலின் ஆழமான சிந்தனைகளுடன் இணைந்து வழங்குகிறது. கி.மு 612ல் நடைபெற்ற நினிவேயின் வீழ்ச்சியோடு இந்நூலின் இறைவாக்குகள் முழுமையாக நிறைவேறியதால், இந்நூல் திருமறையில் சேர்க்கப்படத் தகுதியான நூலாக ஏற்று, இணைக்கப்பட்டது.

### இறைவாக்கினர் நாகூமின் நூல்

இறைவாக்கினர் நாகூம் எருசலேம் ஆலயத்தில் பணியாற்றிய வழிபாட்டு இறைவாக்கினர் மரபைச் சார்ந்தவராக இருந்தார். இந்நூல் அரசுகளைக் குறித்த இறைவாக்கினர்களின் இறைவாக்குகளைக் கொண்டதாக உள்ளதால், இது அக்காலத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. இந்நூல் ஏறக்குறைய இறைவாக்கினர் அபகூக்குவின் நூலை ஒத்ததாக உள்ளது. இவ்விரு இறைவாக்கினர்களின் நூல்களும் ஒரே இலக்கிய வகையை சார்ந்தவையாக அமைந்துள்ளன.

1. இறைவன் வெளிப்படுத்திய இறைவாக்குகள் அடங்கிய பாடல் (நாகூம் 1)
2. நினிவே நகருக்கு எதிரான இறைவாக்குக் கவிதைகள் (நாகூம் 2-3)
3. அநீதி குறித்து இறைவாக்கினரின் முறையீடும், கடவுளின் பதிலும் (அப 1)
4. பொல்லாரை விமர்சனம் செய்யும் பரிகாசமான / இழிவுபடுத்தும் பாடல்கள்
5. இறைவனை நோக்கி இறைவாக்கினர் எழுப்பிய மன்றாட்டுப் பாடல் வரிகள் (அப 3)

### இறைவாக்கினர் நாகூம் நூலின் சிறப்பு:

இந்நூலின் முதல் இரு பிரிவுகளும் (நாகூம் 1-2) திருப்பாடல்கள் 25, 111 ஆகியவற்றில் உள்ளது போன்று ஒவ்வொரு சொற்றொடரும் எபிரேய எழுத்துக்களை வரிசைப்படுத்தி எழுதப்பட்டுள்ளன. இவற்றில் காணப்படும் முக்கியமான இரு செய்திகள்"

1. ஆண்டவர் சினம் கொள்ளத் தயங்குபவர்.
2. ஆயினும் தமக்குக் கீழ்ப்படியாத மக்களின் மீது தமது சினத்தை வெளிப்படுத்தத் தவறாதவர். கடவுள் தம் சினத்துடன் வெளிப்படுத்தும் நாளைக் குறித்த செய்திகள் பல்வேறு இயற்கையின் குழப்பமும் / சீற்றமுமான நிலைகளையும், கற்பனை உருவகங்களையும் கொண்டு வர்ணிக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் 2-3 பிரிவுகளில் நினிவேயின் வீழ்ச்சியைக் குறித்த செய்திகள் காணப்படுகின்றன. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி, நிகழவிருக்கும் தீமைகளைக் குறித்துப் பல்வேறு உருவகங்களை உள்ளடக்கியதாகவும், அசீரியாவின் அழிவையும், அசீரிய அரசு தனது ஆட்சிக்காலத்தில் மற்றவர்களுக்கு இழைத்தக் கொடுமைகளையும் அது இப்போது தனக்குத்தானே அனுபவிக்கப்போவதைக் குறித்தும், பழிவாங்கும் நோக்குடன், இடித்துரைக்கும் கொடூரமான வார்த்தைகளை வெளிப்படுத்துவதாகவும், வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் உள்ள இறைவாக்குகள் நல்ல கவிதை நயம் கொண்டவை. நாகூம் 3:1-7 சவக்குழிகளிலிருந்து எழும் ஓலம் போன்று உள்ளது. அவலங்களும், அவமானங்களும் மிகுந்த நிகழ்வுகளை உள்ளடக்கியதாக உள்ளன. இறைவாக்கினர் தன் நூலில் பல்வேறு உருவகங்களைப் பயன்படுத்தியிருக்கிறார். உடைந்துப் போன குளம் (2:8), சிங்கங்களின் குகை (2:11, 12), விபச்சாரம் செய்வோர் (3:4-5), அத்திப் பழங்கள் (3:12), வெட்டுக்கிளிகள் (3:15-17). இந்நூலில் இறைவாக்கினரின் வார்த்தை விளையாட்டும் சிறப்பாக வெளிப்படுகிறது (1:10, 2:8, 10, 2:11)

இந்நூலுக்கு மேலான இலக்கிய நடைகொண்ட வேறு இறைவாக்கினர் நூல்கள் பழைய ஏற்பாட்டில் இல்லை. இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள தெளிவான, விறுவிறுப்பான உருவகங்கள் அதற்கு ஒரு அசாதாரண வலிமையை அளிக்கின்றன. இந்நூல் கடவுளின் அதிவேகமான, தவறிழைக்காத கோபாக்கினை, அவரது அரக்கத்தன்மையுடைய விரோதிகள் மீதும், அவருடைய சொந்த மக்களின் மீதும் விழுவதை மிகவும் ஆழமாக விவரிக்கின்றது. அதே சமயத்தில் கடவுள் அவருக்கு கீழ்ப்படிந்து, அவரை மட்டுமே நம்பி வாழும் மக்களுக்கு நிச்சயமான அடைக்கலமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கிறார் என்பதை.....

15

# கிறிஸ்துவின் மகிமையை அவரின் சிலுவையிலிருந்து பிரிக்க இயலாது



திருப்பொழிவு செய்யப்பட்டவரான கிறிஸ்துவின் மகிமையை, அவரின் சிலுவையிலிருந்து பிரிக்க இயலாது என்பதால், கிறிஸ்துவின் பாதையில் முட்டுக்கட்டையாக இருக்க வேண்டாம் என, கிறிஸ்தவர்களைக் கேட்டுக்கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

புனிதர்கள் பேதுரு, பவுல் பெருவிழாவான ஆனி 29, காலை 9.30 மணியளவில், வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில், 14 புதிய கர்தினால்கள், ஏனைய கர்தினால்கள் மற்றும் பேராயர்களுடன் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினார்.

இத்திருப்பலியில், பாலியம் என்ற கழுத்துப்பட்டைகளை ஆசீர்வதித்த திருத்தந்தை, திருப்பலியின் இறுதியில், புதிய பேராயர்களிடம் அவற்றைக் கொடுத்தார். கடந்த ஆண்டு ஆனி முதல், இவ்வாண்டு ஆனி வரை, இந்தியா உட்பட, உலகின் பல்வேறு நாடுகளில், முப்பது உயர்மறைமாவட்டங்களுக்கு பேராயர்களை நியமித்துள்ளார் திருத்தந்தை. பாலியம் என்பது, முக்கிய திருவழிபாடுகளில் உயர்மறைமாவட்ட பேராயர்கள் கழுத்தில் அணியும் கழுத்துப்பட்டையாகும். இத்திருப்பலியில், பொலிவிய அரசுத்தலைவர், மெக்சிகோ, பாகிஸ்தான், ஈராக், மடகாஸ்கர் போன்ற நாடுகளின் முக்கிய அரசு பிரதிநிதிகள் கலந்துகொண்டு, திருத்தந்தையின் ஆசீரைப் பெற்றனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 14 புதிய கர்தினால்களுக்கு, தொப்பியும், மோதிரமும் அணிவித்து பொறுப்புக்களை ஒப்படைத்த நிகழ்வுக்குப்பின், 14 புதிய கர்தினால்களுடன், முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களைச் சந்தித்தார்.

வத்திக்கானில் முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் தங்கியிருக்கும், "Mater Ecclesiae" இல்லத்திற்கு இரு வாகனங்களில் சென்று, அவ்வில்லச் சிற்றாலயத்தில், திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களுடன் சேர்ந்து அருள் நிறைந்த மரியே செபத்தைச் செபித்தனர். பின்னர், திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், எல்லாரையும் ஆசீர்வதித்தார்.

கர்தினால்கள் அவையில் இணைந்த 14 புதிய கர்தினால்களுடன், திருஅவையில் மொத்தம் 226 கர்தினால்கள் உள்ளனர். இவர்களில், திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் தகுதியுடைய 80 வயதுக்குட்பட்டவர்கள் 125. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இதுவரை 59 பேருக்கு, கர்தினால்கள் தொப்பி மற்றும் மோதிரத்தை வழங்கியுள்ளார்.




# பாட்னா உயர்மறைமாவட்டத்திற்கு புதிய வாரிசு ஆயர்



இந்தியாவின் பாட்னா உயர்மறைமாவட்டத்திற்கு, பக்சர் மறைமாவட்ட ஆயர் செபஸ்டியான் கல்லுப்புரா (Sebastian Kallupura) அவர்களை, வாரிசு ஆயராக, நியமித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

1953ம் ஆண்டு ஆடி 14ம் திகதி, கேரளாவின் கொட்டியூரில் (Kottiyoor) பிறந்த ஆயர் செபஸ்டியான் கல்லுப்புரா அவர்கள், பாட்னா உயர்மறைமாவட்டத்திற்காக, 1984ம் ஆண்டில் அருள்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பாட்னா உயர்மறைமாவட்டத்தில் முக்கிய பொறுப்புக்களை வகித்த இவர், 2009ம் ஆண்டு சித்திரை 3ம் திகதியன்று, பக்சர் மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டார்.

பாட்னா உயர்மறைமாவட்டத்தின் தற்போதைய பேராயராக, இயேசு சபையின் பேராயர் வில்லியம் டி சூசா அவர்கள், 2007ம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகிறார். இவர் 1946ம் ஆண்டு பங்குனி 5ம் நாளன்று பிறந்தவர்.

பீஹார் மாநிலத்திலுள்ள பாட்னா உயர்மறைமாவட்டத்தின்கீழ், Bettiah, Bhagalpu, Buxar, Muzaffarpur, Purnea ஆகிய மறைமாவட்டங்கள் உள்ளன.

# கிறிஸ்துவின் திருஇரத்தக் குழுமம் கனிவுப் புரட்சிக்குச் சேவை



கிறிஸ்துவின் திருஇரத்தக் குழுமத்தின் ஏறத்தாழ மூவாயிரம் உறுப்பினர்களை அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கத்தில் சந்தித்து உரையாற்றினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்துவின் திருஇரத்தம், உலக மீட்பின் ஊற்றாக உள்ளது என்றும், மற்றவர்க்கு வழங்கும் வாழ்வின் மிக உன்னதமான அன்பை வெளிப்படுத்த, இரத்த அடையாளத்தைத் தவிர வேறு எதுவும் இல்லையென்பதால், கடவுள் இதனைத் தேர்ந்துகொண்டார் என்றும், திருத்தந்தை கூறினார்.

கிறிஸ்துவின் தியாகப்பலி மீது மேற்கொள்ளப்படும் தியானம், நம் வாழ்வைக் கடவுளுக்கும், பிறருக்கும் கையளிக்கச் செய்கின்றது மற்றும் அத்தியானம், இரக்கப் பணிகள் ஆற்ற நம்மைத் தூண்டுகிறது என்று கூறியத் திருத்தந்தை, உடல் மற்றும் மனத்தளவில் துன்புறுவோர், நுகர்வுத்தன்மை மற்றும் புறக்கணிப்பால் சமுதாயத்தின் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டோருக்குப் பணியாற்றவும், அத்தியானம் தூண்டுகிறது என்று கூறினார்.

கிறிஸ்துவின் திருஇரத்தக் குழுமத்தின் பணிகள் மற்றும் அவர்களின் சான்றுவாழ்வுக்கு உதவுவதற்கென, உண்மையைத் துணிச்சலுடன் எடுத்துரைத்தல், எல்லார் மீது, குறிப்பாக, தொலைவில் இருப்பவர் மீது அக்கறை, கவர்ச்சிகரப் பேச்சு மற்றும் தொடர்புகொள்ளும் திறமை ஆகிய மூன்று கூறுகளைப் பரிந்துரைக்க விரும்புவதாகத் தெரிவித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

நற்செய்தியின் விழுமியங்களையும், உலகம் மற்றும் மனிதர் பற்றிய உண்மையையும் அழுத்தமாக, அச்சமின்றி எடுத்துரைக்கும், சமூகங்களைக் கட்டியெழுப்புவதற்கு துணிச்சலான மக்களாக இருப்பது அவசியம் என்றும், மனித வாழ்வு, தாயின் கருவறை முதல் கல்லறை வரைப் பாதுகாக்கப்படுவது தாக்குதலுக்கு உள்ளாகும்போது, புறமுதுகு காட்டாமல் வாழ்வின் மாண்பு பற்றியும், ஏழ்மையின் பல்வேறு வடிவங்கள் மற்றும் சமூகத் தீமைகளின் முன்னும், தெளிவாகப் பேசுவதற்குத் துணிச்சல் தேவை என்றும் திருத்தந்தை கூறினார்.

தெருக்களில் நடந்து, கவர்ச்சிகரமான பேச்சுகள் மற்றும் தொடர்புகளால், திருஅவையின் உருவத்தை எடுத்துரைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்ட திருத்தந்தை, இயேசு போதித்த முறையைப் பின்பற்றி, கடவுளின் இரக்கம் மற்றவர்க்குக் கிடைப்பதற்கு உதவுமாறும் கூறினார்.

ஆடி மாதம் முழுவதும் கிறிஸ்துவின் திருஇரத்தத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஆடி முதல் திகதி கிறிஸ்துவின் திருஇரத்த விழா. திருத்தந்தை 9ம் பயஸ் அவர்களால் இவ்விழா உருவாக்கப்பட்டது.

# அருள்பணியாளர்களும் அவர்களது மேய்ப்புப்பணியும்



அருள்பணியாளர்கள், பல நடவடிக்கைகளை முன்னெடுத்து ஆற்றும்போது, விசுவாசிகள், தங்கள் அருள்பணியாளர்களை அன்பு கூர்கின்றார்கள், அவர்களுக்கு அவர்கள் தேவைப்படுகின்றார்கள், அவர்களில் விசுவாசிகள் நம்பிக்கை வைக்கின்றார்கள் என்பதை நினைப்பது, அருள்பணியாளர்களுக்கு நல்லது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

ஆடி மாத செபக்கருத்து பற்றி காணொளியில் பேசியுள்ள திருத்தந்தை, அருள்பணியாளர்களின் சோர்வு பற்றி, நான் எவ்வளவு அடிக்கடி நினைத்துப் பார்க்கிறேன் என்பதை அறிந்திருக்கின்றீர்களா? என்று கேட்டுள்ளார்.

அருள்பணியாளர்கள், தங்களின் புண்ணியங்கள் மற்றும் குறைகளோடு பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்றனர் என்றும், அவர்கள், பல நடவடிக்கைகளை முன்னின்று ஆற்றுகையில், ஏமாற்றத்திற்குப்பின், அவர்கள் செயலற்று இருக்க இயலாது என்றும் திருத்தந்தை தன் செய்தியில் தெரிவித்துள்ளார். எனவே, தங்கள் மேய்ப்புப்பணியில் சோர்வையும், தனிமையையும் அனுபவிக்கும் அருள்பணியாளர்கள், ஆண்டவருடனுள்ள நெருக்கத்திலும், சகோதர அருள்பணியாளர்களின் நட்பிலும், உதவியும் ஆறுதலும் பெறும்படியாக, நாம் எல்லாரும் ஒன்றிணைந்து செபிப்போம் என, காணொளியில் கேட்டுக்கொண்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# மங்களூரு மறைமாவட்டத்தின் புதிய ஆயர் பால் சல்தான்ஹா



இந்தியாவின் மங்களூரு மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, அருள்பணி பால் சல்தான்ஹா(Paul Saldanha) அவர்களை, 3.7.2018 அன்று நியமித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மங்களூரு மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றிய அலாய்சியஸ் பால் டி சூசா அவர்களின் பணி ஓய்வை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உரோம் உர்பானியானம் பாப்பிறை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும், 54 வயது நிரம்பிய அருள்பணி பால் சல்தான்ஹா அவர்களை, மங்களூரு மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமித்துள்ளார்.

1964ம் ஆண்டு ஏப்ரல் 27ம் தேதி மங்களூரு மறைமாவட்டத்தின் Kinnigoli என்ற ஊரில் பிறந்த புதிய ஆயர் சல்தான்ஹா அவர்கள், 1991ம் ஆண்டில் அருள்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

உரோம் உர்பானியானம் பாப்பிறை பல்கலைக்கழகத்தில், இறையியலில் முனைவர் பட்டமும், பெங்களூரு இறையழைத்தல் பயிற்சி நிறுவனத்தில் உளவியலில் சான்றிதழ் படிப்பும் முடித்துள்ள இவர், மங்களூரு மறைமாவட்டத்தில் முக்கிய பொறுப்புகளை வகித்த பின்னர், 2015ம் ஆண்டு உர்பானியானம் பாப்பிறை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியைத் தொடங்கினார்.

இப்பல்கலைக்கழகத்தில் துணை ஆன்மீக இயக்குனராகவும் பணியாற்றிய மங்களூரு புதிய ஆயர், பால் சல்தான்ஹா அவர்கள், 2015ம் ஆண்டு மார்ச் மாதத்தில், உலக ஆயர்கள் மாமன்ற பொதுச் செயலகத்தின் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டார்.

## 05 பேராயர் ஆண்டகையின்...

- தலைமை தாங்கியவர், ஆலோசனைக்குழு "Kithunu upadeshaka Sabawa" SLBC மற்றும் ரூபவாஹினி (2002 - 2009)
- ஆலோசகர் - சிங்கள சப்தகோசய - இதழாசிரியர் குழு
- ஆலோசகர் - "மஹாவசம" - இதழாசிரியர் குழு
- நத்தார் பண்டிகையையொட்டி, பௌத்த மதகுருமார்களுக்கு ஆயர் இல்லத்தில் மதிய உணவு வழங்க 28.12.2006ல் சமத்துவத்தை நிலைநாட்ட ஒழுங்கு செய்தமை.
- ஆலோசகர் - வெளிநாட்டு விவகார அமைச்சு, அகராதியின் இதழாசிரியக் குழு
- அகராதி குழுவின் 90வது வருட நிறைவுக் கொண்டாட்டத்தில் சொற்பொழிவு வழங்கல் (2017)

### சர்வதேச கூட்டங்களில் சமூகமளித்தமை

- FABC 6 கூட்டங்களில் முழுமையாக பங்கெடுத்தல் (Federation of Asian Bishop's Conferences) மெனிலா (1970), தர்ய்பேய் (1974), கல்கத்தா (1978), பெங்கொக் (1982), (1996), சிஹொல் (2000)
- AECD "அபிவிருத்தி மற்றும் சமாதானம் தொடர்பான கிறிஸ்தவ முழுமைக்குரிய மாநாடு - 1970, வைகாசி, டோக்கியோ. திருஇருதய பல்கலைக்கழகம்.
- FABC பல்வேறுபட்ட உருவாக்கல் நிலையங்களில் பங்கேற்றல் (BIRA, BIMA, BISA etc) மற்றும் சமூகத் தொடர்பாடல் கூட்டங்கள் (unda, octc and ucip) ஆசிய வட்டாரம்.
- Ad Limina எனும் நிகழ்வில் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரை சந்திப்பதற்காக இலங்கை ஆயர்களை வழிநடத்தல்.

### சர்வதேச கூட்டங்களில் பதவியில் அமர்த்தப்படல்

- சர்வதேச சனத்தொகை சம்மேளனம் - பாகுய்ஓ நகரம், பிலிப்பைன்ஸ்
- பல்சமய தொடர்பாடல் கருத்தரங்கு - செயலாளர் உரையாடலாளராக ஒழுங்கு செய்தல், உரோமை (பரீஸ் 1971)
- Konrad - Adenauer, Foundation, mass media conference, வைகாசி 7ம் திகதி தொடக்கம் 17ம் திகதி வரை 1972, டோக்கியோ - மனிலா
- சர்வதேச திரைப்பட கருத்தரங்கு OCIC (பெற்ரோபொலிஸ், பிரேசில் 1975)
- பேன் ஏசியா கூட்டம், சமூகத் தொடர்பாடல், பாப்பிறை ஆணைக்குழுவின் சமூகத் தொடர்பாடல் குழுவால் ஒழுங்குசெய்யப்படல் (டோக்கியோ 1974)

### வெளியிடப்பட்ட புத்தகங்கள்.

- மஹோபதேஷய (குடும்பங்களுக்கான மறைக்கல்வியை சிங்கள மொழியில் பூர்த்தி செய்தல் - 1986.
- பெரிய குறிப்பிடம் (தமிழ் - 2006)
- லமா பைபளய (பிள்ளைகளுக்கான திருவிவிலியக் கதைகள்)
- சிங்களே கிதுனு உருமய (இலங்கையில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு)
- மக ஹொந்தட்ட திபேநம் (கிறிஸ்தவ பிரிவினைவாதிகளுக்கான பதில்கள்)
- சாந்தானா சிறித (புனித அன்னம்மாளின் வாழ்க்கை சரித்திரம்)
- யொவுன் பைபளய (இளைஞர்களுக்கான திருவிவிலியம்)
- தெவிதானோ தறுவன் அமத்தன்ன (பிள்ளைகளுக்கான திருவிவிலியக் கதைகள்)
- ஜேசு சமிதுன் பாரதயே (இந்தியாவில் இயேசு - ஒரு பதில்)
- தேவத்தையில் கடந்த காலத்தை நினைவுக்குக் கொண்டு வருதல் 2006.08.27
- "தேவத்த மதக சடஹன்" - 27.08.2006
- இலங்கையின் சில கிறிஸ்வர்களின் பங்களிப்பு (ஆங்கிலம்) - 06.07.2009
- "ஸ்ரீ லங்காவே கித்துனு தாயகத்வய" (சிங்களம்) - 06.07.2009
- கத்தோலிக்க குடும்பத்திற்கான மறைக்கல்வி - மார்கழி 2010
- ஸ்ரீ லங்கா மாதாவ ஹா கத்தோலிக்க சசுன.
- கித்து சமிதானோ பாரதயட வெடிசேக்த?
- கத்தோலிக்க யடகியாவ - ஸ்ரீ லங்காவ - 2012
- கிறிஸ்துவின் வாழ்க்கை சரித்திரம் - பாலர் பாடசாலை தொடக்கம் தரம் 11 வரைக்கான 12 பதிப்பு புத்தகங்கள்
- கத்தோலிக்க ஹோடி பொத
- கத்தோலிக்க பிள்ளைகளுக்கான மறைக்கல்வி
- குமாரோப தேஷய
- சிங்கித்தி பைபிளய
- தேவத்தே பெசிலிக்கா வன்சகாதய.

✷ ஓர் ஊடகவியலாளராக ஆக்கங்களை பத்திரிகைகளுக்கு வழங்குதல் (Daily News, Sunday Observer, Dinamina, Silumina, Daily Mirror, Lankadipa, Messenger, Dawasa and other journals).

✷ அண்மைக் காலத்தில் இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் வரலாறு பற்றிய விடயங்களை, Gnanartha Pradipaya எனும் சிங்கள வாராந்த பத்திரிகைக்கு வழங்கினார். சுமாராக 284 ஆக்கங்கள் கொண்டாதாக அமைந்தது.

### பெற்றுக்கொண்ட சாதனை விருதுகள்.


- Josephian Honours for Excellence - 11ம் திகதி மாசி 1994. (பொதுமக்களின் வாழ்வில் நிலுவையில் மற்றும் புகழ்பெற்ற சேவை.)
- Eminent past pupil - வைர விழாவுக்கான விருது 01.06.1995 (பொதுமக்களின் வாழ்க்கை நிலுவையில் சேவை)
- All Ceylon Muslim Educational Conference - Award "in appreciation of the distinguished and invaluable service in the field of Education in general and Religious and Cultural Education in particular" - 28ம் திகதி தை மாதம் 1995
- Sebastianite Award of Excellence - 2007
- இலங்கை ஐக்கிய நாடுகளின் சகோதரத்துவ ஒன்றியம் (SUNPO)
  "Goodwill Ambassaolor" Award for "invalvable Services and immenge contribution to Society"
- 'Life Fellow" சர்வதேச முகாமைத்துவ அமைப்புக்கான விருது. 'As an eaemplary prafessional manager"
- Aquinas award for Contribution in the field of Art and Culture - 2014

### வெளிநாட்டு விஜயங்கள்

இந்தியா, பாகிஸ்தான், பர்மா (மியன்மார்) நேபாளம், மாலைத்தீவு, தாய்லாந்து, பொஹோஸ், காம்போஜியா, வியட்நம், ஹொங்கொங், (People Repubilc of China) சீனாவின் குடியரசு மக்கள், மேற்கு கொரியா, தாய்வான், பிலிப்பைன்ஸ், மெக்டே, சிங்கப்பூர், மலேசியா, ஓமான், குவைட், U.K.E, கட்டார், ஐப்பான், கென்யா, மேற்கு ஆப்ரிக்கா, (Republic of South Africa) இத்தாலி, U.K, பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, அயர்லாந்து, ஜேர்மன், சுவிஸ்லாந்து, ஸ்பெயின், லக்சம்போர்ஜ், ரஷ்யா, கஸ்லோவாக்கியா, அவுஸ்ரேலியா, மோல்டா, சைப்பிரஸ், இஸ்ராயேல், ஐக்கிய அரபு நாடுகள், கனடா, மெக்சிக்கோ, பிரேசில்.

**அருட்பணி. சுனில் டி சில்வா**

# வேண்டாம் போதைப் பாவனை



போதை எமக்கு
வேண்டாம் - அதன்
பாதையும் வேண்டாம்.
அதன் உபாதையும்
வேண்டாம்.
பகுத்தறிவுடைய,
படித்தறிவுடைய
நாம்,
மதிமயங்கி,
மதியிழந்து,
மரியாதையிழந்து,
மானமும் இழந்து,
போதையில்
பாதை மாறிப்
போவதும் ஏனோ..........?
பரிதாபமாய்
படுகுழியில் வீழ்வதும்
ஏனோ...........?
தன்னை மறந்து,
தன்னிலை மறந்து,
தன்மானம் இழந்து,
தறி கெட்டு,
தடம் புரண்டு,
தடம் மாறி,
தடுமாறி,
உருமாறி,
உருக்குலைந்து,
உணர்விழந்து,
உள்ளதையும்
இழந்து, வழியிழந்து,
வாழ்விழந்து,
நினைவிழந்து,
நிதானம் இழந்து,
நிம்மதி இழந்து,
நலம் இழந்து,
நலிவடைந்து,
நிர்க்கதியாய்,
நிற்பதும் ஏனோ.........?
வேண்டாம் போதைப்
பாவனை. வேண்டாம்
அதன் வேதனை.
இளையோரே,
அன்பு வழியில்,
அறிவு வழியில்,
அற நெறியில்,
அஹிம்சை வழியில்,
ஆன்மீக வழியில்
இணைந்திடுவீர்.
இன்ப வாழ்வை இன்றே
பெற்றிடுவீர்.
போதைப் பொருளை
விலக்குவீர்.
புது வாழ்வைப்
படைத்திடுவீர்.
நாளும் நலமே பெற்று,
நீவீர் நீடூழி வாழ்வீர்.
நற்சான்று பகர்வீர்.
நாளைய உலகை
போதையற்ற
புது உலகாய்
காண்பீர்.

**ஆக்கம்:**
**பென்ஜமின்**
**சோமநாதர்.**

## புரட்டாசி 21, 22, 23 திகதிகளில் தலவிலயில் நடக்கவிருக்கும், தேசிய குடும்ப ஞான ஒடுக்கத்திற்கான விண்ணப்பப் படிவங்கள் ஆவணி 31 திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தேசிய குடும்ப அப்போஸ்தலிக்க பணியின் வருடாந்த ஞானஒடுக்கம் "தேசிய குடும்ப ஞான ஒடுக்கம் 2018" இவ்வருடமும் தலவில புனித அன்னம்மாள் திருத்தலத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது "ஞான ஒளி" பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றது.

வருகின்ற புரட்டாசி 21, 22, 23 ஆகிய திகதிகளில் நடைபெறவிருக்கும் இவ் ஞான ஒடுக்கமானது மறைமாவட்டங்களின் குடும்ப பணியகங்கள், அருட்தந்தையர்கள் உள்ளிட்ட தேசிய குடும்ப அப்போஸ்தலிக்க பணியகத்தின் இணைப்பாளரான அருட்பணி க்லோட் நோனிஸ் அவர்களது தலைமையில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

**இவ்வருட கருப்பொருள்:**

**"மகிழ்ச்சிகரமான குடும்பம் – இறை அழைத்தலாகும்"** என்பதாகும்.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெறவிருக்கும் இவ் ஞான ஒடுக்கத்திற்கு எல்லா மறைமாவட்டங்களிலிருந்தும் இறைமக்கள் பங்குகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே இது குறித்த விபரங்கள் துண்டுப் பிரசுரங்கள் பங்குத் தந்தையர்களிடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு, அவரின் அனுமதியுடனும் கையொப்பத்துடனும் கூடிய விண்ணப்பங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை நிரப்பி, **ஜா – எல, துடெல்ல, "தேசிய குடும்ப பணியக நடுநிலையம் (தேசிய குடும்ப பணியகம்), ராஜபக்ஷ வலவ்வ, துடெல்ல, ஜா – எல"** எனும் முகவரிக்கு **ஆவணி மாதம் 31ம்** திகதிக்கு முன் தபாலில் அனுப்பி வைக்கவும்.

மேலதிகத் தகவல்களை பங்குத் தந்தையிடம் பெற்றுக்கொள்ளவும். உணவுப் பார்சல்கள் சாதாரண விலைக்கும், வதிவிட வசதிகளும் பொருத்தமான முறையில் பெற்றுக் கொடுக்கப்படும். விண்ணப்பப் படிவங்களை பங்குத் தந்தையிடம் பெற்றுக் கொள்ளவும், மாதிரி விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தகவல் : சீ. ஆர். டிக்சன் என்டனி**




## சிந்தனை:-

**"அவள் செய்த பாவங்கள் பல மன்னிக்கப்பட்டன. அவள் காட்டிய பேரன்பே அதற்குச் சான்று"**
**(லூக். 7:47)**

அது ஒரு நகரின் ஒதுக்குப்புறம், மாடி வீடு, தாழ்ந்த ஜன்னல்கள். வருகின்ற போகின்ற யூதர்களின் கடைக்கண் ஜன்னல்களை துளாவின. ஜன்னல்களுக்கு பின்புறம் அறையினுள் 3 இள நங்கையர், உடலை விற்று வாழ்க்கை நடத்தும் ஜீவன்கள். மதலேனாள், ராக்கேல், தாமார்.

"மது ஏன் உன் முகம் வாடியுள்ளது?" "எவனுடனாவது இதயத்தைப் பறிகொடுப்பதுதான், ராக்கேல் உனக்குத்தான் சொல்றேன், என்னமும் செய்யுங்க, அதைமட்டும் செய்துவிடாதீர்கள்"

சரி நேரம் ஆகுது, தொழிலில் இறங்குமுன்னால் ஆளுக்கொரு கிளாஸ் வையின் சாப்பிடுங்க. தன் கூந்தலுக்கு எண்ணெய் தடவிக்கொண்டு இவ்வாறு பேசியது தாமார். இத்தொழிலுக்கு மேனேஜர்.

'மது உடம்புக்கு நல்லா இல்லையா? 'அதெல்லாம் ஒன்றுமில்லை ராக்கேல். இது ஒரு இஸ்ரயேல் மக்களுக்குரிய வாழ்வா?'

'உனக்கென்ன பைத்தியமா? இது எவ்வளவு ஜாலியான வாழ்க்கை. பணத்துக்குப் பணம், பழகுறதுக்கு பலவகைப்பட்ட ஆண் பிள்ளைகள். ஒரு பெண்ணுக்கு இதைவிட வேறென்ன வேண்டும்?'

'உங்களைப்போல் நானும் இவ்வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கிறேன். உண்மைதான். ஆனால் இது பாவவாழ்க்கை. மிருக உணர்ச்சிக்கு எப்படியாவது தீனிபோட வேண்மென்ற திசைமாறி வந்ததால் இவ்வாழ்க்கையை ஏத்துக்கிட்டேன். இதில் கிடைக்கின்ற இன்பம், மகிழ்ச்சி எல்லாம் கானல் நீர் மாதிரி நிலையற்றது' பொலபொலவென்று கண்ணீர் வடித்தாள் மதலேன்.

'முட்டாள்தனமாகப் பேசாதே, உணர்ச்சிவசப்பட்டு பேசி உன் பொன்னிற அழகைக் குறைத்துக் கொள்ளாதே. இதையே வாழ்க்கை முறையாக்கிவிட்ட பிறகு அழுது பயனில்லை. எந்த சக்தியாலும், இதிலிருந்து நமக்கு விடுதலை அளிக்க முடியாது' பக்குவப்பட்டவள்போல் இங்ஙனம் பேசினாள் தாமார்.

**எச்சக்தியாலும் முடியாதா? யார் சொன்னது?**
**கடவுள் இருக்கிறார், விடுவிப்பார்.**

**நாமிருப்பதோ பாவப் படுகுழி**
**இதில் கடவுள் புனிதப் பெயரை ஏன் இழுக்கிறாய்?**

"ஏன்" இழுக்கக்கூடாது ராக்கேல்? இஸ்ரயேல் மக்களின் கடவுள் கோவிலில் வாழும் வெளிவேடக்காரர்களுக்கு கடவுளாக இருக்கும்போது நமக்கு மட்டும் கடவுளாக இல்லாமலா போய்விடுவார்? பகலில் ஆலயத்தில் வழிபட்டு இரவில் இங்கேதானே வருகிறார்கள். இவர்களுக்கு அறிந்தோ அறியாமலோ பணிசெய்யும் நம்மைப் பார்த்துத்தான் இசையாஸ் உன் பாவங்கள் செந்தூரமாய் சிவந்திருப்பினும் பனிபோல் வெண்மையாக்குவேன் என்று சொன்னார்" என்றாள்.

அது தெரிகிறது மது. கடவுள் நல்லவர்தான். ஆனால் அவரது பூசாரிகளைப் பார். அவர்களிடமும் சென்றால் கோவில் வரி கட்டினாயா, பாவப் பரிகாரத்துக்கு பணம் கட்டினாயா என்பார்கள். இதனால் என்ன பயன்?

அது கிடக்கட்டும், நகரத்திலுள்ள இளம் போதகரை பற்றிய சேதி கேட்டிருக்கிறாயா? நல்ல கதைகளைச் சொல்கிறாராம். எடுத்ததற்கெல்லாம் பெரிய பிரசங்கங்களை வைத்து கழுத்தறுக்கிற பரிசேயரைப்போல் இவர் இல்லையாம்.

அது மட்டுமல்ல ராக்கேல், அன்றைக்கொருநாள் தம்மை நல்ல மேய்ப்பன் என்றும், இஸ்ராயேல் வீட்டில் இழந்த ஆடுகளைத் தேடிவந்தேன் என்றும் சொன்னாராம். அவை, நம்மைப்பற்றியல்லவா சொல்லியிருக்கிறார்? நான் அவரிடம் போக முடிவு செய்துவிட்டேன்.

பைத்தியமாக உளராதே மது. அவர் நல்லவராக இருக்கலாம். ஆனால் நம்மிடம் பேசத் துணிவாரா? இதைக் கேக்காதவள்போல மதலேனாள் ஒரு போர்வையை மேலே போர்த்திக்கொண்டு வெளிக்கிளம்பினாள்.

நீ என்ன செய்கிறாய் என்றே தெரியாமல் நடந்து கொள்கிறாய், மூக்குடைபட்டு வரப்போகிறாய்.

பரவாயில்லை. மூக்குடைப்பட்டு அசடு வழியும்படி நடத்தப்பட்டாலும் அது சரியே. நான் செய்த பாவங்களுக்கு இதுவும் தகும். இதற்குமேல் எது செய்தாலும் தகும்.

இதோ பார், எது எப்படியாயினும் இன்று நீ அவரைப் பார்க்கமுடியாது. அவர் பரிசேய சீமோன் வீட்டு விருந்துக்குப் போனார். அங்கேயே அவரை நான் பார்ப்பேன்.

வாடிக்கையாளனால் முந்நிய நாள் வழங்கப்பட்ட விலையுயர்ந்த பரிமளத் தைல பாட்டிலை எடுத்துக்கொண்டு தலைநிமிர்ந்து செல்வந்தர் குடியிருக்கும் பகுதியில் நுழைந்தாள். அங்கிருந்து அத்தனை வீடுகளும் மதலேனாளுக்கு அத்துப்படி, ஏனெனில் இருள் வேளையில் பின்பக்கவாசல் வழியாக அவ்வீடுகளில் அவள் முன்பு நுழைந்திருக்கிறாள்.

**நடந்த கால்கள் சீமோன் வீட்டின் முன் நின்றது.**
**திறந்த முன் வாசலிலிருந்து உள்ளே பார்த்தாள்.**
**விருந்தினர்களின் உரையாடல், சத்தம், சந்தடி.**
**இப்போதகர் நல்லவர் தானா.... போலியா....**
**ஒருகணம் யோசித்தாள்.**
**நிச்சயமாக இவர் ஒரு புனிதர்தான்.**
**நல்லவர் தான், இவரே எனது நம்பிக்கை.**
**அறையினுள் நுழைந்தாள். உரையாடல் நின்றது.**
**அனைவரின் கண்களும் அவள் மேல் நிலைகுத்தின.**
**சாந்தம் தவழும் முகத்துடன் அமர்ந்திருந்த போதகரை அடைந்தாள்.**
**பிறரைப்போல அவரும் அவளைப் பார்த்தார்.**
**ஆனால் அவரது பார்வையில் இச்சை இல்லை.**
**பாராட்டுதலும் இல்லை, இரக்கம்தான் சுரந்தது.**

இவர் யார், இதற்கு முன் என்னை இவர் பார்த்ததில்லை. ஆனால் இவர் பார்வையில் அந்நியோன்னியம் தெரிகிறதே! என் உள்ளக் கிடக்கையை இவர் அறிகிறார். நிச்சயமாகப் புனிதராக இருந்தும் இவர் என்னை விரட்டவில்லை. அவர் கால்களில் விழுந்தாள். என் ஆண்டவரே என்றுகூறி தன் கண்ணீரால் அவர் பாதத்தைக் கழுவி கூந்தலால் துடைத்து தைலத்தால் பூசினாள்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த பரிசேய சீமோன் ஒரு பாவிப் பெண் தனது பாதத்தை தொட அனுமதிக்கும் இவர் ஒரு புனிதர்தானா என்று நினைக்க, அவன் உள்மனத்தை அறிந்து சீமோனே உமக்கு ஒன்று சொல்லட்டுமா என்றார் இயேசு.

சொல்லும் போதகரே. ஒரு எஜமானுக்கு ஒருவன் ரூபாய் ஐந்தும், மற்றொருவன் ரூபாய் 500ம் திருப்பிக்கொடுக்க கடன்பட்டிருந்தனர். இரக்கப்பட்டு இருவரையும் எஜமான் மன்னித்துவிட்டான். இருவரில் எவன் எஜமானை அதிகம் நேசிப்பான்?

அதிகம் மன்னிக்கப்பட்டவன்தான் போதகரே

**சரியாகச் சொன்னீர்.**
**நான் உம் வீட்டிற்கு வந்தேன், சரியான முறையில் வரவேற்று**
**உரிய உபசரிப்புகள் வழங்கவில்லை.**
**ஆனால் இப்பெண் இங்கு வந்த நேரத்திலிருந்து**
**என் கால்களை முத்தமிட்டு ஓயவில்லை.**
**விலையுயர்ந்த பரிமளத்தால் என் கால்களைப் பூசினாள்.**
**பெரும்பாவிதான் இவள்.**
**அன்பு காட்டியதால் இவளின் பெரும்பாவங்கள்**
**மன்னிக்கப்பட்டன.**

கவலை வேண்டாம், சமாதானமாகப் போய்வாம்மா. போனவள் அன்றிரவை சலனமற்ற தூக்கத்தில் கழித்தாள். சாமம் கடந்தபின் எழுந்து தன் பொருட்களை ஒழுங்கு செய்தாள்.

**'அங்கே என்ன நடக்கிறது?' என்றார் தாமார்.**
**'தாமார் நான் புதுவாழ்வைத் தொடங்கப்போகிறேன்'**
**'என்ன நடந்தது மது?'**

'எனக்கே தெரியவில்லை. சீமோன் வீட்டில் அவர் பாதம் விழுந்தேன். பாவங்கள் என்னைவிட்டு போய்விட்டதாக உணருகிறேன். வீட்டிற்குப்போய் திரும்ப என் நல்வாழ்வைத் தொடங்கப்போகிறேன்.'

'நீ எடுத்த முடிவு சரிதானா?' 'வீட்டுக்குச் சென்றால் எந்த முகத்தோடு உன்னைத் திரும்ப ஏற்றுக்கொள்வார்கள். ஒரு கணம் நினைத்துப்பார்' தாமார் கேட்டாள்.

**'நினைக்க ஒன்றுமில்லை. நான் போகிறேன்'**
**வாசலுக்குச் சென்றாள், திரும்பினாள்,**
**'ராக்கேல், தாமார் போய் வருகிறேன்**
**இந்த இழிநிலையிலிருந்து போகிறேன்'**

வீட்டில் அவளுக்கு எதிர்பாராத நல்ல வரவேற்பு. தான் வந்த நேரம் மாலை நேரம். அவள் அண்ணன் அப்போதுதான்வயக்காட்டிலிருந்துவந்து உள்திண்ணையில் அமர்ந்திருந்தார்.

ஒரு சமயம் நம் வீட்டுக்கு ஊர் ஊராகச் சென்று போதிக்கும் போதகர் ஒருவர் வந்தார். மற்ற போதகர்களிடமிருந்து வேறுபட்டிருந்தார். அவர் பெயர் இயேசு என்றனர்.

ஆம், அதுதான் அவர் பெயர். அவரை உனக்குத் தெரியுமா? "அவரால் தான் நான் மனம்மாறி வீட்டிற்கு வந்திருக்கிறேன்". சீமோன் இல்லத்தில் நடந்த நிகழ்ச்சியை மதலேனாள் கூறினாள்.

சில நாட்களுக்குப் பின் இயேசு தன்னைக் கடவுள் என்று கூறியதை முக்கிய குற்றமாகக் கருதி அவரைத் துன்பத்துக்குள்ளாக்கினர் யூதர். வெள்ளிக்கிழமை காலையில் வேறெதுவும் செய்ய முடியாவிட்டாலும் இயேசுவின் அன்னைக்கு ஆறுதலளிக்கவாவது முடியுமே என்று சொல்லி மதலேனாள் புறப்பட்டாள். அலங்கோலப்படுத்தப்பட்டிருந்த இயேசுவை வெளியே கொண்டுவந்து தோள்மேல் சிலுவையை சுமத்தினர். கல்வாரிக்குப் பயணமானார். ஒரு நிமிடம் கூட்டத்திலிருந்த தன் தாயைப் பார்த்தார். தன் பாவங்களும் அவர் பாடுகளுக்கு எவ்வளவு காரணமென்று மதலேனாள் உணர்ந்தாள். மனம் கசிந்து அழுதாள். மரியாள் அவளைத் தேற்றினாள். இருவரும் மலைநோக்கி கூட்டத்துடன் புறப்பட்டனர். இயேசுவின் கரங்களில் கால்களில் அறையப்பட்ட ஆணிகள் அவள் இதயத்தைப்பிளந்ததாக உணர்ந்தாள். இதற்குமுன் இயேசு தன் கொடுமையாளர்களை மன்னித்ததைக் கேட்டாள். தானும் அவர்களை மன்னித்தாள். இயேசு மரித்தபின் சிலுவை அடியினைப் பிடித்துக்கொண்டு அழுதாள். உடலை மாதா மடியில் வளர்த்தி நல்லடக்கம் செய்தபின் தான் அவ்விடத்தைவிட்டு அழுதுகொண்டே சென்றாள்.

ஓய்வு நாளானதால் இயேசு உடலுக்கு சரியாகத் தைலம் பூசவில்லையே என்று எண்ணி, ஏங்கியிருந்து எப்போது ஓய்வுநாளின் மறுநாள் ஆரம்பமாகும் எனக் காத்திருந்த பெண்களில் ஒருத்தி மதலேனாள். வாசனைத் திரவியம், புதிய துணி இவைகளை எடுத்துக்கொண்டு இன்னும் 2 பெண்களுடன் கல்றை நோக்கிப் புறப்பட்டனர். கல்லறைக் கல்லை புரட்ட யார் உதவுவார்கள் என எண்ணிக்கொண்டு சென்றனர்.

கல்லறை அருகில் சென்று பார்த்தால் கல் புரட்டப்பட்டிருந்தது. உடலை மூடியிருந்த துணி மட்டும் இருந்தது. ஆனால் உடலைக் காணோம். தனது போதகரைக் காணாததால் அழுது அரற்றினாள். அவரை அப்படியே விட்டுவிட்டு மற்ற இரண்டு பெண்களும் நடந்ததை ஊரில் வேண்டியவர்களிடம் சொல்லப்போய்விட்டனர். தோட்டக்காரரும் அங்கு தோன்றினார். "ஏன் அழுகிறாய்?"

"என் ஆண்டவரை எடுத்து போய்விட்டார்கள். எங்கே வைத்திருக்கிறீர்கள்? காட்டுங்கள், நான் தூக்கிக்கொண்டு போகிறேன்".

"மதலேனா" (மரியா). இயேசுவின் குரலே என்று உறுதியாக நம்பி 'ரபோனி' (என் குருவே) என்று கூறி அவர் பாதத்தை பற்றினாள். என்னைப் பிடித்துக்கொள்ளாதே. சொன்னபடி நான் உயிர்த்துவிட்டேன் என்று என் நண்பர்களுக்குச் சொல்.

தான் கேட்டதையும் கண்டதையும் சீடர்களுக்குக் கூறினாள். இயேசு இதற்குப்பின் 2 தடவை அவளுக்கு காட்சி கொடுத்தார். சீடர்களைவிட்டு இறுதியாக விண்ணகம் செல்லுமுன் அவர்களுக்கு காட்சி கொடுக்கும்போது மதலேனாளும் உடனிருந்தாள்.

போதிக்கும் பணி ஆண்களுக்கு வழங்கப்பட்டது. எனினும் சீடர்களுடன் சேர்ந்து சிலகாலம் ஏழைகளுக்கு பணி செய்தாள். வேறொருவர் இப்பணியை எடுத்துக்கொள்ளவே, மத்திய தரைக்கடலைப் பார்த்திருந்த ஒரு குகையில் தனிமையாக செபத்தில் தன் வாழ்வைக் கழிக்க ஆரம்பித்தாள். குகையைச் சுற்றி ஒளிர்ந்த வெளிச்சத்தைப் பார்த்து விவசாயிகள் வந்து அவளுக்கு அப்போதைக்கப்போது உண்ணக்கொடுத்தனர். குருவென்றும் ஆண்டவரென்றும் அவர் அழைத்து யாருடனோ பேசுவதை அவர்கள் பார்க்கவில்லையாயினும் கேட்டனர். நல்மனம் கொண்ட விவசாயி ஒருநாள் அவளுக்கு உணவுகொண்டு வந்தபோது அவள் கைகளை விரித்து முழங்காலிலிருக்கக் கண்டார். அவள் அசைவற்று இருப்பதைப் பார்த்து அவளைத் தட்டி எழுப்பினார். உடல் குளிர்ந்து இருந்தது. உதட்டின் புன்னகை அரும்பி நின்றது. முகம் காற்றாலும் வயதாலும் சுருக்கம் பெற்றிருந்தாலும் அழகும் அமைதியும் அதில் குடியிருந்தன. முன்னாள் பாவியும் இந்நாள் புனிதையுமான மதலேனாள் உடல்தான் அங்கிருந்ததே தவிர அவளது உயிர் ஆண்டவருடன் இணைய எப்போதோ போய்விட்டது.

இவ்வேளையில் ஒருவர் இருவராக வந்து இப்போது ஊரார் பெருங்கூட்டம் கூடி விட்டனர்.

**இறைவனின் அன்பை இன்றுணர்ந்தேன்**
**ஏழுசுரங்களில் நன்றி சொல்வேன்**

**வாடிய என்னுள்ளம் தேறிடவே**
**வரம்பல வழங்கிய மரிமகனே**
**நிலவிடும் அகவிருள் போக்கிய வா**
**நெஞ்சக நினைவுடன் நன்றி சொல்வேன்**

**அன்பால் என்னை அழைத்தவரே**
**அல்லல் யாவையும் தீர்த்தவரே**
**அமைதியில் வாழ்ந்திட அருளீந்தாய்**
**அகமகிழ்ந்துனை நான் போற்றிடுவேன்.**

## 01 மருதமடுமாதா...

ஆயர் மேதகு பி. ல. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில், கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் தேமகு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை, இலங்கையின் பல மறை மாவட்டங்களிலுமிருந்து வருகை தந்திருந்த அருட்பணியாளர்கள் இணைந்து திருவிழாக் கூட்டுத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

தமிழ், சிங்களம், இலத்தீன் ஆகிய மும்மொழிகளிலும் நடைபெற்றது. தமிழ் மற்றும் இலத்தின் மொழிகளிலான வழிபாட்டை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பி. ல. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையும், சிங்கள மொழியிலான வழிபாட்டை கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகையும் முன்னெடுத்துச் சென்றனர்.

திருப்பலி முடிவில் அன்னையின் திருவுருவப் பவனியும், இறுதியில் அன்னையின் ஆசீரும் இடம் பெற்றது.

**நன்றி : அருட்கடல்.கொம்**

## 02 நவநாட்களின்...

இவ்வாறாக 8ம், 9ம் நாட்களில் விவிலியத்தை வாழ்வாக்க தூய்மை அவசியம் என்ற வகையில் உளத்தூய்மையின் அடையாளமான ஒப்புரவு அருட்சாதன வழிபாட்டு முறைகள் நடைபெற்றன. மெய்ப்படக் கூறின் கடந்த வருட நவநாட்களையும் விட ஆலயத்தில் மக்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் நற்கருணை எழுந்தேற்றத்துடன் அன்பிய விவிலிய வாசிப்பு பயிற்சி பாசறைகளும் எம் பங்கில் நிகழ்த்துவது முக்கிய நிகழ்வாகும். எனவே வழிபாடுகளை புதிய கண்ணோட்டத்தின் முறையில் நிகழ்த்தி மாற்றங்கள் செய்வது சிறப்பாகும்.

**தகவல் : F.X. சிசிலியா**

## 01 அகில இலங்கை...

வெற்றி பெற்ற குழுக்களை வாழ்த்துவதோடு அந்த வெற்றிக்காக தமது நேரம், சிரமம் பாராது உழைத்த, அவர்களை ஆயத்தப்படுத்திய மறையாசிரியர்களை மனதாரப் பாராட்டுகின்றோம்.

**அருட்சகோதரி. ரஞ்சி போல்துரை, தேசிய மறைக்கல்வி நடுநிலையம்.**

## 06 திருப்பலியின்...

**குரு :** எல்லாம் வல்ல இறைவன் பிதா, சுதன், பரிசுத்த ஆவி உங்களை ஆசீர்வதிப்பாராக (லூக் 24:51)

**குரு :** கிறிஸ்துவின் அமைதியில் சென்று வாருங்கள் (லூக் 7:50)


**மக் :** இறைவா உமக்கு நன்றி (2 கொரி 9:14)

இவ்வாறு அதி முக்கியத்துவம் வாய்ந்த எமது வாழ்வின் ஊற்றாக விளங்குகின்ற திருப்பலியில் பங்கு கொள்ளுதல் பற்றி "திருவழிபாடு" 2ம் வத்திக்கான் சங்கத்தின் கொள்ளை திரட்டு பின்வருமாறு கூறுகிறது.

"நம்பிக்கையின் இந்த மறைபொருள் நிறைவேற்றப்படும் பொழுது நம்பிக்கை கொண்டோர் அதனுடன் தொடர்பு அற்றவர்கள்போல் அல்லது அமைதி காக்கும் பார்வையாளர்கள் போல் இராமல், சடங்குகள், இறைவேண்டல் ஆகியவற்றின் வாயிலாக அதனை நன்றாக புரிந்து கொண்டு இத்தூய செயலை உணர்ந்து அதில் பக்தியுடனும் செயல் முறையிலும் பங்கு கொள்ள வேண்டும்" (தி.வ எண் 48)

வத்திக்கான் சங்கம் அறிவுறுத்துவது போல திருப்பலி தொடர்பில் பூரண அறிவினைப் பெற்றுக் கொள்வோம். வெறும் பார்வையாளர்களாக அல்ல, மாறாக பங்குகொள்ளும் மக்களாக, தேர்ந்து கொள்ளப்பட்ட அரச, குருத்துவ, இறைமக்களின் கூட்டமாக (1 பேதுரு 2:9) வாழ்வில் கற்றுக் கொண்ட-வற்றை பகிர்ந்து கொள்வோம். திருப்பலியின் மகிமை-தனை உலகெங்கும் எடுத்துக் கூறுவோம்.

**தொகுப்பு : சகோ. டிலோயிட்சன் பெர்னாண்டோ தேசிய குருமடம், கண்டி**



## மணமகள் தேவை

கொழும்பை பிறப்பிடமாகவும் றோமன் கத்தோலிக்கம் 1984ல் பிறந்த தனியார் நிறுவனத்தில் Executire ஆக தொழில் புரியும் மகனுக்கு தகுந்த மணமகளை எதிர்-பார்க்கின்றோம்.

**தொடர்புகளுக்கு 0721354112, 0725855582**

(N 1655)

## 11 இறைவாக்கினர்...

மிகத்துல்லியமாக விவரிக்கிறது. கடவுள் தம்மை நம்புவோரை ஒருபோதும் கைவிடுவதில்லை. அவர் என்றும் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்ற செய்தியையும் முன்வைக்கிறது.

**இறைவாக்கினர் இந்நூல் வழியாக அறிவிக்கும் செய்தி:**

கடவுள் நினிவே நகரை நிச்சயம் பழிவாங்குவார். தங்களை பலவகைகளில் கொடுமைப்படுத்தித் துன்புறுத்திய அசீரியரும், மற்றும் கடவுளின் மக்களை ஒடுக்குவோரும் அழிவுக்குள்ளாவது, கடவுளின் மக்களுக்கு பெரு மகிழ்ச்சியை வருவிக்கும். அசீரியா இஸ்ரயேல் நாட்டை சூறையாடி, அதனை மிருகங்கள் தங்கள் இரையைக் கிழிப்பது போன்று சின்னாபின்னமாக சிதைத்து அழித்தது. இப்பொழுது அதே துன்பங்களை சந்திக்க வேண்டிய நிலை அசீரியாவுக்கு ஏற்பட்டுள்ளது. இப்போது அசீரியா சூறையாடப்பட்டு மற்றவர்களுக்கு இரையாக ஆகிவிடும் நிலையில் உள்ளது. ஆயினும் யூதா அரசு அழிவிலிருந்துக் காப்பாற்றப்படும்.

இறைவாக்கினரின் எழுத்துக்கள் என்றென்றும் உண்மையானவராக விளங்கும் கடவுள் யூதா நாட்டை கைவிடவில்லை, அவரது எதிரியான அசீரியா தண்டிக்கப்படும். கடவுள் யூதா நாட்டு எதிரிகளின் மீது வெற்றிக்கொள்வார், தாம் தேர்ந்துக் கொண்ட இனமான இஸ்ரயேலை எவ்வாறு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தாரோ அவ்வாறே மீண்டும் அவர்களை அசீரியரின் தளைகளினின்று விடுவிப்பார் என்பனவற்றை தெளிவுற எடுத்துரைக்கின்றன.

## XVII கற்றாழை

நேரடியாக சூரிய ஒளியின் தாக்கத்திலிருந்து தப்பிக்க (Sun screen) காற்றாழைக் கூழைப் பூசிக்கொள்ளலாம். உடலில் தேய்த்துக் குளிக்கவும் கற்றாழையைப் பயன்படுத்தலாம். வறண்ட சருமம் கொண்டவர்கள் கற்றாழையைப் பூசிவர, தோல் நீர்த்தன்மை பெற்று தேகம் புத்துணர்ச்சி பெறும். தோலில் சுருக்கங்கள் உருவாவதைத் தடுக்கும்.

கருப்பையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கொடுப்பதால், கற்றாழை "பெண்களுக்கான வரப்பிரசாதம்!". மாதவிடாய் காலத்தில் உண்டாகும் அடிவயிற்று வலியைக் குறைக்க, கற்றாழைச் சாற்றில் சிறிது பனங்கற்கண்டு சேர்த்துக் கொடுப்பது வழக்கம்.

கர்ப்பிணிகளின் உடற்சூட்டைத் தணிக்க, சுகப்பிரசவத்தைத் தூண்ட உதவும் "பாவனபஞ்சாங்குல தைலத்தில்" கற்றாழை சேர்க்கப்படுகிறது. கற்றாழை-யைக் கொண்டு தயாரிக்கப்படும் பெண்களுக்கான சித்த மருந்துகளின் எண்ணிக்கையோ அதிகம்.

ஆசனவாய் சார்ந்த நோய்களைத் தடுக்க உதவும் "குமரி எண்ணெய்", கருப்பைக்கு வலுவூட்டும் "குமரி லேகியம்" என சித்த மருந்துகளில் கற்றாழையின் பங்கு அதிகம். அதிவெப்பம் காரணமாகக் கண்களில் உண்டாகும் எரிச்சலைக் குறைக்க, சிறுதுண்டு கற்றாழையைக் கண்களின் மீது வைத்துக் கட்டலாம்.

கற்றாழை மடல்களுக்கு இடையில் இரவு முழுவதும் வைத்து முளைகட்டிய வெந்தயத்தைச் சாப்பிட்டுவர வாய்ப்புண், வயிற்றுப்புண் குணமாகும். கற்றாழையின் உலர்ந்த பாலுக்குக் கரியபோளம், மூசாம்பரம் போன்ற பெயர்கள் உள்ளன. கருப்பையில் உண்டாகும் தொந்தரவுகளுக்கு முக்கிய மருந்தாக கரியபோளம் பயன்படுகிறது.

ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயமாக இருக்க வேண்டிய மூலிகைப் பட்டியலில் கற்றாழையும் ஒன்று. வளமான மண்ணும் சிறிது நீர் வளமும் இருந்தால், கற்றாழைகள் செழிப்பான வளர்ச்சியைக் கொடுக்கும். விரைவில் தாய்க் கற்றாழையைச் சுற்றி உருவெடுக்கும் பல அழகான "கற்றாழைக் குழந்தை" களை ரசிக்க இருகண்கள் போதாது.

# "எல்லாம் சரியாகிவிடும், கவலைப்படாதீர்கள்"



1965ம் ஆண்டு, வியட்நாம் போரில், நிலத்தடி கண்ணிவெடி ஒன்றில் கால் வைத்ததால், தன் இரு கால்களையும் இழந்தவர் பாப் பட்லர் (Bob Butler) என்ற இளம் இராணுவ வீரர். "போர் நாயகன்" (War hero) என்ற பெருமையுடன், சக்கர நாற்காலியில் வீடு திரும்பினார் பாப். கால்களை இழந்தாலும், துணிவுடன் வாழ்வை எதிர்கொண்டார். சில ஆண்டுகள் சென்று, தன் வீரத்தையும், பிறரன்பையும் நிலைநாட்ட, மீண்டும் ஒரு வாய்ப்பு அவருக்கு உருவானது.

ஒரு நாள் அவர் தன் வீட்டுத் தோட்டத்தில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தபோது, அடுத்த வீட்டிலிருந்து ஒரு பெண் அலறுவதைக் கேட்டார். சக்கர நாற்காலியில் அங்கு வேகமாகச் சென்றார். அங்கு, வீட்டின் பின்புறத்தில் இருந்த நீச்சல் குளத்திற்கு அருகே நின்றபடி ஓர் இளம் தாய், குளத்தில் விழுந்துவிட்ட தன் 3வயது மகளைக் காப்பாற்ற முடியாமல் கத்திக் கொண்டிருந்தார். பாப் பட்லர் உடனே தண்ணீரில் குதித்து, குளத்தின் கீழ் மட்டத்தில் கிடந்த சிறுமி ஸ்டெ..பனியை (Stephanie) மேலே கொண்டுவந்து, அவருக்குத் தேவையான முதல் உதவிகளைச் செய்தார். "கவலைப் படாதீர்கள், உங்கள் மகள் பிழைத்துக்கொள்வாள்" என்று அந்தத் தாய்க்கு நம்பிக்கை அளித்தார் பாப். பேச்சு மூச்சற்று, முகமெல்லாம் நீலம் பாய்ந்திருந்த அச்சிறுமியின் உடலிலிருந்து நீரை அகற்ற அவர் செய்த முயற்சி வெற்றி கண்டது. ஸ்டெ..பனி தன் வாய் வழியாக நீரை வெளியேற்றினார். மீண்டும் மூச்சுவிடத் தொடங்கினார்.

தன் மகள் இறந்துவிட்டதாக எண்ணி, தான் கதறிக்கொண்டிருந்தபோது, அவள் பிழைத்துக் கொள்வாள் என்ற நம்பிக்கை அவருக்கு மட்டும் எவ்விதம் ஏற்பட்டதென்று, அந்தத் தாய் கேட்டபோது, தனக்கு வியட்நாமில் நிகழ்ந்த விபத்தைக் குறித்துச் சொன்னார் பாப். "நான் கண்ணிவெடியால் அடிபட்டு கிடந்தபோது, அவ்வழியே வந்த ஒரு வியட்நாம் சிறுமி, என்னை அவர் கிராமத்துக்கு இழுத்துச்சென்றார். போகும் வழியெல்லாம் அவர் என்னிடம், "எல்லாம் சரியாகிவிடும், கவலைப்படாதீர்கள்" என்று மட்டுமே சொல்லியபடி என்னை இழுத்துச்சென்றார். அன்று, அச்சிறுமி தந்த நம்பிக்கைதான் என்னை வாழ வைத்தது" என்று கூறினார், இளம் வீரர், பாப் பட்லர்.

## புதிய சிந்தனையும் பழைய சிந்தனையும்

**இன்றைய உலகில் மிகவும் தேவையானவை புதிய சிந்தனைகள்!**

பணத்தால் ஆகாதது ஒன்றுமில்லை
- இது பழைய சிந்தனை

பண்பால் ஆகாதது ஒன்றுமில்லை
- இது புதிய சிந்தனை

பதவியால் ஆகாதது ஒன்றுமில்லை
- இது பழைய சிந்தனை

பாசத்தால் ஆகாதது ஒன்றுமில்லை
- இது புதிய சிந்தனை

அழகால் ஆகாதது ஒன்றுமில்லை
- இது பழைய சிந்தனை

அடக்கத்தால் ஆகாதது ஒன்றுமில்லை
- இது புதிய சிந்தனை

போரால் ஆகாதது ஒன்றுமில்லை
- இது பழைய சிந்தனை

பொறுமையால் ஆகாதது ஒன்றுமில்லை
- இது புதிய சிந்தனை

அதிகாரத்தால் ஆகாதது ஒன்றுமில்லை
- இது பழைய சிந்தனை

அரவணைப்பால் ஆகாதது ஒன்றுமில்லை
- இது புதிய சிந்தனை

**புதிய சிந்தனைகளை நாம் எந்தச் சந்தையிலும் வாங்க முடியாது! இவை கடைப் பொருட்கள் அல்ல! மாறாக புதிய வாழ்வை உருவாக்கும் இயேசு நமக்குத் தரும் ஆசிகள்!**

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com

# ஏழு சிறுதானியங்களில் எத்தனையோ பலன்கள்!



நம் பாட்டியும் தாத்தாவும் வயதான காலத்திலும் ஆரோக்கியத்தோடு வாழ்வதைப் பார்த்திருப்போம். அதற்குக் காரணம், அவர்கள் சிறுவயதில் சாப்பிட்ட சிறுதானியங்களால் ஆன பாரம்பரிய உணவுகள் தான். இவற்றில் புரதம், நார்ச்சத்து, கால்சியம், இரும்புச்சத்து, விட்டமின்கள் போன்ற ஊட்டச்சத்துகள் அதிக அளவில் உள்ளன. அந்தவகையில் ஏழு சிறு தானியங்களும் அவற்றில் ஒளிந்துள்ள எக்கச்சக்க பலன்களும் குறித்து இப்போது பார்க்கலாம்.

## தினை

தினை புரதம், நார்ச்சத்து, விட்டமின் ஏ, விட்டமின் பி, பாஸ்பரஸ், மாவுச்சத்து, சுண்ணாம்புச்சத்து போன்ற பல ஊட்டச்சத்துக்களைக் கொண்டது. இதயத்தைப் பலப்படுத்தவும், கண்பார்வை சிறப்பாக இருக்கவும் உறுதுணையாக இருக்கும்.

குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு தினையைக் கூழாக்கித் தருவார்கள் அது, தாய்ப்பால் நன்கு சுரக்க உதவும். இது கபம் தொடர்பான நோய்களை நீக்கும். வாயுத்தொல்லையை விரட்டும். தினையில் இட்லி, அல்வா, காரப் பணியாரம், பாயாசம், அதிரசம் ஆகியவற்றைச் செய்து சாப்பிடலாம்.

## கேழ்வரகு / ராகி

அரிசி, கோதுமையைவிட கேழ்வரகில் ஊட்டச்சத்துகள் அதிகம். குறிப்பாக சுண்ணாம்புச்சத்து, இரும்புச்சத்து, பாஸ்பரஸ், நார்ச்சத்து, விட்டமின் பி அதிக அளவில் உள்ளன. இதனால் எலும்புத் தேய்மானம், இரத்தசோகை, இதய நோய், மலச்சிக்கல், சர்க்கரைநோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டோருக்குச் சிறந்தது.

ராகியைக் களியாகச் செய்து சாப்பிட்டால், உடல் உஷ்ணம் நீங்கும் உடல் வலிமை பெறும். உடல் எடையைக் குறைக்க விரும்புவோருக்கு ஏற்றது. அஜீரணக் கோளாறுகள் நீங்கும் குடற்புண்கள் குணமாகும் பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகள் சீராகும். கர்ப்பிணிப் பெண்கள் தினமுமே சாப்பிட்டுவரலாம். கேழ்வரகில் கூழ் செய்து பச்சிளம் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். இதில், இட்லி, தோசை, கொழுக்கட்டை, இடியப்பம், அடை, இனிப்பு வகைகள் என பலவற்றைச் செய்யலாம்.

## சாமை

சாமையில் அரிசியைவிடப் பலமடங்கு நார்ச்சத்து உள்ளதால், சர்க்கரை நோயாளிகளுக்கு உகந்தது. மற்ற சிறுதானியங்களைவிட சாமையில் இரும்புச்சத்து அதிகம். இது, இரத்தசோகையை நீக்க உதவும். மலச்சிக்கலைப் போக்கும். வயிறு தொடர்பான பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வைத் தரும். சாமையில் உள்ள தாதுப்புகள் உயிரணுக்களின் அளவை அதிகரிக்கச் செய்யும். இதில், இட்லி, மிளகுப் பொங்கல் (வெண்பொங்கல்), இடியப்பம், காய்கறி பிரியாணி என வகை வகையாக உணவுகளைச் செய்ய முடியும்.

## குதிரைவாலி

குதிரைவாலியில் இரும்புச்சத்து, நார்ச்சத்து, சுண்ணாம்புச்சத்து நிறைந்துள்ளன. புரதச்சத்தும் உயிர்ச்சத்தும்கூட அதிகமாக இருக்கின்றன. இதில் உள்ள நார்ச்சத்து, புற்றுநோய், உயர் இரத்த அழுத்தம், இதய நோய்களைத் தவிர்க்க உதவும். செல்களைப் பாதுகாக்கும் ஆன்டிஆக்ஸிடன்ட் ஆகச் செயல்படும் தன்மை இதற்கு உண்டு. வாயுக் கோளாறுகளைத் தீர்க்கும். இடுப்புவலி, வயிற்றுக் கடுப்பு, காய்ச்சல் போன்ற நேரங்களில் குதிரைவாலி களி, குதிரைவாலி கஞ்சி சிறந்த உணவாக இருக்கும்.

## வரகு

உடலுக்கு அதிகச் சக்தியளிக்கும் வரகில், அரிசி, கோதுமையைவிட நார்ச்சத்து அதிகம். விரைவில் செரிமானமாகும் தன்மைகொண்டது. மேலும் தானியங்களில் அதிகம் புரதம், தாது உப்புகளைக் கொண்டது. இதில், பாஸ்பரஸ், மக்னீசியம், மாங்கனீஸ், காப்பர், இரும்புச்சத்து, கால்சியம், வைட்டமின் பி அனைத்தும் நிறைந்துள்ளன.

சிறுநீர்ப் பெருக்கி மலச்சிக்கலை போக்கும் உடல்பருமனைக் குறைக்கும். இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தவும், உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும், தேவையற்ற நச்சுகளை வெளியேற்றி இரத்த ஓட்டத்தைச் சீர்செய்யவும் உதவும். கல்லீரலைச் சீராக்கும், நரம்பு மண்டலத்தையும், எலும்புகளையும் பலப்படுத்தும். மாதவிடாய்க் கோளாறு உள்ள பெண்களுக்கு வரகு, வரம். இதில் புட்டு, வெண்பொங்கல், கார பணியாரம், இட்லி, புளியோதரை, உப்புமா என விதவிதமாகச் செய்ய முடியும்.

## கம்பு

விட்டமின்கள் நிறைந்த கம்பு, உடலுக்குச் சிறந்த ஆற்றலையும் வலிமையையும் தரும். உடல் உஷ்ணத்தைக் குறைக்கும் சோர்வை நீக்கி, புத்துணர்வு தரும் அஜீரணக் கோளாறுகளைச் சரிசெய்யும். வயிற்றுப் புண் வராமல் தவிர்க்கும்.

வளரும் குழந்தைகளுக்கும் பூப்பெய்திய பெண்களுக்கும் ஏற்றது. உடலுக்கு நன்மை தரும் கொழுப்பு இதில் உள்ளதால், இதய நோயிலிருந்து பாதுகாக்கும். மேலும் சிறுநீரைப் பெருக்கி, இரத்தத்தைச் சுத்தப்படுத்தும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

## சோளம்

நார்ச்சத்து, புரதச்சத்து, மாவுச்சத்து நிறைந்த சோளம், உடல் எடை அதிகரிக்க உதவும். ஆஸ்டியோபொரோசிஸ் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சோளத்தில் செய்த உணவுகள் சிறந்தவை. தோல் தொடர்பான நோய்கள், சொரியாசிஸ், தோல் ஒவ்வாமை உள்ளவர்களுக்கு சோளம் ஏற்றதல்ல.

சர்க்கரைநோய் உள்ளவர்கள், செரிமானக் கோளாறு பிரச்சினை இருப்பவர்கள், இரத்தசோகை இருப்பவர்களுக்கு சோளம் சிறந்தது. சிறுநீரைப் பெருக்கும் உடலில் உள்ள உப்பைக் கரைக்கும். இதில் உள்ள பீட்டாகரோட்டின் கண் குறைபாடுகளைச் சரிசெய்ய உதவும். இதில் தோசை, பணியாரம் தயாரிக்கலாம்.




# உடல் எடை குறைய உதவும் தக்காளி?



தக்காளியில் புரதம், மின்ரல், நார்சத்து மற்றும் விட்டமின்கள் அதிகளவில் உள்ளன. தவிர, இது உடல் எடையைக் குறைக்க உதவும் என்றால் நம்பமுடிகிறதா?

### கலோரி குறைவு

தக்காளியில் புரதம், மின்ரல், நார்சத்து மற்றும் விட்டமின்கள் அதிகளவில் உள்ளதால் கலோரிகள் குறைவு. ஒரு சிறிய அளவு தக்காளியில் வெறும் 16 கலோரிகள் தான் உள்ளன. அதனால் இரண்டு தக்காளி சாப்பிட்டாலே வயிறு நிறைந்துவிடும். அதனால் அதிக கலோரிகள் உண்பதைத் தடுப்பதால், உடல் எடை குறையும் வாய்ப்பு உள்ளது.

### நார்சத்து அதிகம்:

உடல் எடையை குறைக்க கரையும் மற்றும் கரையாத நார்சத்துக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இது தக்காளியில் அதிகளவில் உள்ளது.

### வளர்ச்சி அதிகரிக்கும்:

தக்காளி சாப்பிடுவதால் வளர்ச்சி அதிகரிப்பதாக ஆய்வில் ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் வளர்ச்சிக்காக அதிகளவில் எடுத்துக்கொள்ள தேவையில்லை.

### குறைந்த கிளைசெமிக்:

மற்ற பழங்கள், காய்கறிகளை ஒப்பிடும் போது, கிளைசெமிக் தக்காளியில் மிககுறைவு (38). அதனால் இரத்த சர்க்கரை அதிகரிக்க நீண்ட நேரமாகும்.

### ஆண்டிஆக்ஸ்டண்ட் அதிகம்:

தக்காளியில் ஆண்டிஆக்ஸ்டண்ட் அதிகளவில் உள்ளது. இது செல்களை சேதமாவதை தடுக்கிறது. அதனால் உடல் எடையைக் குறைக்க உதவுகிறது.

# கற்றாழை ...!



## உடல்நலம் காக்கும் உன்னத மூலிகை!

முதல் பார்வையிலேயே மனதை மயக்கி காதல் வசப்பட வைக்கும் அழகான தாவரம் கற்றாழை. தோற்றத்தில் மட்டுமல்ல, மருத்துவக் குணத்திலும் கற்றாழையின் செயல்பாடுகள் அழகானவைதான்! வேனிற் காலத்துக்கென இயற்கையில் பிரத்தியேகமாகப் படைக்கப்பட்ட 'FSFS மூலிகை' கற்றாழை. இந்திய, கிரேக்க, எகிப்திய, சீனப் பாரம்பரிய மருத்துவத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் "அற்புதத் தாவரம்".

பெயர் காரணம்: பெண்களுக்கு உண்டாகும் கருப்பை சார்ந்த கோளாறுகளை நீக்குவதால் கன்னி, குமரி ஆகிய பெயர்கள் கற்றாழைக்கு நயமாகப் பொருந்துகின்றன. செங்கற்றாழை, ரயில்வே கற்றாழை, மலைக் கற்றாழை, வெண் கற்றாழை, வரிக் கற்றாழை தவிர, மேலும் பல கற்றாழை வகைகள் உள்ளன. பயன்பாட்டில் அதிகமிருப்பது சோற்றுக் கற்றாழை.

**அடையாளம்:** வறண்ட சூழலிலும் பல ஆண்டுகள் வாழும் சிறு செடி இது. சதைப்பற்றுள்ள மடல்களை அழுத்திப் பிழிந்தால் கசப்புச் சுவை கொண்ட திரவம் வெளியாகும். இதன் உட்பகுதியில் இருக்கும் கூழ் போன்ற பகுதியே "கற்றாழைச் சோறு" எனப்படுகிறது. Aloe barbadensis எனும் தாவரவியல் பெயர் கொண்ட கற்றாழை லிலியேசி (Liliaceae) குடும்பத்தைச் சேர்ந்தது. அலோசின் (Aloesin), அலோ-எமோடின் (Aloe-emodin), Aloin, Isobarbaloin, லிக்னின்ஸ், அமினோ அமிலங்கள் ஆகிய தாவர வேதிப்பொருட்கள் கற்றாழையின் உள்ளன.

**உணவாக:** தோல் சீவிய பின், உள்ளிருக்கும் பனிக்கூழ் போன்ற பகுதியை ஆறேழு முறை நீரிலிட்டுச் சுத்தம்செய்து, பின் மோருடன் கலந்து, உப்பும் சீரகத்தூளும் சேர்த்து மத்து கொண்டு நன்றாகக் கடைந்து எடுத்தால், குளுகுளு கற்றாழைப் பானம் தயார். பனிக்கட்டி இல்லாமலே குளிர்ச்சியைத் தரக்கூடிய இந்தப் பானத்தை வேனிற்காலத்தில் குடித்துவர, உடல் வெப்பம் குறையும்.

வயிற்றுப் புண்களைக் குறைப்பதற்கான சிறந்த பானம் இது. கற்றாழைக் கூழுடன் சிறிது கடுக்காய்ப் பொடி தூவி, ஒரு பாத்திரத்தில் வைக்க சில மணி நேரத்தில் வடியும் சாற்றைப் பானமாகவும் மருந்தாகவும் பயன்படுத்தலாம்.

**மருந்தாக:** கற்றாழையில் உள்ள கொலாஜென், எலாஸ்டின் போன்றவை புரதங்களின் உற்பத்தியை அதிகரித்து, தேகத்தில் உண்டாகும் வயோதிக மாற்றத்தைத் தள்ளிப்போடுவதாக ஆய்வுகள் நிரூபிக்கின்றன. வீக்க-முறுக்கி செய்கையுடைய Cglycosyl chromone எனும் பொருள் கற்றாழையிலிருந்து சமீபத்தில் பிரித்தெடுக்கப்பட்டது. வலி உண்டாக்கும் பிராடிகைனினுடைய (Bradykinin) செயல்பாட்டைத் தடுத்து, உடனடி வலிநிவாரணியாக இது செயல்படுவதையும் ஆய்வு உறுதிப்படுத்துகிறது.

மார்பகப் புற்றுநோய் வராமல் பாதுகாக்கும் தன்மை கற்றாழைக்கு இருப்பதாக ஆய்விதழ் கட்டுரை ஒன்று தெரிவிக்கிறது.

கற்றாழையை நன்றாக உலரவைத்து வற்றலாகவோ பொடியாகவோ உணவில் சேர்த்துவந்தால், "முதுமையிலும் இளமை காணலாம்" எனும் காயகல்ப முறையைப் பற்றி சித்தர் தேரையர் வலியுறுத்துகிறார்.

**வீட்டு மருந்தாக:** கற்றாழையோடு நல்லெண்ணெய் சேர்த்து காய்ச்சித் தயாரிக்கப்படும் எண்ணெய்யைத் தேய்த்துத் தலை முழுக, நல்ல உறக்கத்தைக் கொடுக்கும். தலைமுடி வளர்ச்சிக்கும் நல்லது. வாரம் ஒருமுறை கற்றாழைக் கூழோடு சிறிது உப்பு சேர்த்து வாய்க் கொப்பளித்து வர பற்கள் பலமாகும். ஈறுகளிலிருந்து வடியும் குருதியும் நிற்கும்.

நெருப்பு சுட்ட புண்களுக்கு வாழை இலையோடு சேர்த்து, கற்றாழையைப் பயன்படுத்தலாம். கை, கால் எரிச்சல், சிறுநீர் எரிச்சலைக் குறைப்பதிலும் கற்றாழையைக்கொண்டு தயாரிக்கும் மருந்துகள் பலன் தரக்கூடியவை.

**அழகு தர:** முகப் பொலிவை மெருகேற்ற வேதியியல் கலவைகள் நிறைந்த செயற்கை கிரீம்களுக்கான சிறந்த மாற்று கற்றாழை. மேல்தோலைச் சீவிவிட்டு உள்ளிருக்கும் பனிக்கூழ் போன்ற பகுதியை முகத்தில் நாள்தோறும் தடவிவர, கற்றாழையைப் போல விரைவில் முகமும் பொலிவடையும். கிரீம்கள், சோப்பு போன்ற செயற்கை அழகுசாதனப் பொருட்கள், கற்றாழையின் சத்து இல்லாமல் முழுமையடையாது.

# உலகுசார் துறவு கன்னியர் அமைப்பு சட்டத்தொகுப்பு நூல் வெளியீடு



திருஅவை, கிறிஸ்துவின் மணப்பெண் என்ற கூற்றுக்கு ஓர் அடையாளமாக, அர்ப்பணிக்கப்பட்ட கன்னியர் வாழ்கின்றனர் என்று திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

திருஅவையில் பணியாற்றிவரும் பல்வேறு துறவற சபைகளைச் சாராமல், தனி நபர்களாக அர்ப்பண வாழ்வைத் தெரிவு செய்துள்ள கன்னியர்களை மையப்படுத்தி, "Ecclesia Sponsae Imago" அதாவது, “மணப்பெண்ணின் உருவமான திருஅவை” என்ற தலைப்பில், சட்டத் தொகுப்பு நூலொன்றை, அர்ப்பணிக்கப்பட்டோர் திருப்பீட பேராயம், இப்புதனன்று வெளியிட்டது.

இந்நூலை வெளியிட்ட இப்பேராயத்தின் தலைவர் கர்தினால் João Braz de Aviz அவர்கள், தனிப்பட்ட முறையில் தங்கள் வாழ்வை அர்ப்பணிக்க முன்வரும் கன்னியர்களின் வாழ்வு முறையை, திருத்தந்தை அருளாளர் 6ம் போல் அவர்கள், 1970ம் ஆண்டு, அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டதை நினைவுகூர்ந்தார். உலகுசார் துறவு கன்னியர் அமைப்பைச் சார்ந்தோரின் அழைத்தலைச் சிறப்பிக்கும் முறையில் 2020ம் ஆண்டு, உரோம் நகரில், ஒரு பன்னாட்டு கூட்டம் நடத்தப்படும் என்று கர்தினால் João Braz de Aviz அவர்கள், இப்புதனன்று, செய்தியாளர்கள் கூட்டத்தில் அறிவித்தார்.

உலகெங்கிலும் உள்ள பல்வேறு மறைமாவட்டங்களில், உலகுசார் துறவு கன்னியரின் எண்ணிக்கை, 5000த்திற்கும் அதிகம் என்றும், இவ்வெண்ணிக்கை, ஆண்டுதோறும் கூடிவருகிறது என்றும், கர்தினால் João Braz de Aviz அவர்கள் இக்கூட்டத்தில் எடுத்துரைத்தார்.



## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“வயது முதிர்ந்தோருக்கும், நோயுற்றோருக்கும், கருவில் வளரும் குழந்தைக்கும் உதவிகள் செய்ய நாம் அழைக்கப்பட்டுள்ளோம். கருவில் உருவானது முதல், இயற்கையாக இறக்கும் வரை வாழ்வு, பாதுகாக்கப்பட்டு, அன்புகூரப்பட வேண்டும்”

“சித்ரவதைப்படுத்துதல், சாவான பாவம் என்றும், சித்ரவதையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்கு கிறிஸ்தவ சமூகங்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்”

“நாம் கடவுளின் கொடைகளைப் பெறுவது, அவற்றை, மற்றவரோடு பகிர்ந்து கொள்வதற்காகவே”

# கர்தினால் சாக்கோவை வாழ்த்திய உலக கிறிஸ்தவ சபைகள் மன்றம்



கல்தேய வழிபாட்டு முறை முதுபெரும்தந்தை லூயிஸ் இரபேல் சாக்கோ அவர்களுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கர்தினால் பொறுப்பை வழங்கியதற்காக, உலக கிறிஸ்தவ சபைகள் மன்றம், தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

இந்த மன்றத்தின் பொதுச் செயலர் Olav Fykse Tveit அவர்கள், ஆடி 2, இச்செவ்வாயன்று அனுப்பியுள்ள வாழ்த்து மடலில், முதுபெரும் தந்தை, கர்தினால் சாக்கோ அவர்கள், ஈராக் நாட்டிலும், மத்தியக் கிழக்குப் பகுதியிலும் மேற்கொண்டுள்ள தலைமைப்பணியைப் பாராட்டியுள்ளார்.

ஈராக்கிலும், மத்தியக் கிழக்கு நாடுகளிலும் நிலையான அமைதியைக் கொணர கர்தினால் சாக்கோ அவர்கள் எடுத்துவரும் முயற்சிகளுக்கு உலக கிறிஸ்தவ சபைகள் மன்றத்தின் ஆதரவு உண்டு என்ற உறுதியையும் Olav Fykse Tveit அவர்கள் இம்மடலில் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக், மற்றும், மத்தியக் கிழக்குப் பகுதி மக்களுக்கு, குறிப்பாக, கிறிஸ்தவர்களுக்கு கர்தினால் சாக்கோ அவர்கள் நம்பிக்கையின் அடையாளமாக விளங்குவதற்கு, உலக கிறிஸ்தவ சபைகள் மன்றத்தின் பொதுச்செயலர், Olav Fykse Tveit அவர்கள், தன் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துள்ளார்.

# கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பயணம் : பாரி நகரில் திருத்தந்தை



இயேசு கிறிஸ்து மனிதஉடல் எடுத்த புண்ணிய பூமி, கிறிஸ்தவம் பிறந்த புனித பூமி, காலம் காலமாய் வன்முறைகள் நிறைந்து, அமைதியின்றி தவிக்கின்றது. அப்பகுதியில் வாழ்கின்ற கிறிஸ்தவர்கள் தொடர்ந்து துன்பங்களையும், நெருக்கடிகளையும் அனுபவித்து வருகின்றனர். கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பில் ஆர்வமாய் ஈடுபட்டுவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இதுவரை இடம்பெறாத ஒரு நிகழ்வை, ஆடி 07, பாரி நகரில் நிறைவேற்றினார். தென் இத்தாலியிலுள்ள, அட்ரியாட்ரிக் கடற்கரை நகரமான பாரியின் கத்தோலிக்க பேராலயத்தில், ஆலசய நகர் புனித நிக்கொலாஸ் அவர்களின் திருப்பண்டம் வைக்கப்பட்டுள்ளது. அமைதி, ஒருமைப்பாடு மற்றும் கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடலுக்குச் சான்றாய் விளங்கும் இப்புனிதர், ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்களுக்கும் மிகவும் முக்கியமானவர். எனவே மத்திய கிழக்கில் அமைதிக்காகச் செபிப்பதற்காக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்று, அப்பகுதியில் பணியாற்றும் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ சபைகளின் முதுபெரும் தந்தையர் மற்றும் கிறிஸ்தவத் தலைவர்கள், 7.7.2018 காலையில் பாரி நகரில் கூடினர். நொறுங்கிய இதயங்களைக் குணப்படுத்தும் மற்றும், காயங்களைப் பாரமரிக்கும் அனைத்து ஆறுதலின் கடவுள், நம் செபத்தைக் கேட்டருள்வாராக, மத்திய கிழக்கில் அமைதி நிலவுவதாக! என்ற சொற்களை, தன் டுவிட்டரில் வெளியிட்டு, இந்த ஒருநாள் கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பயணத்தை, சனிக்கிழமை காலை ஏழு மணிக்கு வத்திக்கானிலிருந்து ஹெலிகாப்டரில் தொடங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### பாரி நகரில் வரவேற்பு

காலை 8.15 மணிக்கு பாரி நகர் கிறிஸ்டோபர் கொலம்பஸ் வளாகத்தை அடைந்த திருத்தந்தையை, பாரி பேராயர் பிரான்செஸ்கோ கக்குச்சி, பூல்யா மாநிலத் தலைவர் Michele Emiliano, பாரி நகராட்சி தலைவர் Marilisa Magno, பாரி மேயர் Antonio Decaro ஆகியோர் வரவேற்றனர். அங்கிருந்து பாரி புனித நிக்கொலாஸ் பேராலயத்திற்கு காரில் சென்றார் திருத்தந்தை. அப்பேராலயத்திற்கு முன், மத்திய கிழக்கின் ஏறத்தாழ 19, கிறிஸ்தவ சபைகள் மற்றும் சமூகங்களின் தலைவர்கள் திருத்தந்தைக்காகக் காத்திருந்தனர். இரஷ்ய ஆர்த்தடாக்ஸ் முதுபெரும்தந்தை கிரில் அவர்கள், தனது பிரதிநிதியை அனுப்பியிருந்தார். இத்தலைவர்களை வரவேற்ற பாரி நகர மேயர் தெகாரோ அவர்கள், “பாரி நகர் பெருமகிழ்ச்சியடைகின்றது. இந்த நகர், மக்களைப் பிரிப்பதாக இல்லாமல் இணைப்பதாக உள்ளது, ஆயிரமாம் ஆண்டு ஆரம்பத்தில் இத்திருப்பண்டம் பாரிக்கு வந்துள்ளது, அன்றுமுதல் இங்கு இது போற்றப்பட்டு வருகிறது, அமைதி மற்றும் உரையாடலின் உறுதியான பாதை இல்லாமல் வருங்காலத்தைச் சிந்தித்துப் பார்க்க இயலாது” என்று கூறினார். அனைத்து கிறிஸ்தவத் தலைவர்களுக்கும், பூல்யா ஒலிவக்கிளைகள் பதிக்கப்பட்ட, புனித நிக்கொலாஸ் அவர்களின் அழகிய வண்ணப்படம் ஒன்றையும் அளித்தார் மேயர்.

### பாரி கடற்கரையில் கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வழிபாடு

கிறிஸ்தவத் தலைவர்கள் எல்லாரும் பசிலிக்காவுக்குள் சென்று புனித நிக்கொலாஸ் திருப்பண்டத்தின் முன்னர் செபித்தனர். அதன்பின்னர் அவர்கள் எல்லாரும் பேருந்தில், பாரி கடற்கரைக்குச் சென்று "Rotonda" என்ற பகுதியில் அமைதிக்காக, கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வழிபாட்டில் கலந்துகொண்டனர். ஏறத்தாழ ஐம்பதாயிரம் கிறிஸ்தவர்கள் பங்குபெற்ற இச்செப வழிபாடு, கிரேக்கம், அசீரியம், அர்மேனிய சிரியம் போன்ற பழங்கால கிறிஸ்தவத்தின் மொழிகளில் நடைபெற்றது. அமைதியின் அடையாளமாக, ஒவ்வொரு கிறிஸ்தவத் தலைவர்களும் மெழுகுதிரிகளை ஏற்றினர். உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்ற தலைப்பில் நடைபெற்ற இச்செப வழிபாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மறையுரையாற்றினார். இவ்வழிபாட்டிற்குப் பின்னர், திருத்தந்தையும், ஏனைய முதுபெரும் தந்தையரும், கிறிஸ்தவத் தலைவர்களும் பேருந்தில் ஏறி, புனித நிக்கொலாஸ் பசிலிக்கா சென்றனர். அங்கு கதவுகள் பூட்டப்பட்ட நிலையில், கலந்துரையாடினர். அதன் முடிவில் பசிலிக்கா வளாகத்தில் திருத்தந்தை உரையாற்றினார். அதன் பின்னர் பகல் 1.30 மணிக்கு பாரி பேராயர் இல்லத்தில் மதிய உணவு அருந்தினர். மாலை 3.30 மணிக்கு முதுபெரும்தந்தையரிடம் விடைபெற்ற திருத்தந்தை, ஹெலிகாப்டரில் ஏறுவதற்கு முன்னர், அரசு அதிகாரிகளுக்கு நன்றி சொல்லி வாழ்த்தினார். மாலை 4 மணிக்கு வத்திக்கானுக்குப் புறப்பட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### பாரி செபவழிபாட்டின் இறுதியில் திருத்தந்தையின் உரை

அருள்நிறைந்த இந்தப் பகிர்வுத் தருணத்திற்கு நன்றி கூறுகிறேன். நாம் இங்கு கூடிவந்திருப்பது, அமைதியின் இளவரசராம் இயேசுவுக்கு நாம் வழங்கும் ஒரு சாட்சியம்.

### நற்செய்தியின் சக்தி, சிலுவையிலிருந்து...

இயேசுவின் நற்செய்தி மத்தியக்கிழக்குப் பகுதியிலிருந்து வந்தது. இவ்வுலக சக்திகளைவிட, சிலுவையின் சக்தியுடன் அது பிணைக்கப்பட்டதால், இத்தனை நூற்றாண்டுகளாக மனிதர்களின் உள்ளங்களை தன்பால் ஈர்த்து வந்துள்ளது. இறைவன் வகுத்துள்ள திட்டங்களின்படி நாம் மனமாற்றம் அடைவதற்கு, நற்செய்தி நம்மை நாள்தோறும் அழைக்கிறது. புனித பூமிக்கும், எகிப்து, ஜோர்டான், லெபனான், சிரியா, துருக்கி ஆகிய நாடுகளில் உள்ள திருத்தலங்களுக்கும் நாம் செல்லும்போது, நம் நம்பிக்கை இன்னும் ஆழப்படுகிறது.

### உண்மை அமைதி நிலவ வழிகள்

நாம் எழுப்பியுள்ள மதில் சுவர்களும், வெளிப்படுத்தும் அதிகார அடையாளங்களும் அமைதிக்கு நம்மை அழைத்துச் செல்லாது. திறந்த, நல்ல உள்ளத்துடன் நாம் மேற்கொள்ளும் உரையாடலே நம்மை அமைதிக்கு அழைத்துச் செல்லும்.

உண்மையான அமைதி நிலவவேண்டுமெனில், அதிகாரத்தில் இருப்போர், தங்கள் சொந்த நலன்களை விடுத்து, உண்மையான அமைதிக்காக திண்ணமான முறையில் உழைக்கவேண்டும். மக்களைக் கிழித்து எறியும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் இனி வேண்டாம்!

மத்தியக் கிழக்குப் பகுதியை பெரிதும் வதைக்கும் சாட்டையடியாக விளங்கும் போர்களால் பெரிதும் பாதிக்கப்படுவது, வறியோரே. போரினால் சீரழிந்துள்ள சிரியாவை நினைவில் கொள்வோம்.

### எருசலேம், பொதுவான புனித நகரம்

ஆழ்ந்த வேதனையோடு, அதே வேளை, தொடர்ந்த நம்பிக்கையோடு, நமது பார்வையை எருசலேம் பக்கம் திருப்புவோம். இந்தப் புனித நகரம், உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள், யூதர்கள், முஸ்லிம்கள் அனைவருக்கும் சொந்தமான நகரம்.

அகில உலக நாடுகளின் சமுதாயம் பரிந்துரைக்கும் ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதே, இஸ்ரேல் மக்களுக்கும், பாலஸ்தீனிய மக்களுக்கும் இடையே நிலையான அமைதியைக் கொணரும்.

நம்பிக்கையின் முகமாக விளங்குவது, குழந்தைகள். இப்பகுதியில் வாழும் குழந்தைகள், பல ஆண்டுகளாக அழிவையும், மரணத்தையும், போரினால் உருவாகும் ஒலிகளையும் பார்த்தும், கேட்டும் வாழ்ந்து வருகின்றனர். இக்குழந்தைகள் எழுப்பும் அழுகுரலை உலக சமுதாயம் கேட்கட்டும்! இக்குழந்தைகளின் மீது அக்கறை கொண்ட நாம், அமைதிக்காக மீண்டும் நம்மையே அர்ப்பணிப்போம்.

# புனித கார்மேல் அன்னை திருவிழா

*"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகிறது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது" (லூக். 1:47)*



**கார்மேல் அன்னையே காருண்ணியத் தாயே!**
**காலமெல்லாம் எம்மைக் காக்கும் எம் அன்புத்தாயே!**
**காசினியில் வாழும் உம்மைந்தர்கள் எம்மை காப்பாய் தாயே**
**காக்கும் தெய்வமாய் காலமெல்லாம் எம்மை**
**ஆள்வாய் தாயே!**

**மாசில்லாக் கன்னியாய் மாமறை புகழும் மரியே!**
**மாந்தர்கள் போற்றும் மாமரித்தாயே!**
**மாதாவே தாயே மரியே மகிமையின் பூரணியே!**
**மாண்புடன் உம் மக்கள் வாழ வழிகாட்டுவாய் தாயே!**

**இறைமகன் இயேசுவின் தாயாய் இகமதில் வாழ்பவளே**
**இன்னலுறும் மக்களை இறைவன்பால் இட்டுச்செல்வாயே**
**இறையருள் நிரம்பப் பெற்று இறையாசி பெற்றாயே**
**இதோ! உம் மக்கள் நாம் உம்மை வாழ்த்துகின்றோம் தாயே!**

**அருள் நிறைந்தவளே! ஆண்டவர் உம்முடனே என**
**அழைக்கப்பட்டவளே**
**அன்னையே கார்மேல் அன்னையே கரம் கூப்பி உம்மை**
**வணங்குகின்றோம் தாயே!**
**அமலோற்பவியே! அருள்நிறை தாயே!**
**அடைக்கலம் அளிப்பாயே அனைவரையும்**
**அரவணைப்பாயே!**

**ஆண்டவரின் அடிமை நானே என அவனியில் வாழ்ந்தவளே**
**ஆன்மீகம் நிறைந்தவளாய் அடியோர் எமக்கு உதாரணமாய்**
**வாழ்ந்தவளே**
**ஆண்டவரின் தாயாரே! ஆசிநிரம்பப் பெற்றவளாய்**
**அவனியில் வாழ்ந்தவளே!**
**ஆனந்தம் பெருகிட அகிலமெல்லாம் போற்றிப் புகழ்ந்திட**
**வாழ்ந்தவளே!**

## 16.07.2018

**தேவனின் திருமகளாய் இறையேசுவின் திருத்தாயாய்,**
**தேடி வந்தவர்களுக்கு திருத்துணையாய் தஞ்சமளிப்பாய்**
**தேவாதி தேவன் திரியேக தேவனால் விரும்பப் பெற்றாயே!**
**தேவலோக கன்னியாய் திருச்சபையின் தாயாய்**
**திகழப் பெற்றாயே!**

**வாழ்க அரசியே! இறைவனின் தாயே! கார்மேல் மலரே!**
**வாழ்த்துகின்றோம் அன்னையே! எம்மை**
**வாழ வைப்பாய் அன்னையே!**
**வாழ்வோர் அனைவரின் தாயே! வானோர் துதிக்கும்**
**இறைவியே வாழி!**
**வாழ்க! வாழ்க! மரியே! கார்மேல் தாயே!**
**வாழிய, வாழியவே**

**கார்மேல் சபையினர் எம்மை கண்ணின் மணிபோல் காக்க**
**வேண்டுகிறோம் தாயே**
**கர்த்தர் இயேசுவின் பத்தினிகளாய் நாம் கண்ணியமுடன்**
**வாழ காப்பாயே தாயே!**
**காலமெல்லாம் நாம் கடவுள் பக்தியில் வாழ**
**வழிகாட்டுவாயே தாயே**
**காத்தருள்வாய் எம் சபையின் ஒவ்வொரு உறுப்பினரையும்**
**கருணைத்தாயே அம்மா**

. . . . . . . . . . . . . . . .

ஆக்கம்:
அருட்சகோதரி. டெலாறோஸ் அ.கா

. . . . . . . . . . . . . . . .






## உத்தரியம் அணிபவர்கள் தங்களைக் கார்மேல் சபையுடன் பதிவு செய்து கொள்ளும் முறை

**குரு:** ஆண்டவர் உம் இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்

**மற்றவர்கள்:** உம் மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.

**குரு:** ஆண்டவரே என் செபத்தைக் கேட்டருளும்.

**மற்றவர்கள்:** என் அழும் குரல் உம்மிடம் வந்து சேருவதாக.

**குரு:** ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

**மற்றவர்:** உம் ஆன்மாவோடும் இருப்பதாக.

**குரு:** ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, மனித குலத்தின் மீட்பரே, உம் வலது கரத்தால் இந்த உத்தரியங்களை ஆசீர்வதித்து புனிதப்படுத்தியருளும். இவைகளை உம்மேல் உள்ள அன்பிற்காகவும், உம் அன்னை கார்மேல் மலையில் தூய கன்னி மரியா மேலுள்ள அன்பிற்காகவும் உம் ஊழியர்கள் பக்தியுடன் அணிந்து கொள்வார்களாக. அன்னை மரியாவின் பரிந்து பேசுதலால் பகைவனின் தீமைகளிலிருந்து காப்பாற்றப்பட்டு உம் அருளை மரணம் வரைக் காத்துக் கொள்வார்களாக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சிபுரிபவர் நீரே, ஆமென்.

**[பின்னர் உத்தரியங்களை மந்திரித்து மக்களுக்கு அணிவித்துக் கொண்டு குரு செபிப்பார்]**

இந்த அருள் மிகுந்த உத்தரியங்களை ஏற்றுக்கொள்ளவும், பாவக் கறையேதும் இல்லாமல் அணிந்துகொள்ளவும், உங்களை அனைத்துத் தீமைகளினின்று காப்பாற்றி, நிலை வாழ்விற்கு அழைத்துச் செல்லவும், மிகவும் தூய கன்னி மரியாவிடம் அவருடைய தூய்மையானப் பண்புகளின் வழியாகக் கேளுங்கள். ஆமென்.

**[உத்தரியம் அணிவிக்கும் சடங்கு முடிந்த பிறகு தொடர்ந்து குரு செபிப்பார்]**

**குரு:** நான் எனக்கு அருளப்பட்ட தெய்வீக வல்லமையால் கார்மேல் சபையினர், இயேசு கிறிஸ்துவின் வழியாகப் பெற்றுக்கொண்ட தெய்வீகச் சலுகைகளில் நீங்களும் பங்கேற்றுக் கொள்ள உங்களை அனுமதிக்கிறேன். தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே ஆமென்.

விண்ணகத்தையும், மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல இறைவன் உங்களைக் கார்மேல் மலையின் தூய கன்னி மரியாவின் ஆன்மீகத் தோழமையில் சேர்ப்பாராக. தொடக்கக் கால பாம்பின் தலையை நசுக்க கன்னி மரியாவைக் கெஞ்சிக் கேட்போம். அதனால் நீங்கள் நம் ஆண்டவர் இயேசு வழியாக உங்களுடைய நிலைவாழ்வு உரிமைப்பேற்றை அடைந்துகொள்வீர்களாக! ஆமென்!



# “மறைபரப்பு பணிக்காக நீதி, அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் தேவை”



**நல்லிணக்கத்திற்கான பணிகள் யாவும் எம் கடவுளுடனான எமது ஒன்றிப்பினை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும்.**

## (நல்லிணக்கத்திற்கான பணியற்ற திருச்சபை உலர்ந்து போனது)

கிளாரட் (CMF) சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 2017-2018ம் ஆண்டு கல்வியாண்டின் இறுதி கருத்தமர்வு கண்டி குருதெனியாவில் கிளாரட் இல்லத்தில் நடைபெற்றது. இக்கருத்தமர்வினை அச்சபையின் குருவானவர் அருட்கலாநிதி. ஜோசப் ஜெயசீலன் அடிகளார் வழிநடத்தினார். இச்செயலமர்விற்காக மேற்கண்ட தொனிப்பொருளினை தெரிவு செய்தார். அவர் அமெரிக்க நாட்டின் சிக்காக்கோ பல்கலைக்-கழகத்தில் 2018 “நல்லிணக்கம்” தொடர்பான கல்வியினை தொடர்ந்து கலாநிதிப் பட்டத்தினை பெற்றுக்கொண்டார். அது தொடர்பான புத்தகத்தையும் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய கருத்தமர்வினை நான் தொகுத்து வழங்கியுள்ளேன்.

நல்லிணக்கத்திற்கான பணியற்ற திருச்சபை உலர்ந்து போனது என்பதன் கருத்து திருச்சபை தன் இயல்பிலேயே நல்லிணக்கத்திற்கான பணியினை தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு நல்லிணக்கம் என்று குறிப்பிடுவது ஒப்புரவு திருவருட்சாதனம் அல்ல. மாறாக இந்த நல்லிணக்கம் என்பது கடவுளின் முதல் பணியாக இருக்கின்றது. நல்லிணக்கம் தொடர்பாக விவிலியம் குறிப்பிட்டு பேசப்பட்டாலும், விவிலியத்தின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரையும் தொனிப்பொருளாக இருப்பது நல்லிணக்கமாகும். வெளிப்படையான ஓரிரு இடங்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் மறைமுகமாக அது நல்லிணக்கம் தொடர்பாகவே பொருளினை மேற்கோள் காட்டி நிற்கின்றது.

### நல்லிணக்கம் தொடர்பான கிறிஸ்தவ இறையியல்

நல்லிணக்கம் இல்லாவிட்டால் திருச்சபை மறைபரப்பு பணியினை மேற்கொள்ள முடியாது. பழைய ஏற்பாட்டினை எடுத்துக்கொண்டால் ஜோசப் அவருடைய சகோதரர்களுடன் நல்லிணக்கம் செய்து கொள்கின்றான். குறிப்பாக இஸ்ரயேல் மக்களுடைய வரலாற்றில் கடவுள் எவ்வாறு நல்லிணக்கம் செய்து கொண்டு மக்களை வழிநடத்தினார் என்பதை காண்கின்றோம். புதிய ஏற்பாட்டினை எடுத்துக் கொண்டால் மூன்றில் ஒரு பகுதி நல்லிணக்கம் தொடர்பாகவே இயேசுவின் படிப்பினைகள் அமைந்துள்ளன. இயேசுவின் புதுமைகள் குறிப்பாக பாவங்களை மன்னித்து மக்களை குணப்படு-த்தியமை நல்லிணக்கத்தின் அடையாளம். லூக்கா நற்செய்தி 15ம் அதிகாரத்தில் வரும் காணாமல் போன மகனின் உவமையும் இந்த நல்லிணக்கத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

தொடர்ந்து வருகின்ற திருத்தூதர்களின் பணியும் குறிப்பாக “எருசலேம் திருச்சங்கமும்” நல்லிணக்கத்தின் பணிகளாக திகழ்கின்றது. அத்தோடு புனித பவுலின் மடல்களும், இதனை உறுதிப்படுத்துகின்றது. எபேசி. 2:14 கூறுவது போல “ஏனெனில் அவரே நமக்கு அமைதி தருபவர். அவரே இரண்டு இனத்தையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை, தமது உடலில் ஏற்று, துன்பத்தின் வழியாக தகர்த்தெறிந்து, அவர்களை ஒன்றுபடுத்தினார்.” எனவே கடவுளின் நோக்கமும் பணியும் மக்களை ஒன்றுதிரட்டுவதே. ஆகவேதான் கிறிஸ்தவ இறையியல் ‘கடவுளின் முதன்மையான பணியாக இருப்பது நல்லிணக்கம்’ என்பதை கற்பிக்கின்றது. திருத்தந்தை 16ம் பெனடிக் கூறுகிறார் ‘இன்றை மறைபரப்புப் பணி நல்லிணக்கத்தின் தன்மையினை பெற்றுக்கொள்கின்றது’

### செங்குத்தான மற்றும் கிடையான நல்லிணக்கம்

செங்குத்தான நல்லிணக்கம் என்பது (Vertical Reconciliation) கடவுள் மனிதனை தன்னுடன் ஒப்புரவாக்கிக்கொள்ள மேற்கொள்ளும் நல்லிணக்கமாக இருக்கின்றது. “நாம் கடவுளுக்குப் பகைவர்களாயிருந்தாலும் அவருடைய மகன் உயிரைக் கொடுத்ததால் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம். அப்படியானால் ஒப்புரவாக்கப்பட்டுள்ள நாம், வாழும் அவர் மகன் வழியாகவே மீட்கப்படுவோம் என மிக உறுதியாய் நம்பலாம் அன்றோ!” (உரோ.5:10)

கிடையான நல்லிணக்கம் (Horizontal Reconciliation) செங்குத்தான நல்லிணக்கத்துடன் இணைந்து பிளவுபட்ட மனிதர்களிடையே (தனிப்பட்ட அல்லது குழு) சமரசத்தை மேற்கொள்கின்றது. திருமுழுக்கு பெற்றுக்கொண்ட ஒவ்வொரு மனிதரிடமும் நல்லிணக்கத்திற்கான பணி ஒப்படைக்கப்படுகின்றது. (காண். 2கொரி. 5:17-20)

### கிறிஸ்தவ நல்லிணக்கத்தின் விசேட பண்புகள்

1) கடவுளே நல்லிணக்கத்தினை உருவாக்குபவர்.
2) பாதிக்கப்பட்டவரை குணப்படுத்துவதிலிருந்து கடவுள் நல்லிணக்கத்தினை தொடங்குகின்றார்.
3) நல்லிணக்கத்திற்கான பாதையில் கடவுள் பாதிக்கப்பட்டவரையும், தவறிளைத்தவர்களையும் புதுப்படைப்பாக மாற்றுகின்றார்.
4) பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களை கிறிஸ்த-வர்கள், இயேசுவின் சிலுவை போதனை மற்றும் இறப்போடு ஒப்பிட்டு நோக்குகிறார்கள்.
5) நல்லிணக்கத்திற்கான முயற்சிகள் இறுதிநாள் வரை முழுமையடைவதில்லை.

### நல்லிணக்க ஆன்மீகம்

நல்லிணக்கத்திற்கான பணிகள் யாவும் எம் கடவுளுடனான எமது ஒன்றிப்பினை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும். காரணம் அதே நல்லிணக்கத்தினை உருவாக்குபவராக இருக்கின்றார். ஒழுக்கவியலுக்கான அடித்தளத்தை உருவாக்குவது, நல்லிணக்க பணியினை உருவாக்குவதினை அடிப்படையாக கொண்டுள்ளது. இந்த ஒழுக்கவியலுக்கான அடித்தளம் எமக்கு இலகுவான முறையில் கற்பிப்பது ‘அனைவரும் கடவுளின் பிள்ளைகள், கடவுள் தொலைந்துபோன ஒவ்வொரு ஆட்டினையும் கருத்திற்கொண்டுள்ளார்’. எனவே திருச்சபையின் அடிப்படை அமைப்பாக இருப்பது நல்லிணக்கத்திற்கான பணிகள்.

### நல்லிணக்கத்திற்கான திருச்சபையின் ஆதாரங்கள்

1) திருச்சபையின் முதன்மையான ஆதாரம் நல்லிணக்கம் தொடர்பான செய்தி. அதிலிருந்து பெற்றுக்கொள்கின்ற ஆன்மீகம்.
2) திருச்சபையில் திருச்சட்டங்களும், அருளடையாயங்களும்
3) நல்லிணக்கத்தினை உருவாக்குவதற்காக கொண்டுள்ள சக்தி.
4) கத்தோலிக்க சமூக படிப்பினைகள்.
5) திருச்சபையின் அதிகாரம்
6) திருச்சபையின் ஆரம்ப கதைகள் மற்றும் புறந்தள்ளப்பட்ட மக்களின் குரலும்

### இறுதியாக

இயேசுவின் முதன்மையான கட்டளை கடவுளை அன்பு செய்வதும், மனிதனை அன்பு செய்வதும். இது இரண்டு கட்டளைகள் அல்ல. மாறாக ஒரு கட்டளை. இரண்டும் ஒன்றை ஒன்று பூர்த்தி செய்கின்றது. ‘மகிழ்வும், எதிர்நோக்கும், ஏக்கமும் கவலையும், இன்றைய மனிதரின் வாழ்வில் குறிப்பாக ஏழைகள் மற்றும் துன்புறுவோர் அனைவரின் வாழ்வில் உள்ளன. இம்மனிதரின் மகிழ்வும் எதிர்நோக்கும் ஏக்கமும் கவலையும் கிறிஸ்தவர்க்கும் முற்றிலும் உரியனவே. கிறிஸ்துவைப் பின்பற்றும் இவர்கள் இதயத்தில் உண்மையான மனிதக் கூறுகள் யாவும் எதிரொலிக்கத்தான் செய்கின்றன’ (இ.உ.தி. எண் 1)

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு புதிய வழி வாழ்வினை உருவாக்க வேண்டும். காரணம் இப்புதியவழி மனித வாழ்வில் எதிர்பாராத விதமாக நடைபெறுகின்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணும் இந்த புதிய வாழ்வு மாற்றம் தற்போதைய சரித்திர நிலைமையினை ஒன்றுபடுத்துவதுடன் இது திருச்சபையின் மறைபரப்பு பணியிலும் ஆழமாக வேரூன்றி உள்ளது.

எனவே இலங்கையின் போருக்கு பின்னரான நிலை நல்லிணக்கம் தொடர்பாக மக்களிடையே முரண்பட்ட கருத்துக்கள் இருந்தாலும், மத தலைவர்கள் இது தொடர்பான நிலைப்பாட்டினை கருத்திற்கொ-ள்ளாமல் இருப்பது கவலைக்குரிய விடயமே. மக்களுக்கு தற்போதைய நல்லிணக்கப் பணிகளும், செயற்பாடுகளும் வெறுமனே ஒரு நிகழ்வாகத்தான் இருக்கின்றதே அன்றி, ஒரு உள்ளார்ந்த மாற்றத்தினை கொண்டுவரவில்லை. போருக்கு பின்னரான நம் நாட்டின் நல்லிணக்க பணிகள் வெற்றிப் பெற்றனவா? என்பது கேள்விக்குறியே.

(இக்கருத்து தொடர்பான மேலதிக விளக்கங்கள் யாவும் அருட்தந்தையால் புதிதாக வெளியிடப்பட்ட புத்தகத்தில் தெளிவாக இருக்கின்றது. இன்னும் நல்லிணக்கம் தொடர்பான ஆழமான கருத்துக்களையும் விளக்கங்களையும் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.)

**சகோ. டிலோய்ட்சன் பெர்னாண்டோ**
**தேசிய குருமடம் – கண்டி**







அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்

## திருமண சேவைகள்



- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**


| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.


**தொடர்புகொள்ளுங்கள்**
இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை,
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com

பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

**வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்**




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்